# நீறுபூத்த நெருப்பு

-நாடகங்கள்-

"ஆரையூர் இளவல்"



அன்பு வெளியீடு

# நீறு பூத்த நெருப்பு

## "ஆரையூர் இளவல்"
## நாடகங்கள்

"அன்பு" வெளியீடு
ஆரையம்பதி:

## பதிவுத் தரவுகள்


தலைப்பு : ''நீறு பூத்த நெருப்பு''

வகை : நாடகம்.

ஆசிரியர் : ''ஆரையூர் இளவல்'' க. செல்லத்தம்பி, ''தவபதி'', ஆரையம்பதி-01.

அச்சுப் பதிப்பு : புனித வளனார் கத்தோலிக்க அச்சகம், இல. 10, வழக்கறிஞர் தெரு, மட்டக்களப்பு.

வெளியீடு : அன்பு வெளியீடு, ஆரையம்பதி.

பிரசுரத் திகதி : 27-03-1996 (முதற் பதிப்பு)

அட்டை அமைப்பு: டாக்டர் எஸ். வேலாயுதபிள்ளை.

புரூப் திருத்தம் : செல்வி செ. தமிழ்ச்செல்வி.

பக்கம் : 130.

விலை : ரூபா 75/-



உரிமை : ஆசிரியருக்கே.

# சமர்ப்பணம்



திருமதி குஞ்சிப்பிள்ளை (கண்ணம்மை) கந்தப்பன்
(1913-08-29 — 1995-04-19)

துன்பமெனும் பொதி சுமந்த வாழ்க்கைதன்னில்
துயரமது எமை வந்து சேராவண்ணம்
என்பு தசை தோல் நரம்பு எல்லா மெங்கள்
இன்னுயிரைக் காப்பதற்கே தியாகமாக்கி
இன்பமதைக் கண்ட எங்கள் இதயத் தெய்வம்
எமையீன்ற தாய் பாத பங்கயத்தில்
அன்பு நிறை நன்றிக்கு இந்த நூலைக்
கனிவன்பின் காணிக்கை ஆக்கியுள்ளோம்.

மட்டுநகர் இளங்கதிர் நாடக மன்றம் அளிக்கும்

"ஆரையூர் இளவலின்"

# "வினை தீர்க்கும் விநாயகன்"

(புராண நாடகம்)

காலம் : *13-02-1968 – மாலை.*

இடம் : மஞ்சந்தொடுவாய் - நாவற்குடா
ஆலடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றல்.

தலைமை: திரு. க. செல்லத்தம்பி அவர்கள்
*(கிராம சேவையாளர்)*

நடிகர்கள்:

| | |
|---|---|
| செ. குலசேகரன் | த. தவராசா |
| கு. சாந்தலிங்கம் | இ. நிந்தியானந்தன் |
| த. சாந்தலிங்கம் | கி. தங்கவேல் |
| செ. உருத்திரமூர்த்தி | சி. ஜீவகாந்தன் |
| சு. ஜீவகன் | த. குணரெட்ணம் |
| சா. நற்குணதாஸ் | சி. திரவியநாதன் |
| கு. கனகசிங்கம் | ந. மோகனதாஸ் |
| ந. ஹரிதாஸ் | |

நடிகைகள்:

மா. ரதி, க. புவியோகராணி.

ஒப்பனை : பூ. தம்பிராசா குழுவினர்.

உடை : அ. சிவகுரு, வ. தம்பிராசா,
வி. செல்லத்துரை.

காட்சியமைப்பு:

சா. சிவபாக்கியராசா, சா. விஜயராசா,
கா. கனகலிங்கம்.

ஒலி, ஒளி: ''சுந்தரம்ஸ்''

இசை : ஜெயம் இசைக் குழுவினர்.

அரங்க நிர்வாகம்:

''அன்புமணி'', சி. பாலசுப்பிரமணியம்,

ரி. கென்றிக்.

தயாரிப்பு: மாசி மகத் திருவிழாச் சபையினர்.

கதை, வசனம், நெறியாள்கை :

''ஆரையூர் இளவல்''

—*—

## குறிப்பு :

பத்து வயதிற்குட்பட்ட பாலர்கள் பாத்திரமேற்று நடித்துப் பாராட்டுப்பெற்ற பக்த விக்ந விநாயகர் சரிதம் ''வினை தீர்க்கும் விநாயகன்'' நாடகம். இந்நாடகம் கிழக்கிலங்கையில் பல இடங்களில் மேடையேறிப் பாராட்டுப் பெற்றுள்ளது.

முன்னாள் வித்தியாலய அதிபரும், கல்வி அதிகாரியும், உதவி அரசாங்க அதிபருமான உயர்திரு வே. கணபதிப் பிள்ளை அவர்களின் தயாரிப்பிலும், 27-06-1973ல் மட்/ கன்னன்குடா மகா வித்தியாலய மாணவ மாணவியரின் நடிப்பில் மேடையேறிப் பாராட்டுப்பெற்றது.

# RAMAKRISHNA MISSION

(CEYLON BRANCH)

**ASHRAMA & CHILDREN'S HOMES,**

RAMAKRISHNAPURAM, BATTICALOA. SRI LANKA.

Phone: 065 - 2752.


5 - 3 - 1996.

## ஆசிச்செய்தி

'ஆரையூர் இளவல்' அவர்களின் படைப்பாகிய நாடகங்களின் தொகுப்பு நூல்வடிவம் பெறுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி. பல தடவைகள் மேடையேறி அனேகரின் பாராட்டைப் பெற்ற "நீறு பூத்த நெருப்பு" என்னும் நாடகத்தின் பெயரையே இந்நூல் பெறுகிறது.

புராணம், இதிகாசம், சமூகம் ஆகிய ஊற்றுக்களிலிருந்து உருவாகிய இந்நாடகங்கள் உயர் மனித விழுமியங்களைப் பிரதிபலிக்கும் அம்சங்களைக் கொண்டது. நாடகக் கலையானது மக்களுக்கு அறிவூட்டும் மிகச் சிறந்ததொரு சாதனமாகும்.

எமது சமுதாயம் அறநெறிகளிலிருந்து பிறழாது ஆன்றோர் வழி நடக்கப் புராண இதிகாசங்கள் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்துவருகின்றது. பல சான்றோர்களையும் உருவாக்கியிருக்கிறது.

தொலைக்காட்சி, சினிமா முதலிய நவீன சாதனங்கள் எவ்வளவு பிரபல்லியமானபோதிலும் மேடை நாடகங்களுக்கு எப்போதுமே மக்கள் மத்தியில் பெரும் வரவேற்புண்டு.

ஆலயங்கள் மற்றும் பொது மேடைகள்தோறும் தமது நாடகங்கள்மூலம் மக்கள் மத்தியில் நல்ல கருத்துக்களை விதைத்த பெருமைக்குரியவர் "ஆரையூர் இளவல்" அவர்கள். தனனுடைய படைப்புக்கள் அடுததுவரும் சந்ததிக்குச் சொந்தமாகவேண்டும் என்னும் ஆர்வம் நிறைந்தவர். அதன் பயனாக வெளிவருவதே 'நீறு பூத்த நெருப்பு' என்னும் நாடகங்களின் தொகுப்புநூல். இந்நூலுக்கு அனைவரினதும் ஆதரவும் வரவேற்பும் கிடைக்கும என்பதில் சந்தேகமில்லை. எல்லாம் வல்ல இறைவன் ஆசிரியருக்கு நீண்ட ஆயுளையும், நாடகத்துறைக்கு மேலும் பணியாற்ற ஆர்வத்தையும் அளிக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

இறைபணியில்

சுவாமி அஜராத்மானந்தா.

# முன்னுரை

நாடகம் பார்ப்பதற்கு முன்னர் நாடகத்தைப் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் சிலவற்றைப் பயன் கருதி இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

''நாடகத்தால் உன்னடியார்போல் நடித்து...'' என்று மாணிக்கவாசகப் பெருமான் ஒரு தொடர் அருளியிருக்கிறார். இதில் ''நாடகம்'' என்னும் சொல் ''விளையாட்டு'' என்னும் பொருளில் வந்திருக்கின்றது. ''நடித்தல்'' என்பதே அதன் செயல் என்பதும் அத்தொடரிலிருந்தே தெரிகின்றது.

நடிப்பில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று கருத்துக்களை நடித்தல், இன்னொன்று கதைகளை நடித்தல், கருத்துக்களை நடித்துக்காட்டுவதற்கு ''நாட்டியம்'' என்றும், கதைகளை நடித்துக்காட்டுவதற்கு ''நாடகம்'' என்றும் பெயர் சொல்வதுண்டு. சங்க காலத்தில் இவ்விரண்டுமே ''கூத்து'' என்னும் பெயராலும் வழங்கிவந்தது.

நாடகத்தில் நடிப்புச் சுவையோடு கதைச் சுவையும் அடங்கியிருப்பதால் எல்லார்க்கும் அது மிகுந்த இன்பத்தைத் தரும். ஆயினும அந்நாடகத்திலும் நடித்தலே உயிர் போன்றது. நடிப்பை நாடகத்திலிருந்து பிரித்துவிட்டால் அப்போது அதற்கு ''நாடகம்'' என்னும் பெயரே பொருந்தாமற் போய் விடும். அதலால் நாடகத்தைப்பற்றிப் பேசுகின்ற பழைய தமிழ் நூல்கள் முதன்மையாக நடிப்பைப்பற்றியே மிகுதியாகப் பேசியிருக்கின்றன.

நாடகக்கலையில் வீரம், அச்சம், இழிவு, வியப்பு, இன்பம், துன்பம், நகை, நடுவுநிலை, வெகுளி என்னும் ஒன்பது சுவைகள் நடிப்புக்குரியவை. நடிப்புகளை இன்னும் விரிவாகப் பாகுபடுத்தும்போது அவை இருபத்துநான்கு வகையாகப் பகுத்துக்காட்டப்படுகின்றன. அவற்றில் சோம்பலுக்குரிய நடிப்பு, வெட்கத்துக்குரிய நடிப்பு, பெருமைக்குரிய நடிப்பு, மழையில் நனைவதற்குரிய நடிப்பு, பனியில் தலைப்படுவதற்குரிய நடிப்பு முதலியனவெல்லாம் கொள்ளப்படும். இவைகளுக்கு இலக்கணம் இன்னின்னவென்பதும், அவைகூறும் நூற்பாக்கள் இன்னின்னவென்பதும் சிலப்பதிகார உரையில் வந்திருக்கின்றன.

வெட்கமுற்றதுபோல் நடிக்கவேண்டுமானால் தலைகுனிதலும், மறைவான செய்கைக் குறியும், முகவாட்டமும், உடம்பு கோணலும், மழுங்கிய ஒளியும், கீழ்க்கண் பார்வையும் கொண்டு நடிக்கவேண்டும் என்பது இலக்கணம். இதற்கு நூற்பா,

"நாண முற்றோன் அபிநயம் நாடின்
இறைஞ்சிய தலையும், மறைந்த செய்கையும்
வாடிய முகமும் கோடிய உடம்பும்
கெட்ட ஒளியும் கீழ்க்கண் நோக்கமும்
ஒட்டின ரென்ப உணர்ந்திசி னோரே"

என்பது. இங்ஙனமே ஒவ்வொன்றுக்கும் இலக்கணங்களும் நூற்பாக்களும் உண்டு.

ஆனால், எல்லாக் கலைகட்கும் தமிழில் நூல்கள் மறைந்து போனதுபோல் இந்நாடகக்கலை நூல்களும் நெடுங்காலங்களுக்கு முன்னேயே அழிந்துபோயின உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் தங்காலத்துக்கு முன்னேயே இந்நூல்கள் அழிந்துபோனமையை நினைந்து உள்ளம் உருகியிருக்கின்றார். நாடகத் தமிழைப்பற்றிய குறிப்புகள் சிலப்பதிகாரத்திலும். அதன் உரையிலும் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் "மதங்க சூளாமணி"யிலும் இப்போது சிலவே நமக்குக் கிடைக்கின்றன. அவற்றைக்கொண்டு பார்த்தாலும் சங்ககாலத்தில் இந்நாடகக் கலை எவ்வளவோ விரிவாக ஆராயப்பட்டு வந்ததென்பது நன்றாகப் புலனாகின்றது.

தமிழ் மக்கள் இயற்கையைக் கூர்ந்து அறியும் இயல்புள்ளவர்கள். அதனால் அவர்கள் கலையுணர்ச்சி மிக்கவரானார்கள். தமிழ் மக்களின் இத்தனிச் சிறப்பினாலேயே நாடகக்கலை வரவர இவ்வளவு விரிவுக்கு உயர்ந்தோங்கலாயிற்று.

நாடகக்கலையைத் தமிழ் மக்கள் பிறநாட்டவரிடமிருந்து கற்றுக்கொண்டவரல்லர். இவர்கள் தம் அறிவுணர்வின் பழக்கங்களினாலேயே இதனைக் கண்டுணர்ந்து வளர்த்து இன்பமார்ந்தனர். இறைவனே இவர்களுக்குக் கூத்தப் பெருமானாக விளங்குகின்றார்.

பேசத்தெரியாத முற்காலத்திலேயே இந்நடிப்புக்கல்வி துவங்கினமையால் இதுவே முதலில் தோன்றிய கல்வியாக இருக்கின்றது. நாடகக்கலை வெறும் பொழுதுபோக்குச் சாதனம் அல்ல. அது பார்ப்போரைப் பரவசப்படுத்தி உள்ளத்தைப் பக்குவப்படுத்திப் பரிமளிக்கச் செய்கின்ற ஓர் தலை

சிறந்த கலாசார ஊடகமாகும். இவ்வூடகத்தின்மூலம் உருவாகிய உலகம் போற்றும் உத்தமர்கள் சிலரை உதாரணத்துக்குக் கூறலாம்.

இத்தகைய கலாசார விழுமியங்கள் தமிழ் மக்களின் உயிரோடும் உதிரத்தோடும் உணர்வுகளோடும் ஒன்றிக கலந்து பாரம்பரியமாக அவர்கள் பாதுகாத்துப் போற்றிவருகின்ற புனிதமான கலாசாரப் பொக்கிஷங்களாகும். ஆகவே அதன் புனிதத்தன்மையை நாடகப் பாத்திரமேற்று நடிக்கும் ஒவ்வொருவரும் பாதுகாத்தல் மிக முக்கியமானதாகும்.

முக்கனியின் சாறும், சர்க்கரையும், கற்கண்டும், நறுந்தேனும், பசும்பாலும், தெங்கின் தனிப்பாலும், பருப்பும், இனித்த நறுநெய்யும் கலந்து இளஞ்சூட்டில் இறக்கி எடுத்த சுவைக்கட்டியிலும் இனிமை பயப்பன இயல், இசை, நடிப்பு, ஆகிய மூன்று சுவைகளும் கலந்த நாடகக்கலை.

அடியேனின் பாலப்பருவத்திலிருந்தே மிகவும் பிடித்தமான கலையாக அடியேனைக் கவர்ந்தது இந்நாடகக்கலை. அதனால் பாலர்வகுப்புத் தொடக்கம் பாடசாலை நிகழ்ச்சிகளில் நடித்தேன். ஆரையம்பதி ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க வித்தியாலயத்தில் 5ம் வகுப்புப் படிக்கும்போது "உத்தமன் ராமன்" எனும் இராம நாடகத்தில் சீதாதேவியாக வேடந்தாங்கி நடித்தேன். அவ்வேளை முத்தமிழ் வித்தகர் அருட்திரு. விபுலாநந்த அடிகளாரின் நல்லாசீர் அடியேனுக்குக் கிடைத்தது.

அடிகளாரின் நல்லாசீரைத் தொடர்ந்து என்னுள்ளத்தில் ஏற்பட்ட உந்துசக்தியால் சதா இக்கலையைப்பற்றிச் சிந்திப்பதற்கும், நடிப்பதற்கும், எழுதுவதற்கும் நெறிப்படுத்துவதற்கும் முயற்சிசெய்தேன. அடியேனின் ஆசிரியர்களான மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் அமரர் பண்டிதர் செல்லப்பா பூபாலப்பிள்ளை ஐயா அவர்களும், மட்டக்களப்புக் கோட்டமுனை றோ. க. சிரேஷ்ட வித்தியாலய அதிபர் அமரர் இராசையா சதாசிவம் ஐயா அவர்களும் இத்துறையில் என்னை ஊக்குவித்து உற்சாகப்படுத்தினர். இதனால் 1950ம் ஆண்டு தொடக்கம் இலக்கியம், இதிகாசம், புராணம், வரலாறு, சமூகம், நகைச்சுவை ஆகிய பிரிவுகளில் பல நாடகங்களை எழுதினேன். தற்போதும் எழுதிக்கொண்டிருக்கின்றேன். இதுவரை 66 நாடகங்கள் எழுதியுள்ளேன்.

இந்நாடகங்களில் பெரும்பாலானவை 1962ம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பு இளங்கதிர் நாடகமன்றம், கல்லடி

உப்போடை வளர்மதி இலக்கிய மன்றம். மஞ்சந்தொடுவாய் இந்து இளைஞர் மன்றம், ஆரையம்பதி இந்துசமய இலக்கிய அபிவிருத்திச் சங்கம், ஆரை. ஜோதி கலைக்கழகம், ஆரை. இளைஞர் நாடகமன்றம், ஆரை. கவின்கலை மன்றம், ஆரை. நெசவுப்பயிற்சிக் கல்லூரி முத்தமிழ் மன்றம் போன்ற பல கலை வளர்ச்சிக் கழகங்கள்மூலம் கிழக்கிலங்கையில் பலபாகங்களிலும், பல கிராமங்களிலும் 1008 தடவைகளுக்கும்மேல் மேடையேற்றப்பட்டுப் பல பரிசில்களும், பாராட்டுக்களும் பெற்றுள்ளன. தினபதி, தினகரன், வீரகேசரி, முதலிய பத்திரிகைகளும் பாராட்டியுள்ளன,

''நாடகம்'' எழுதுவதும், தயாரிப்பதும், மேடையேற்றுவதும் சுலபமான காரியமல்ல என்பது இத்துறையில் ஈடுபட்டிருக்கும் அன்பர்களுக்கு நன்கு விளங்கும். உள்ளதை, நல்லதை எவருடைய மனதும் புண்படாவண்ணம் அன்பாகவும், பண்பாகவும் மக்களுக்குச் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லும்போது சொல்லுகின்ற ஒவ்வொரு கருத்துக்களும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பாராட்டுப்பெறுகின்றன. இதனாலேயே எமது நாடகங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தன. இருபத்தைந்து வருடங்கள் கடந்த பின்னரும் கூட எமது நாடகங்களை மக்கள் மறக்கவில்லை. அவை அவர்கள் மனதில் பசுமையாகப் பதிந்திருக்கின்றன. இன்றும் அந்த நாடகங்களைப்பற்றிப் பாராட்டிப்பேசி ''அதைப் போன்ற நாடகங்களை மீண்டும் மேடையேற்றுங்கள் பார்க்க ஆசையாக இருக்கின்றது'' என்று எம்மையும் எமது கலைஞர்களையும் அன்போடும், வாஞ்சையோடும் கேட்டுவருகின்றனர்.

அந்த நல்ல உள்ளங்களுக்கு, அன்பு ரசிகர்களுக்கு ஓரளவு மகிழ்ச்சியைக் கொடுப்பதற்காகவே எமது நாடகங்களில் மூன்று நாடகங்கள் இங்கு நூல்வடிவம் பெறுவதற்கு இறையருள் கூட்டியிருக்கின்றது.

எமது நாடகங்கள் பலலோராலும் பாராட்டுப் பெறும் வண்ணம் கடுமையாக உழைத்த அனைத்து நடிகர்களுக்கும், நடிகைகளுக்கும், மேடைக் கலையமைப்பாளர்களுக்கும், உதவியாளர்களுக்கும், உடையமைப்பாளர்களுக்கும், ஒப்பனைக் கலைஞர்களுக்கும், ஓவியக் கலைஞர்களுக்கும், இசையமைப்பாளர்களுக்கும், பின்னணி பாடியவர்களுக்கும், இசைக் கலைஞர்களுக்கும, நடனமணிகளுக்கும், ஒலி, ஒளி அமைப்பாளர்களுக்கும, அரங்க அமைப்பாளர்களுக்கும, ஆலோசனை வழங்கி ஊக்குவித்த மதிப்புக்குரிய பெரியோர்களுக்கும், கௌரவ பாத்திரமேற்று நடித்து எம்மை ஊக்குவித்த கற்றறிந்த பெரியோர்களுக்கும், நல்லாசீர் நல்கி ஊக்குவித்த

அருட்திரு. சுவாமி ஜீவனானந்த அடிகளார் அவர்களுக்கும், அருட்திரு. சுவாமி எவ். எக்ஸ். மேயர், எஸ். ஜே. அடிகளார் அவர்களுக்கும், அருட்திரு. சுவாமி றேமன் அரசரெத்தினம் அடிகளார் அவர்களுக்கும், அரச உயரதிகாரிகளுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் பார்த்து மகிழ்ந்து பாராட்டிய பத்திரிகையாளர்களுக்கும், அனைத்து ரசிக அன்பு நல்நெஞ்சங்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் அடியேன் சிரந்தாழ்த்திக் கரங் கூப்பி வணங்கி எமது உள்ளங்கனிந்த நன்றியறிதலை உருக்கமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எம்முடன் சேர்ந்து நாடகக்கலை வளர்ச்சிக்காக இரவு பகலாக உழைத்த இளங்குருத்துக்களான அமரர் செல்வன் தாமோதரம்பிள்ளை இராஜேந்திரன், கல்லடி – உப்போடை, அமரர் செல்வன் கதிர்காமத்தம்பி கணபதிப்பிள்ளை, மஞ்சந்தொடுவாய் ஆகிய இருவரையும் இங்கு நினைவு கூருகின்றேன்.

இந்தத் தமிழ்ப்பணியை – ஆன்மீகப்பணியை – நூற்பணியைச் செய்வதற்கு அடியேனை உற்சாகப்படுத்திய எனது அன்புமகன் இளந்திருமாறனுக்கும், அன்பு மனைவிக்கும், பிள்ளைகளுக்கும், சொந்தங்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

இந்த அழகிய நூலின் தட்டச்சுப் பிரதிகளை மகிழ்வுடன் பெற்றுப்பார்த்து நல்லாசீர் வழங்கி வாழ்த்துகின்ற கிழக்கிலங்கை ஸ்ரீ இராமகிருஷ்ண சங்க உபதலைவர் அருட்திரு. சுவாமி அஜராத்மானந்தாஜீ அடிகளார் அவர்களுக்கும் நன்றி கூறி வணங்குகின்றேன். எமது நாடக முயற்சிகளை ஆரம்பத்திலிருந்தே ஊக்குவித்து வருபவரும் இந்நூலுக்கு வெளியீட்டுரை வழங்கிச் சிறப்பித்துள்ளவருமான தமிழ்மணி, அன்புமணி இரா. நாகலிங்கம் அவர்களுக்கும், கலாபூஷண் கலைமணி மு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், அழகிய அட்டைப்படம் வரைந்துதவிய கலைஞர் வைத்திய கலாநிதி எஸ். வேலாயுதபிள்ளை அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு உதவிய புனித வளனார் அச்சக முகாமையாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் இந்நாடகங்களைப் படித்து, நடித்து, மேடையேற்றி மகிழவிருக்கும் கலாரசிகர்கள் அனைவருக்கும் அடியேனின் அன்புமறவா நன்றி என்றென்றும் உரித்தாகுக.

இச்சிறு நூலைக், காலமெல்லாம் எமக்காக வாழ்ந்து எம்மை ஆளாக்கிய எமது அன்புத் தெய்வமாகிய அன்னையின் பொற்பாத பங்கஜங்களில் அன்புக் காணிக்கையாகச் சமர்ப்பித்து வணங்குகின்றேன்.

நன்றி.

அன்பன்
"ஆரையூர் இளவல்"

"தவபதி"
ஆரையம்பதி - 1,
27-03-96.

# வெளியீட்டுரை

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ், நாடகம் என்ற கலைவடிவம் முத்தமிழும் சங்கமிக்கும் ஒரு முழுமையான கலையாகும். கலைகளின் முன்னோடியாகவும் பின்னோடியாகவும் அது அமைவதனால், எக்காலத்தும் செல்வாக்கு மிக்க ஒரு கலையாக அது திகழ்கிறது.

சங்க காலத்துக்குமுன்பே தமிழில் நாடகம் இருந்தது என்பதற்குச் சான்றாக, நாடக இலக்கண நூல்கள் பலவற்றின் பெயர்கள் இன்று நமக்குக் கிடைக்கின்றன. நாடகமேடை அமைப்பு, திரை அமைப்பு, நடிப்பு முறைமைகள் பற்றியெல்லாம் இந்நூல்களில் விஸ்தாரமான விபரங்கள் உள்ளன. இவற்றை சுவாமி விபுலாநந்தர் தனது "மதங்க சூளாமணி" என்னும் நூலில் விபரித்துள்ளார்; விமர்சித்துள்ளார்.

நாடகத்துக்கு ஒரு நீண்டவரலாறு இருந்தபோதும் பம்மல் சம்பந்த முதலியார் காலத்து நாடகவார்ப்புகளே இன்றும் செல்வாக்குப் பெற்றுள்ளன. சினிமாவின் வரவினால் இந் நாடக வடிவம் மேலும் செம்மைபெற்று, மக்களை இலகுவில் ஈர்க்கும் மக்கள் கலையாக விளங்குகின்றது (பி.எஸ். ராமையாவின் நாடகங்கள் உதாரணம்).

இக்காலத்தில் நாடகவடிவத்தில் பல பரிசோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை முழுக்கமுழுக்க பிரதிபண்ணும் மனோபாவத்தால் ஏற்பட்டவையே. மேற்கு நாடுகளில் அல்லது சீனா, ஜப்பான் மேடைகளில், அவர்களுடைய கலாசார பாணியில் அமைந்த இந்த நாடகங்கள் சிங்கள நாடகமேடையில் புகுந்து. அங்கிருந்து தமிழ் நாடகமேடைக்கு வந்துசேர்ந்தன. மேல்நாடுகளிலிருந்து இறக்குமதியானவை எல்லாமே "ஓசத்தி"யானவை என்ற மனோபாவம் நமது புத்திஜீவிகள் மத்தியில் இருப்பதால் அவை இங்கு சுலபமாக இடம்பிடித்து விடுகின்றன. அதுகூடப் பரவாயில்லை. ஆனால் "ஒண்டவந்தபிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்தியது" என்பது போல அத்தகைய நாடகவடிவங்களில் தமது "திறமை"யை பரிசோதனை செய்யும், நாடகக்காரர்கள், அவையே சிறந்த நாடகங்கள் என்றும், மக்களைக்கவர்ந்த "வசன நாடகங்கள்" பிற்போக்கானவை என்றும், எழுதியும் பேசியும் வருகின்றனர்,

மக்களுக்கு விளங்காத இந்த 'உயர்கர' நாடகங்களை மக்கள் நிராகரித்துவிட்டபோதும், புத்திஜீவிகளின் போற்று தலில் இருந்து அவை இன்னும் மறையவில்லை.

இத்தகைய பின்னணியில், மக்கள் நாடகமாகிய வசன நாடகங்களை, அதிக அளவில் எழுதித் தயாரித்து, மேடை யேற்றி, மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களையும், பல நிறுவனங்களின் பரிசுகளையும் பெற்ற ஆரையூர் இளவலின் நாடகங்கள் நூல்வடிவில் வருகின்றன.

இந்நாடகங்கள், சுமார், 20, 30 ஆண்டுகளுக்குமுன் பல தடவைகள் மேடையேற்றப்பட்டவை. இப்போதுதான் நூல் வடிவில் வெளிவருகின்றன. படிப்பதற்கும், நடிப்பதற்கும் ஏற்றவகையில் எழுதப்பட்ட இந்நாடகங்கள் இன்றும் படிப்ப தற்குச் சுவையாகவே உள்ளன. மக்களால் இன்றும் விருப்பப் படுகின்றன.

இந்நாடகங்களின் சிறப்பம்சங்கள் பல சுவையான கதைப் பின்னல், சுவாரஸ்யமான உரையாடல்கள், வளமான வார்ப்பு, செழுமையான சிந்தனைகள் இத்தகைய சிறப்பம் சங்களினால் பலதடவைகள் இந்நாடகங்கள் மேடையேற்றப் பட்டுள்ளன.

இந்நாடகங்கள் மேடையேற்றப்பட்ட காலகட்டத்தை எண்ணிப்பார்க்கிறேன்.

திரளான சனக்கூட்டம்; மண்டபத்திலேயே டிக்கட் விற் பனை; டிக்கற் இல்லாமல் திரும்பிய ரசிகர்கள்; திரும்பாமற் காத்திருந்த ரசிகர்களுக்காக இன்னுமொரு காட்சி; நாடகம் பார்த்த ரசிகர்களின் மெய்மறந்த விமர்சனம் - இவற்றை அசைபோடுவதே சுகமான அனுபவமாகிறது.

ஆரையூர் இளவலின் நாடகங்கள் மேடையேறும்போது பெரிய காட்சி ஜோடனைகள் இடம்பெறுவது வழக்கம். குறிப்பாக புராண, இதிகாச நாடகங்களில் இவை இடம் பெறும். ஆனால் அவற்றினால் மட்டும் நாடகங்கள் பாராட்டுப் பெறுவதில்லை. விறுவிறுப்பான நாடக அமைப்பினாலேயே அவை பாராட்டுப்பெற்றன. அதற்குச் சான்றாக, அவரது சமூக நாடகங்கள் பிரமாதமான காட்சி ஜோடனைகள் எது வும் இல்லாமலே பாராட்டுப்பெற்றுள்ளதைக் குறிப்பிடலாம்.

சுமார் 60 நாடகங்கள்வரை எழுதித் தயாரித்து மேடையேற்றியுள்ள ஆரையூர் இளவல், பல நாடகங்களில் நடித்தும் உள்ளார். பல உதவியாளர்கள் இருந்தாலும், வசன உச்சரிப்பு, ஒப்பனை, ஆடையணி, காட்சி அமைப்பு முதலிய சகல அம்சங்களிலும்தாமே நேரடியான கவனம் செலுத்தி திருத்தங்களைக் கூறுவார். அவரது நெறியாள்கை அப்படி.

இவரது பல நாடகங்கள் உதவிநிதிக் காட்சிகளாக அரங்கேறியுள்ளன; பல சந்தர்ப்பங்களில் ஆலய உற்சவங்களுக்காக ஆலய நிர்வாகிகளின் ''நெருக்கு'' வாரத்தாலும் நாடகங்கள் எழுதப்பட்டன.

எவ்வாறாயினும், உருவான நாடகங்கள் எதுவும் சோடைபோனதில்லை. ''மண்சுமந்த மகேசன்'' (''மண்சுமந்த மேனியர் அல்ல - அதற்குமுன்பே எழுதப்பட்ட நாடகம்) பின்னர் வீடியோப்படமாக ஆரையம்பதியில் தயாரிக்கப்பட்டது. கிழக்கிலங்கையில் தயாரிக்கப்பட்ட முதல் வீடியோப் படம் இது எனக் கொள்ளலாம். இது மாணிக்கவாசக சுவாமிகளின் கதையைக்கொண்டது.

தெய்வங்கள் வாழும் பூமி (சமூகம்), குடும்பம் ஒரு கோயில் (சமூகம்), மானம் காத்த மாவீரன் (இதிகாசம்), வெற்றித் திருமகன் (வரலாறு), நீறுபூத்த நெருப்பு (இதிகாசம்), கண்கள் செய்த குற்றம் (சமூகம்), ஆனந்தக்கூத்தன் (சமூகம்), வினைதீர்க்கும் விநாயகன் (புராணம்), தர்மம்காத்த தலைவன் (வரலாறு) எனப் புகழ்பூத்த பல நாடகங்களுள் மூன்று மட்டுமே இத்தொகுதியில் இடம்பெறுகின்றன. இதைத் தொடர்ந்து ஏனைய நாடகங்களும் நூல்வடிவில் வெளிவரலாம். நாடகம் என்பது இன்று ஆண்டுக்கொருமுறை இடம்பெறும் ''தமிழ்த்தின விழாப் போட்டிகள்'', ''சாகித்திவிழாப் போட்டிகள்'' நடைபெறும் காலகட்டத்தில் மட்டும் நினைவு கூரப்படும் ஒரு விடயமாகிவிட்டது.

இப்போட்டிகள் அறிவிக்கப்பட்டதும். ''நாடகம் நாடகம்'' என நாடகப்பிரதி தேடி பதறித்திரிவார்கள். அவசர அவசரமாக ஓரங்க நாடகங்கள் எழுதுவார்கள். ஒழுங்கான நெறியாள்கை இல்லாமல் அவசரத் தயாரிப்பாக நாடகங்களை மேடையேற்றுவார்கள்.

நாடகங்கள் நூல்வடிவில் இருந்தால், இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவை பெரிதும் பயன்படும். எனவே இது போன்ற நாடக நூல்கள் இன்னும் அதிக அளவில் வெளிவர

வேண்டும். இதில் சுவைஞர்களின் பங்களிப்பே முக்கியமானது. அவர்கள் இதுபோன்ற நாடக நூல்களுக்குக் கொடுக்கும் ஆதரவே, பிறநாடக நூல்கள் வெளிவருவதற்கு வழிவகுக்கும்.

''விமர்சனம்'' என்ற பெயரில் இவ்வாறான ஆக்கபூர்வமான முயற்சிகளை முளையிலேயே கிள்ளிவிடும் இலக்கியவாதிகள் ஒரு சிலர் இருப்பதை நாம் அறிவோம். அவர்களைப் பற்றி நாம் அலட்டிக்கொள்ள வேண்டியதேயில்லை. காரணம், பாராட்டும், ஊக்குவிப்புமே எந்த ஒரு விடயத்திலும் வளர்ச்சிக்கு வகைசெய்யும் என்பது சர்வதேச உண்மை. மட்டந்தட்டுவது என்றுமே வளர்ச்சிக்கு வகை செய்ததில்லை என்பது வரலாறு. அதை நாம் நிதர்சனமாகக் காண்கிறோம்.

நாம் நமது இலக்கியப் பயணத்தைத் தொடர்வோம். காலம் ஒன்றே ஆக்க இலக்கியங்களின் தரத்தை நிர்ணயம் செய்யும் விமர்சனம் அல்ல என்பது வரலாறு.

இரா. நாகலிங்கம்,
(அன்புமணி)



# அரங்கில் மலரும் அழகுக் கோலங்கள்


● புராணம்

1. வினை தீர்க்கும் விநாயகன் ... 1

● இதிகாசம்

2. நீறு பூத்த நெருப்பு ... 21

● சமூகம்

3. ஆனந்தக் கூத்தன் ... 57

உ



# வினை தீர்க்கும் விநாயகன்

(புராண நாடகம்)

"ஆரையூர் இளவல்"

ஆரம்பக் காட்சி, திரை திறப்பதற்கு முன்னர்)

கோஷ்டி கானம் :

நாம் விரும்பி இப்புவிக்கு வந்தோமில்லை
நன்மையும் தீமையும் நமது கையில் இல்லை
நன்மையே செய்யும் தெய்வ சக்தியாலே
நன்மனமே சாந்தி கொள்வாய் பக்தியாலே.

— திரை விலகுகின்றது —

## 24-09-1969 "தினபதி" பத்திரிகையின் முன்பக்கச் செய்தி



மட்டக்களப்புப் பிரதேச கலாமன்றத்தினால் நடாத்தப்பட்ட மன்றங்களுக்கான நாடகப் போட்டியில், மட்டுநகர் இளங்கதிர் நாடக மன்றத்தினால் தயாரித்தளிக்கப்பட்ட ''ஆரையூர் இளவலின்'' ''சிங்களத்துச் சிங்காரி'' எனும் வரலாற்று நாடகம் முதலாவது இடத்தைப் பெற்றது. மட்டுநகர் இளங்கதிர் நாடக மன்றத்தின் காப்பாளரான வண. எவ். எக்ஸ். மேயர், தொழில் அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மது அவர்களிடமிருந்து சான்றிதழைப் பெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம். தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கமும் படத்தில் காணப் படுகிறார்.

## 24-09-1969 "இளைஞர்" பத்திரிகையின் முகப்புச் செய்தி



[illegible]

காட்சி : 01.

இடம் : மரகதபுரி, கயமுகாசூரன் சபாமண்டபம்.

பாத்திரங்கள் : கயமுகாசூரன், மந்திரி, தளபதி, சேவகர் 2, சாமரை வீசும் பெண்கள் இருவர், ஆலோசகர்கள் நால்வர்.

சேவகன் 1: (கட்டியங் கூறல்) மகா மகா மகா வல்லமை மிக்க ராஜாதிராஜ ராஜகெம்பீர ராஜமாமன்ன கயமுகாசூர மாமன்னர் வருகிறார், வருகிறார்.

(சபையோர் அனைவரும் எழுந்து நிற்கின்றனர். முன்னால் சேவகர் ஒருவர் செங்கோல் ஏந்திவர அவரைத் தொடர்ந்து தளபதி கெம்பீரமாக வர, மன்னன் கயமுகசூரனும் அவரைத்தொடர்ந்து அமைச்சரும் வருகின்றனர். மன்னர் தமது சிம்மாசனத்தில் அமர்ந்ததும், சிம்மாசனத்தின் பின்னால் நின்று பெண்கள் இருவர் சாமரை வீசுகின்றனர். அமைச்சரும், தளபதியும் தங்கள் ஆசனத்தில் அமர, ஆலோசகர்களும் தத்தமது ஆசனங்களில் அமர்ந்துகொள்கின்றனர்.)

கயமுகாசூரன்: அமைச்சரே! நமது ஆட்சியைப்பற்றி நாட்டில் என்ன பேசிக்கொள்கிறார்கள்.

அமைச்சர்: (எழுந்துநின்று அடக்கத்துடன்) மன்னவர்கோவே! எமது நாட்டு மக்கள் யாவரும் மகிழ்ச்சியாகவே இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் தங்களைப் போற்றித் துதிபாடிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால்... ஆனால்...

கயமுகாசூரன்: ஆனால்...?

அமைச்சர்: தேவர்களும், முனிவர்களுந்தான் சற்றுச் சினங்கொண்டுள்ளார்கள்.

கயமுகாசூரன்: (வியப்போடு) என்ன...?

தளபதி: (ஆத்திரத்தோடு எழுந்து) மன்னிக்கவேண்டும் மாமன்னரே! நமது மந்திரியாருக்கு வயதுபோய்விட்டது அல்லவா? அதனால்தான் ஏதேதோ பிதற்றுகிறார். தங்கள் வல்லமையை நாடு முழுவதும் அறியும். உலகம் அறியும் தங்கள் உயர் கீர்த்தியை. தங்கள்

தவபலம் தேவர்களையும், முனிவர்களையும் நடுநடுங்க வைத்துள்ளது. அதன்காரணமாகத்தான் கலக்கமடைந்திருக்கிறார்கள் கபோதிகள்.

கயமுகாசூரன்: சபாஷ்! தளபதியாரே சபாஷ்! உமது திறமையே திறமை. மெச்சுகிறேன் உமது விவேகத்தை. பாராட்டுகிறேன் நீர் இந்த நாட்டின்மீது வைத்திருக்கும் பக்தியை. தேவர்கள்! (ஏளனமாகச் சிரித்து) கர்வம்பிடித்தவர்கள். கலங்கி அழியட்டும் அந்தக் கசடர்கள்.

தளபதி: ஆம் அரசே. கலங்கி அழியட்டும் அந்தக் கசடர்கள்.

கயமுகாசூரன்: இனி நானே சர்வவல்லமை பொருந்திய மா மா மன்னன். நானே யாவரதும் வணக்கத்திற்குரியவன்.

அமைச்சர்: மன்னவா! இது தகாத வார்த்தை. எந்த நிலையிலும் நீதியை எடுத்துரைக்கவேண்டியது எனது கடமையாகும். தளபதி தங்களுக்குத் தவறான பாதையைக் காட்ட முற்படுகிறார். தேவர்கள் மகா சக்தி வாய்ந்தவர்கள். அவர்களிடையே இருக்கும் முனிவர்கள் தவத்தில் சிறந்த மாமேதைகள். தெய்வசக்தியின் துணையால் அற்புதங்கள் செய்யவல்லவர்கள்.

கயமுகாசூரன்: இருக்கட்டுமே. அவர்களால் மட்டுந்தான் அற்புதங்கள் செய்யமுடியுமா?

தளபதி: அவர்களையும்விட அனந்தகோடி அற்புதங்களை நம் அரசரால் செய்யமுடியுமென்பது அமைச்சர் அறியாததல்லவே. அப்படியிருந்தும்...

அமைச்சர்: இப்படி நான் பேசுவதில் அர்த்தமிருககின்றது. நாம் ஆத்திரப்பட்டுத் தவறு செய்ய முற்படடால் தங்கள் தவமேன்மையால் எங்களுக்குக் கிடைத்திருக்கும் இந்தச் சிறப்பையெல்லாம் இழந்துவிட நேருமோ என அஞ்சுகின்றேன். ஆதலால் தங்களைச் சித்தித்துச் செயலாற்றும்படி அடியேன் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

கயமுகாசூரன்: இதிலே சிந்திப்பதற்கு என்ன இருக்கின்றது. நாம் வெறுஞ் சித்தர்களுமல்ல—பித்தர்களுமல்ல—செயல்

வீரர்கள். தெளிந்த சித்தங்கொண்டவர்கள். சிரம் தாழ்ந்தி எமக்குச் சேவகம் செய்யவேண்டிய நீர் இப்படிச் சின்னத்தனமாகப் பேசலாமா?

அமைச்சர்: மாமன்னவரே! என்னை மன்னித்துவிடுங்கள். என் ஆலோசனை வார்த்தைகள் தங்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்துவனவாக அமைந்திருக்கவில்லையே.

கயமுகாசூரன்: (கடுமையான தொனியில்) அமைச்சரே! தளபதி கூறியது சரி. உமக்கு வயதேறிவிட்டது. அதனால் தான் பிதற்றுகிறீர். எம்மை நாமே இழிவுபடுத்துவதா? எமது தவபலத்திலே எம்க்கு நம்பிக்கையுண்டு. எம்மை விட உயர்ந்தவன் இதற்குமுன்னர் பிறந்ததுமில்லை, இனிமேல் பிறக்கப்போவதுமில்லை. மகாபராக்கிரமம் நிறைந்தவர்கள் எனக் கூறினீரே. அதுதான் அந்த இமையோர்கள். இனிமேல் அவர்கள் எம்மையே வணங்க வேண்டும். இது எமது கட்டளை.

அமைச்சர்: அபச்சாரம்! அபச்சாரம்! மன்னவா! இது என்ன அநீதி. தங்கள் மதி மயங்கிவிட்டதா?

தளபதி: (துள்ளி எழுந்து) அமைச்சரே! மூடு வாயை! ஆணையிடுங்கள் மன்னவரே! இந்த அற்பக் கிழவனை இப்போதே என் உடைவாளுக்கு இரையாக்கிவிடுகின்றேன்.

அமைச்சர்: இளங்கன்று பயமறியாதது. அதனால்தான் தளபதி துள்ளுகிறார். துள்ளுகிற மாடு பொதி சுமக்கும் என்பது மூத்தோர் வாக்கு. இதைத் தளபதி சிந்தித்துப்பார்த்தால் நல்லது.

தளபதி: அரசே! இந்தக் கிழவன் வேண்டுமென்றே என்னை அவமானப்படுத்துகிறான். இவனை...

கயமுகாசூரன்: மன்னித்துவிடுவோம். பாவம் பிழைத்துப் போகட்டும்.

தளபதி: மன்னவா...!

கயமுகாசூரன்: தளபதியாரே! எனக்குப் புரிகிறது. எமது கடமையை மறந்தவனல்ல யான், அமரர்களை ஆளப் பிறந்தவன். அவர்கள் எமது அடிமைகள். இப்போதே இந்திராபுரி செல்லும். எமது ஆணையை இந்திரனுக்கு அறிவித்து அவனும அவனது ஆட்சிக்குட்பட்டவர்களும்

இன்றிலிருந்து எம்மையே வணங்கவேண்டும் என்று சொல்லும்.

தளபதி: அவன் தங்கள் ஆணைக்குக் கட்டுப்பட மறுத்தால்...?

கயமுகாசூரன்: அவனைச் சிறைப்பிடித்து இழுத்துவாரும் இங்கே.

தளபதி: அப்படியே ஆகட்டும் அரசே. (வணங்கி) நான் விடைபெறுகிறேன் வேந்தே.

கயமுகாசூரன்: சென்றுவா. வென்றுவா அமரர் தலைவனின் ஆணவத்தை. (எக்காளமிட்டுச் சிரிக்கிறான்).

தளபதி: (அமைச்சரைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துவிட்டு மன்னனுக்கு வணக்கஞ் செலுத்திவிட்டு வெளியேறுகின்றான்.)

அமைச்சர்: (மனவேதனையோடு) கொடுமை. கொடுமை. மன்னவா! தயவுசெய்து தளபதியைத் தடுத்து நிறுத்துங்கள். அரக்கர்குல அழிவுக்குத் தாங்களே அகழி வெட்டுவதா? வேண்டாம் இந்த விபரீதம் மன்னா...?

கயமுகாசூரன்: சீ! மூடு வாயை. (எக்களிப்போடு எழுந்து செல்கிறான்.)

— திரை —

—★—

காட்சி : 02.

இடம் : தேவேந்திரன் சபாமண்டபம்.

பாத்திரங்கள் : இந்திரன், இந்திராணி, நாரதர், அரக்கர் தளபதி.

(இந்திர சபையில் தேவேந்திரனும், இந்திராணியும் அமர்ந்திருக்கின்றனர். அங்கே நாரதர் வருகிறார்.)

நாரதர்: (வந்துகொண்டே) நாராயணா! நாராயணா!

தேவேந்திரன்: நாரதரே! வருக! வருக! தங்கள் வரவு நல் வரவாகுக.

இந்திராணி: அமருங்கள் சுவாமி.

நாரதர்: அமரர் தலைவா! மகிழ்ச்சி. (அமர்ந்துகொண்டே) தலைவியாரே நன்றி. நாராயணா! தேவேந்திரா! உன் முகத்தில் ஏதோ வாட்டம் தோன்றுகிறதே. என்ன காரணமோ? அடியேன் அறியலாமா?

தேவேந்திரன்: நாரதரே! வேடிக்கைக்கு இதுவல்ல சமயம். தாங்கள்தான் திரிலோக சஞ்சாரியாச்சே. தாங்கள் அறியாததுமுண்டோ,

நாரதர்: ஓ அதுவா? அறிந்தேன். அறிந்தேன். அரக்கனுக்கு ஆணவம் தலைக்கேறிவிட்டது. தேவர்களும் முனிவர்களும் தன்னைவிடத் தாழ்ந்தவர்களென நினைத்து இறுமாந்திருக்கின்றான். என்ன செய்வது, அவன் தவ பலம் அப்படி.

இந்திராணி: எப்படியோ போகட்டும். எம்மை இம்சிக்கா விட்டால் அதுவே போதும்.

நாரதர்: அரக்கனோ துன்மார்க்கன். அவன் எதற்கும் அஞ்சாதவன். மகேஸ்வரனையே மயக்கிவிட்டானே. ஈடில்லா வரத்தையும், இணையில்லா வல்லமையையும் அல்லவா பெற்றிருக்கின்றான்.

இந்திராணி: இருக்கட்டுமே. அவனுக்கு நிகரான தவவலிமை பெற்ற முனிவர்கள் நம்மிடையே இல்லையா?

தேவேந்திரன்: ஏன் இல்லை. நிறையப்பேர் இருக்கிறார்கள். அந்தத் தவசிகளின்முன் இந்த அரக்கன் எம்மாத்திரம்.

நாரதர்: யாரறிவார்...?

அரக்கர் தளபதி: (வந்துகொண்டே) நானறிவேன்.

நாரதர்: நாராயணா!

தேவேந்திரன்
இந்திராணி } யாரது...?

அரக்கர் தளபதி: நான் சர்வவல்லமைமிக்க சிறீ...சிறீ...சிறீ... கயமுகாசூர மாமன்னரின் தளபதி.

தேவேந்திரன்: உமக்கு இங்கு என்ன வேலை...?

அ. தளபதி: (தனது கையிலிருந்த ஓலைச்சுருளைத் தேவேந்திரனிடம் நீட்டி) இதோ எமது மன்னர் கட்டளை.

இந்திராணி: (ஆச்சரியமுடன்) கட்டளையா?

தேவேந்திரன்: (தளபதி நீட்டிய ஓலைச்சுருளை வாங்காமலே) என்ன அது?

அ. தளபதி: இன்றிலிருந்து தேவர்களும், முனிவர்களும் எங்கள் மாமன்னருக்கு அடிமையாக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேவேந்திரன்<br>இந்திராணி<br>நாரதர் } அபச்சாரம், அபச்சாரம்.

அ. தளபதி: அதுமட்டுமல்ல. இன்றிலிருந்து நீங்களனைவரும் எங்கள் மாமன்னரையே வணங்கவேண்டும்.

தேவேந்திரன்<br>இந்திராணி<br>நாரதர் } சிவசிவா, சிவசிவா.

தேவேந்திரன்: ஏ! அற்பப்பதரே! என்ன விளையாடுகிறாயா? நீ எங்கு வந்திருக்கிறாய் என்பது தெரியுமா? இது தேவேந்திரபுரி என்பது புரியுமா? நீ இப்போது தேவேந்திரனுடன் பேசிக்கொண்டிருக்கிறாய் என்பது ஞாபகத்தில் இருக்கட்டும்.

அ. தளபதி: உம்மை நானறிவேன். நான் கதை சொல்ல வரவில்லை. கட்டளையுடன் வந்திருக்கின்றேன். இதை ஏற்றுக்கொள்கிறாயா? இல்லையா?

தேவேந்திரன்: மறுத்தால்...?

அ. தளபதி: உம்மைச் சிறைப்பிடித்து இழுத்துவரவேண்டுமென்பது கட்டளை.

இந்திராணி: (அதிர்ச்சியடைந்து) அநியாயம்! அக்கிரமம்!!

தேவேந்திரன்: (ஏளனமாக) ஓகோ... அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டானா...? மடையன்!

அ. தளபதி: வார்த்தைகளை அளந்து பேசுங்கள். வரம்பு மீறினால்...?

நாரதர்: சமாதானம். சமாதானம். கலகம் வேண்டாம். கலக்கமும் வேண்டாம். தேவேந்திரா! நீ இந்தக் கட்டளையை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படித்தானே. தளபதி நீ போகலாம்.

அ. தளபதி: வெறுங்கையுடனா? தேவேந்திரா! உன்னைச் சிறைப்பிடித்து வரவேண்டுமென்பது கட்டளை. நீயாக என் பின்னால் வரப்போகிறாயா? அல்லது நானாக உன்னைப் பிடித்து இழுத்துச்செல்லவா? (தளபதி தேவேந்திரனை நெருங்கிவருகின்றான்).

இந்திராணி: எட்டி நில். அரசரைத் தொடாதே. தொட்டால் உன்னை எரித்துவிடுவேன்.

அ. தளபதி: மன்னிக்கவேண்டும் மகாராணியாரே! இது என் கடமை. (தளபதி தேவேந்திரன் கரம்பற்றி இழுக்கிறான்.)

இந்திராணி: ஐயோ! இது என்ன அக்கிரமம். ஈஸ்வரா! இந்தக் கொடுமையை நிறுத்து.

நாரதர்: நாராயணா! நாராயணா!

— திரை —

—★—

காட்சி : 03.

இடம் : அரக்கர் சிறைக்கூடம்.

பாத்திரங்கள்: சிறைக்காவலர் இருவர், நாரதர், தளபதி.

(அரக்கர் சிறையினுள் அமரர் தலைவன் அடைபட்டிருக்கிறான். சிறைக்காவலர் இருவர் காவல் காத்துக்கொண்டிருக்கின்றனர். அப்போது அங்கு நாரதர் வருகிறார்.)

நாரதர்: (வந்துகொண்டே) நாராயணா!... நாராயணா!...

காவலாளி I: யாரது நாரதரா?

காவலாளி II: நாரதமுனிவரே! உமக்கு இங்கு என்ன வேலை?

நாரதர்: நாராயணா! யாதும் ஊரே! யாவரும் கேளீர்! யாம் போகாத இடமும் உள்ளதோ. எம்மை நோக்கி இங்கு என்ன வேலை என்று கேட்கலாமா? நாராயணா!

காவலாளி I : (காவலாளி IIஐ நோக்கி) தம்பி! கலகக்கார நாரதர் காரணமின்றி இங்கு வந்திருக்கமாட்டார்.

காவலாளி II : ஆம் அண்ணே! அவர் வந்திருப்பதில் ஏதோ மர்மம் இருக்கும்போல தெரிகிறது. எதற்கும் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

காவலாளி I : நாரதரே! வந்ததும் வந்தீர். அரசர் வருமுன் இங்கிருந்து ஓடிவிடும். தேவேந்திரனைச் சிறைமீட்க முயற்சித்தால்...?

காவலாளி II : முயற்சி செய்தால்...?

நாரதர்: (சிரித்து) ஆகா! என்ன அற்புதம்! அரக்கர் சிறையினுள் அமரர் தலைவன். அழகான காட்சி, இந்த அகிலமே வியக்கும் அற்புதக் காட்சி. அரக்க மாமன்னன் பெருமையே பெருமை. அமரர் தலைவனின் சிறுமையே சிறுமை, நாராயணா!...

காவலாளி II : அண்ணே! நாரதர் பேசுவதைப் பார்த்தால் அவர் நம் ஆள்போல் இருக்கிறதே. நாம் அவரை வீணாக ஏன் விரட்டவேண்டும்?

நாரதர்: சரியாகச் சொன்னீர் காவலரே! நான் உங்கள் கட்சிதான். இங்கே ஏன் வந்தேன் தெரியுமா? திமிர் பிடித்த தெய்வேந்திரன் இங்கே எப்படிக்கிடந்து துடிக்கிறான் என்பதை வேடிக்கை பார்க்கவே வந்தேன்.

காவலர் இருவரும்: அப்படியா? ஆகா! நன்றே பாருங்கள். நன்றே பாருங்கள். இன்றே பாருங்கள். அங்கு சென்றே பாருங்கள். சென்றே பாருங்கள்.

நாரதர்: நன்றி காவலரே நன்றி. யாம் மெத்தம் மகிழ்ந்தோம். சித்தம் மகிழ்ந்தோம். சென்றே வருகிறோம். சிறை வென்றே வருகிறோம். நாராயணா!...

(நாரதர் செல்கிறார்)

அ. தளபதி: (ஆத்திரத்துடன் வந்துகொண்டே) முட்டாள்களே! தேவேந்திரன் சிறையிலிருந்து தப்பிவிட்டான். நீங்கள் இங்கு என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?

காவலர் இருவரும்: என்ன தப்பிவிட்டானா...?

காவலாளி II : (அழுதுகொண்டே) அண்ணே!...

காவலாளி I : (அழுதுகொண்டே) தம்பி!...

காவலர் இருவரும்: (இருவரும் கட்டிப்பிடித்துக்கொண்டு) மோசம் போனோம். நாம் மோசம் போனோம்.

(இருவரும் மயங்கி விழுகின்றனர்.)

— திரை —

—★—

காட்சி : 04.

இடம் : கைலயங்கிரி.

பாத்திரங்கள் : தேவேந்திரன், இந்திராணி, நாரதர், முனிவர்கள் இருவர், நந்திதேவர், சிவபெருமான், உமாதேவியார்.

(தேவேந்திரன் முதலானோர் சிவனருள் பெறுவதற்காகக் கைலயங்கிரி வந்து முதலில் நந்திதேவரைச் சந்தித்து அனுமதி பெறுகின்றனர்.)

தேவேந்திரன்: நந்திதேவரே! நமஸ்கரிக்கின்றோம்.

நந்திதேவர்: தேவேந்திரா! மங்களமுண்டாகட்டும். நாரதர் தவமுனிவர்கள் சகிதம் தம்பதி சமேதரராய் அவசர கோலமாய் இங்கு வந்திருப்பதன் காரணம் யாதோ?

தேவேந்திரன்: அரக்கர்கள் கொடுமை தாங்கமுடியவில்லை.

இந்திராணி: திருநீலகண்டப் பெருமானின் திருவருள்வேண்டி வந்திருக்கின்றோம்.

நாரதர்: அவசரமாக அமலனிடம் எம்மை அனுப்பிவையுங்கள் சுவாமி.

நந்திதேவர்: அப்படியா? நீலகண்டப் பெருமான் நிஷ்டையில் இருக்கின்றார். பக்குவமாகச் சென்று பார்த்து வாருங்கள்.

முனிவர்கள்: நன்றி தேவா.

அனைவரும்: ஓம் சிவாய நம! ஓம் சிவாய நம!
ஓம் சிவாய நம!

தேவேந்திரன்: சம்போ மகாதேவா! சரணம்! சரணம்! சங்கரா சரணம்! சர்வலோக முதல்வனே சரணம்! முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுக்கும், அளவிடற்கரிய சிவகணங்களுக்கும், அகிலமனைத்துமுள்ள ஜீவராஜிகளுக்கும் தலைவா! எம் இறைவா! எங்கள் இடர் களைந்தருளல்வேண்டும் ஆதி பரம்பொருள் ஜோதியே!

எல்லோரும்: ஓம் சிவாய நம! ஓம் சிவாய நம!
ஓம் சிவாய நம!

நாரதர்: ஓம் சிறீ கைலாயநாதா! ஓம் சிறீ திருநீலகண்டா! ஓம் சிறீ சிவசங்கரா! உம்மை நாடிவந்திருக்கும் எம்மைக் காப்பாற்றும். காப்பாற்றும் கருணைக்கடவுளே காப்பாற்றும் அப்பா!

முனிவர் I: ஓம் சிறீ திரிபுரமெரித்த விரிசடைத் தேவா!
ஓம் சிறீ கடல்நஞ்சுண்ட கருணாமூர்த்தி!
அபயமளித்தருள் அகிலாண்டேஸ்வரா!
அபயமளித்தருள் அப்பனே சிவனே சிவபெருமானே!

அனைவரும்: ஓம் சிவாய நம! ஓம் சிவாய நம!
ஓம் சிவாய நம!

(அப்போது சிவபெருமான் உமாதேவியாரோடு அங்கு காட்சியளிக்கின்றார்.)

சிவபெருமான்: அன்பர்களே! எமது அடியார்களே! அபயவளித்தோம். அஞ்சற்க. அரக்கர்களால் ஏற்படும் ஆபத்தை நீக்கத் திருவருள் தந்தோம். அமைதியடைவீர்களாக.

அனைவரும்: நன்றி நன்றி நன்றி தேவா?
நல்லருள் தந்தீர் நன்றி தேவா!
நாளும் மறவோம் நாதனே தேவா!
நானிலம் போற்றும் தேவாதி தேவா:

— திரை —

—★—

காட்சி : 05.

இடம் : பூஞ்சோலை.

பாத்திரங்கள் : சிவபெருமான், உமாதேவியார், விநாயகப் பெருமான், தேவேந்திரன், இந்திராணி, நாரதர், முனிவர்கள் இருவர்.

(சிவபெருமானும், உமாதேவியாரும் கைலயங்கிரியை அடுத்துள்ள பூங்காவில் உலவிக்கொண்டிருக்கிறார்கள்)

உமாதேவி: சுவாமி! தாங்கள் தேவர்களுக்கு அபயமளித்து நாட்கள் பல சென்றுவிட்டனவே. ஆனால் அரக்கர்களின் கொடுமை இன்னும் குறையவில்லையே. பாவம்! தங்கள் அடியார்கள் அதிக துயரடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு விடிவே இல்லையா? தங்கள் திருவுளம் யாதோ...?

சிவபெருமான்: லோகமாதா! கருணை கனியும் உன் அன்புள்ளம் இரங்கத்தான் செய்யும். அமரர்கள் தங்கள் தவப்பெருமையால் சிறிது கர்வமடைந்திருந்தார்கள். அதன் விளைவுதான் அவர்கள் படும் இந்த வேதனை. சீக்கிரமே அவர்கள் துன்பங்கள் யாவும் நீங்கும். நீ தெளிவுபெறுவாயாக.

உமாதேவி: சுவாமி! அந்த மண்டபத்தைப் பார்த்தீர்களா? அங்கு சித்திரமாக எழுதப்பட்டுள்ள யானையின் திருக்கோலம் என்னை மெய்மறக்கச் செய்துவிட்டது. ஆகா! என்ன அற்புத தோற்றம். கால் கரங்கள் முதலிய அவயவங்கள் ஓர்விதமாகவும், சிரசு மாத்திரம் ஓங்காரத் திற்கீடாக மௌனயோகத்தைச் சாதித்துப் பிரகாசிக்கிறதே. ஆகையால் இதை மகத்துவம் பொருந்திய ஒரு புனித வடிவாகவே மதிக்கிறேன் சுவாமி.

சிவபெருமான்: ஆதிசக்தியே! உனது மனதைக் கொள்ளை கொண்ட அந்தச் சித்திரத்தை ஓர் பிள்ளையாகப் பார்க்க நீ ஆசைப்படுவதை நாம் அறிவோம். உனது ஆசையை நிறைவேற்றி வைக்கின்றோம். இதோ......

(விமலன் அருளால் விநாயகர் அவதாரஞ் செய்கிறார்)

உமாதேவி: (ஆவலோடு சென்று குழந்தை விநாயகரை அணைத்துக்கொண்டு முத்தமாரி சொரிகிறார்.) சுவாமி!

கரிமுகங்கொண்ட இவ்வற்புதக் குழந்தை எவ்வளவு அழகாயிருக்கின்றான். இவனைக் கைலைக்கு எடுத்துச் செல்வோமா?

சிவபெருமான்: தேவி: இப்பாலகன் மகா கீர்த்திவாய்ந்தவன். இவனால் ஆகவேண்டிய அளப்பரிய காரியமொன்று இங்குளது. ஆதலால் அந்த ஆலமர நிழலில் குழந்தையை விட்டுச்செல்வோம் வருவாயாக.

உமாதேவி: சுவாமி! இந்தப் பச்சிளம் பாலகனை இந்த அடர்ந்த சோலையில் அனாதரவாக விட்டுவிட்டுத் தாய் தந்தையராகிய நாம் பிரிந்துசெல்வது தகுமா? தர்மந்தானா?

சிவபெருமான்: பார்பதி! பரமனின் சக்தி நிறைந்த இப் பாலகன் தன்னைப் பணிவோரின் பாவம் போக்கிப் பரகதியளிக்கும் வல்லமையுடையவன். வினை தீர்க்கும் விநாயகனான இவன் அடியவர்கள் வேண்டும் பொருளெல்லாம் அருளுவான். காலத்தால் அழியாது கணங்களுக்கெல்லாம் தலைவனாக — விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனாக – ஞால முதல்வனாக – ஞானக்கொழுந்தாக நம்பினோரைக் காக்கும் தும்பிக்கையோனான இவன் ''கணபதி'' எனும் திருநாமத்துடன் போற்றிப் புகழ்ந்து துதிக்கப்படுவான். அதோ தேவேந்திரன். தேவர்கள் சூழ்ந்துவர இந்தத் தேவாதிதேவனை ஆராதனை செய்வதற்காக வந்துகொண்டிருக்கிறான். நாம் கைலை செல்வோமாக.

(சிவபெருமானும், உமாதேவியாரும் மறைகின்றனர். தேவேந்திரன் தலைமையில் அங்கு வந்த தேவர்களும், முனிவர்களும் (தேவேந்திரன், இந்திராணி, நாரதர், முனிவர்கள் இருவர்) விநாயகரைச் சூழ்ந்துநின்று துதிக்கின்றனர்.)

பாடல்:

போற்றி போற்றி கணபதி போற்றி!
பொல்லா வினைகள் போக்குவாய் போற்றி!
வினை தீர்க்கவந்த விநாயகா போற்றி!
துயர் தீர்க்கவந்த துதிக்கையா போற்றி!
அசுரர் பலம் அழிக்கவந்த ஆனைமுகா போற்றி!
அல்லல் அகற்றி அருளும் ஆனந்தவெள்ளமே போற்றி!

ஓங்காரமான ஒலியே போற்றி!
ஆங்காரம் அழித்தருளும் அண்ணலே போற்றி!
சித்தி தருவாய் சித்திவிநாயகா!
வெற்றி தருவாய் வேழமுகத்தரசே!
போற்றினோம் பாடினோம் வாழ்த்தினோம் ஐயா!
வாழவை எம்மை வாழவை அப்பா!

விநாயகர்: குழந்தைகளே! ஆறுதல் அளித்தோம், அமைதியடைவீர்களாக.

— திரை —

—★—

காட்சி : 06.

இடம் : கயமுகாசூரன் அரண்மனை அந்தப்புரம்.

பாத்திரங்கள் : கயமுகாசூரன், தளபதி, காவலர்கள் இருவர்.

(அரண்மனை அந்தப்புரத்தில் கயமுகாசூரன் உலவிக் கொண்டிருக்கின்றான். அங்கே தளபதி வருகின்றான்)

தளபதி: (வந்து வணங்கி) வணக்கம் மன்னவா.

கயமுகாசூரன்: ...ம்...சொல்லும்...

தளபதி: அரசே! கைலயங்கிரியை அடுத்துள்ள பூஞ்சோலையிலே ஓர் அதிசயக் குழந்தை பிறந்திருக்கின்றது. மனித மேனியும் யானை முகமுங் கொண்டு பார்ப்பவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கும் அக்குழந்தையைத் தேவாதிதேவர்கள் சூழ்ந்து நின்று மலர் சொரிந்து ஆனந்தக்கூத்தாடுகின்றார்கள்.

கயமுகாசூரன்: மடையா! என்னிடம் வந்து புதினமா சொல்லுகிறாய்? புத்திகெட்டவனே! நீ இந்த நாட்டின் தளபதியா அல்லது தளர்பதியா? உனக்கு எதை எப்படி எப்போது செய்யவேண்டும் என்பது தெரிந்திருக்கவேண்டாமா? குழந்தையாம் குழந்தை. அதை அப்படியே அள்ளி எடுததுக் கொன்றழித்துவிடுவதை விடுத்து இங்கேவந்து கதை சொல்லுகிறானாம் கதை...

தளபதி: கொற்றவனே! இதில் என்மீது குற்றமெதுவுமில்லை. தாங்கள் நினைத்ததை நானுந்தான் செயலாக்க முனைந்தேன். ஆனால் முடியவில்லையே. அந்தச் சிறுவனின் அருகில்கூடச் செல்லமுடியவில்லையே...

கயமுகாசூரன்: இப்படிச்சொல்ல உனக்கு வெட்கமாயில்லை. கேவலம். ஒரு சிறு குழந்தையின் அருகில் செல்ல முடியவில்லையாம். பேடி! நீயும் ஒரு தளபதியா? உனக்கு இந்த உடைகள் ஏன்? கையில் வாள் ஏன்? மார்பில் கவசம் ஏன்? ஏன்? இவைகளைக் களைந் தெறிந்துவிட்டுச் சேடிகளின் சேலையைக் கட்டு. கையில் அகப்பையை எடுத்துக்கொள். போ...!போ...?

தளபதி: (தளர்ந்த குரலில் பணிவாக) பிரபு! என்னைக் கொடும் வார்த்தைகளால் சித்திரவதை செய்யாதீர்கள். அரக்கர்களின் மாயாஜாலம் அத்தனையும் பொய்த்து விட்டனவே. அந்தக் குழந்தை ஒரு சாதாரண குழந்தையாகத் தோன்றவில்லை. அதிலே ஏதோ ஒரு தெய்வீக சக்தி இருப்பதைப்போல் தோன்றுகின்றது. அதனால்தான் அதன் அருகில் நெருங்கமுடியாதவாறு அபூர்வ சக்திவாய்ந்த அக்கினிச்சுவாலை என்னை விரட்டியடித்துவிட்டது.

கயமுகாசூரன்: (உரக்கச் சிரித்து) விரட்டியடித்துவிட்டதா? இல்லைப் புரட்டியடித்துவிட்டதா? புத்திகெட்டவனே! போ! என் முன்னால் நிற்காதே! ஓடிப்போ! (தனது கைகளைத் தட்டி) யாரங்கே...?

(காவலர்கள் இருவர் வருகிறார்கள்)

காவலர்கள்: (பணிவுடன் வணங்கி) கட்டளையிடுங்கள் பிரபு!

கயமுகாசூரன்: முழங்கட்டும் முரசம்! ஒலிக்கட்டும் யுத்த பேரிகை! திரளட்டும் படையணி! போர்! போர்! போர்! (பேய்ச் சிரிப்புச் சிரிக்கின்றான்.)

— திரை —

—★—

காட்சி : 07.

இடம் : பூஞ்சோலை.

பாத்திரங்கள் : விநாயகப் பெருமான், கயமுகாசூரன், வீரர்கள் இருவர், தேவேந்திரன், இந்திராணி, நாரதர், முனிவர்கள் இருவர்.

(கயமுகாசூரன் பெரும்படையுடன் விநாயகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்திற்கு வருகின்றான்)

கயமுகாசூரன்: வீரர்களே! இந்தச் சிறுவனுடன் போரிடுவதற்காகவா இத்தனை பெரும்படையுடன் வந்திருக்கின்றோம். என் செயல் எனக்கே வெட்கமாயிருக்கின்றது.

வீரன் I : ஆம் அரசே! சூராதிசூரன் என்று அகிலமெல்லாம் போற்றும் வீராதிவீரனான தாங்கள் இந்தச் சுண்டைக்காய்ப் பயலுடனா யுத்தம் செய்வது?

வீரன் II : அரசே! அரக்கனுமின்றித் தேவனுமின்றி மனிதனுமின்றி வினோதமான ரூபங்கொண்டிருக்கும் இச்சிறுவனைக் கண்டதும் தேவர்கள் எல்லாரும் ''நாம் சுகமடைந்தோம் - பயத்தை ஒழித்தோம் - அரக்கர் குலத்தை முடித்தோம் – இனித் தவத்தைத் தொடுப்போம்'' என்று சிந்தை மகிழச் செருக்குற்றுச் செல்கின்றனரே! எனக்கென்னவோ இவனை வெறும் சுண்டைக்காய்ப் பயல் என்று எண்ணத்தோன்றவில்லை. ஆகவே நாம் போர் தொடுப்பதே புத்திசாலித்தனமானது மன்னவரே!

கயமுகாசூரன்: சரி அப்படியே செய்வோம் ...ம் ...ம் போர் முரசம் முழங்கட்டும்,

குரல்: (உள்பக்கத்துத் திரைக்குப் பின்னாலிருந்து ஒலிக்கின்றது. அப்போது அரங்கத்தில் நிகழும் காட்சி நிழற்காட்சியாக இருக்கும்.)

வெள்ளமெனப் பொங்கியெழும் அரக்க போர்வீரர்கள் விற்றிறம், கைத்திறம், மெய்த்திறங்களைக் கொடிய பாணங்களாக்கி விநாயகரை நோக்கி ஏவுகின்றனர். மேகாஸ்திரம், நாகாஸ்திரம், மின்னலாஸ்திரம், வாயுவாஸ்திரம், அக்கினியாஸ்திரம் முதலிய அநேக ஆயிர

மாயிரம் பாணங்களைச் சோனாமாரியாகப் பொழிகின் றனர். ஆனால் சிறு குழந்தையாகிய விநாயகரோ இவ்வாஸ்திரங்களைக் கண்டு அஞ்சவுமில்லை, அதிர்ச்சி யடையவுமில்லை. அவர் புன்முறுவல் புரிகின்றார். தமது கையிலுள்ள அங்குசத்துக்குச் சர்வசக்தியையும் தந்து தனக்கு முன்னால் நட்டுவிட்டு ஒன்றுமறியாத வர்போல் அமைதியாக வீற்றிருக்கின்றார். சீறிப் பாய்ந்துவரும் கொடிய அஸ்திரங்களெல்லாம் அங்குசத் தின்மீது பட்டுச் சின்னாபின்னமாகச் சிதறியழிகின்றன. தங்களால் ஏவப்பட்ட பாணங்கள் யாவும் விழலுக்கு இறைத்த நீராவதைக் காணும் அரக்கர் சேனைகள் கலக்கமடைகின்றனர்.

அப்போது கணநாதர் தம்மருகில் தழைத்திருக்கும் தர்ப்பைப்புல்லில் சிறிது கிள்ளி அதற்குப் பிரணவ மந் திரத்தையோதி வல்லவனுக்குப் புல்லுமாயுதம் என்ப தைப்போல் அதை அரக்க சேனைமேல் ஏவுகின்றார். அந்தப் புல்லாயுதம் அதியுக்கிரமாகச் சென்று அரக்கர் சேனையையெல்லாம் தாக்கிக் கொன்றழிக்கின்றது.

சேனைகளின் மரண ஓலம் வானை அதிரவைக்கின்றது. ''ஐயோ! செத்தோம்... செத்தோம்... மாண்டோம்... மடிந்தோம்... ஐயோ ஐயோ...''

கயமுகாசூரன்: (கதறி அழுதுகொண்டே) ஐயையோ! சிறு குழந்தையென நினைத்தேனே! இங்கே எனது சேனை கள் யாவும் மாண்டு மடிந்துவிட்டனவே. அரக்கர் குலமே அழிந்துவிட்டதே. இனி நான் என்னசெய் வேன்...? என்னசெய்வேன்...? எப்படி வாழ்வேன்...? ஐயையோ...!

விநாயகப்பெருமான்: (புன்னகைபூத்து) வீரனே! போர்க் களத்திலே ஏன் புலம்புகின்றாய்? நீ வீரனா? அன்றேல் வீணனா? ஒப்பாரி வைக்கும் இடமல்ல இது. எங்கே உனது திறமை? மாயா மந்திரஜாலமெல்லாம் காட்டு பார்க்கலாம்.

கயமுகாசூரன்: (எக்காளமிட்டு (ஆணவம்) ச் சிரித்து) துங்கக் கரிமுகனே! இந்தச் சூராதிசூரன்முன் ஒரு சுண்டெலி யைப்போலிருந்துகொண்டு வேடிக்கையா பேசுகின் றாய். நான் அஞ்சாநெஞ்சங்கொண்ட அரக்கர்கோன்.

வீரன். வீராதிவீரன். வெறும் வீணன் அல்ல. இதோ எனது வினோத விளையாடல்களைப் பாரும்.

குரல்: கயமுகாசூரனுடைய மாயாதந்திரங்களையும், சிவ பெருமானிடமிருந்து அவன் பெற்றிருக்கும் மகிமை மிக்க வர பலத்தையும் ஞானத்தால் அறிந்துகொண்ட விநாயகப்பெருமான் தன்னிடமுள்ள ஆயுதங்களால் அவன் இறவான் என அறிந்து பரிசுத்தமான தனது கொம்பிலொன்றை ஒடித்துக் கயமுகாசூரனை வாட்டங்கொள்ளச் செய்யுமாறு அவனைநோக்கி ஏவுகின்றார். அவ்வாறு செலுத்திய கொம்பு கொடியவனான கயமுகாசூரனின் மார்பைப் பிளந்துவிட்டுச் சென்று கங்கை நீரில் மூழ்கிவந்து விநாயகப்பெருமானின் கரத்திலமர்ந்தது.

மார்பு பிளக்கப்பட்டு மயங்கி விழுந்த கயமுகாசூரன் சற்றுநேரத்தால் மயக்கந்தெளிந்து எழுந்து, மாயையால் மூஷிகமாக உருவந்தாங்கி நிலத்தைத் துளைத்துச்சென்று விநாயகப்பெருமானைப் பூமியோடு பெயர்த்துக் கொண்டோடும்பொருட்டு விநாயகப்பெருமான் அமர்ந்திருக்கும் நிலத்தின்கீழ் சென்று நிலத்தை அசைக்கின்றான். அரக்கனின் வஞ்சனையை அறிந்த பெருமான் தனது திருப்பாதத்தால் நிலத்தை அழுத்துகின்றார். கயமுகாசூரன் மூச்சுமுட்ட விழி பிதுங்க மரண ஓலமிடுகின்றான்.

கயமுகாசூரன்: (தழுதழுத்த குரலில்) சரணம்... சரணம் அப்பா கணநாதா! என்னைக் காப்பாற்றி அருளும் ஐயனே! ஆணவத்தால் அறிவிழந்தேன். அதனால் அமரர்களையும் ரிஷிகளையும் துன்புறுத்தினேன். அமலனின் சாபத்துக்குள்ளானேன். விநாயகப்பெருமானே! என் வினை தீர்த்தருளும். தங்களைச் சுமப்பதற்கு நான் செய்த பாக்கியமே பாக்கியம். என் வாழ்நாள் பூராவும் நான் தங்களைச் சுமந்து இன்புற வரம்தாரும் ஐயனே! என்னை மன்னித்துக் கருணைகூர்ந்து என்னைக் காப்பாற்றித் தங்கள் வாகனமாக அன்புகூர்ந்து ஏற்றுக்கொள்ளும் அப்பனே.

விநாயகப்பெருமான்: கயமுகா! உமது பாவத்தை மன்னித்தோம். உம்மை ஆட்கொண்டோம். உமது வேண்டுதலை ஏற்றுக்கொண்டோம். இன்றிலிருந்து எமக்கு வாகனமாக இருக்கக்கடவீராக.

கயமுகாசூரன்: (நன்றிப்பெருக்கோடு) கற்பகக் கடவுளே! அற்புதக் கணேஸ்வரா! தங்கள் கருணையினால் ரண்ணியனானேன் சுவாமி! எதிரியையும் மன்னித்து ஆட்கொண்டருளிய ஏகநாயகனே! ஏழை என்னை வாழ வைத்தருளிய ஏந்தலே! கருணைக் கடலே! உமது கருணையை என்றும் மறவேனையா!

(அப்போது அங்கே தேவேந்திரன் முதலானோர் (இந்திராணி, தேவேந்திரன், நாரதர், முனிவர்கள் இருவர்) வந்து விநாயகப்பெருமானைப் போற்றித் துதிக்கின்றனர்.)

பாடல் :

விநாயகத் தேவனே! மெய்ப்பொருளே!
விக்கினங்கள் தீர்த்துவைத்த வித்தகனே!
கௌரியம்மை பாலனே! கணேஸ்வரனே!
காலமெல்லாம் நன்றிசெய்வோம் கஜமுகனே!
(விநாயகத் தேவனே!)

புத்திப் பிரியாயனே! புவனேசன் புத்திரனே!
பொற்பாதம் போற்றிசெய்தோம் அற்புதனே!
சர்வாத்மகாயனே! சாந்தசொரூபனே!
சிருஷ்டி கர்த்ரே! சிரம்பணிந்தோம்.
(விநாயகத் தேவனே!)

(வானிலிருந்து மலர்மாரி பொழிகின்றது.
எங்கும் மகிழ்ச்சிப்பிரவாகம்.)

— திரை —

மங்களம்



உ



# "நீறு பூத்த நெருப்பு"

(இதிகாச நாடகம்)

"ஆரையூர் இளவல்"

## காட்சி 1:

(மகாவிஷ்ணு, மகாலட்சுமி, திருப்பாற் கடலில், ஆதிசேடன்மீது அமர்ந்திருத்தல்.)

பின்னணி ஒலி:

''ஹரிஓம் நமோ நாராயணாய நமஹ! ஹரி ஓம் நமோ நாராயணாய நமஹ. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு பல கோடி நூறாயிரம்! மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்சேவடி செவ்வி திருக்காப்பு! உன்சேவடி செவ்வி திருக்காப்பு!

இலட்சுமி: கேசவா, தாமோதரா, மாயவா, மாதவா, நந்த கோபாலா, ஜெகதீசா, புருசோத்தமா, அனாதரட்சகா, ஆபத்பாந்தவா, ஆதிமூலமே.

விஷ்ணு: தேவி! பத்து நாமங்கள்கூறி பயபக்தியோடு அழைக்கின்றாய் பரவசமடைந்தோம். இந்தப் பக்தியின் இரகசியந்தான் என்னவோ.

இலட்சுமி: தேவா! பத்து நாமங்கள் என்ன, பத்தாயிரம் நாமங்கள் சொன்னாலும், சொல்லச்சொல்லச் சுவைக் கும், நெஞ்சம் இனிக்கும், நீலவண்ணக் கண்ணனல்லவா தாங்கள். ஆபத்பாந்தவா என்று அன்பர்கள் நெஞ்சுருகி அழைக்கும்போது, ''அஞ்சேல் அபயம் தந்தோம்'' என அருளி புதுப்புது அவதாரங்கள் எடுக்கும் புருசோத்தம ராயிற்றே தாங்கள்.

விஷ்ணு: ஆம் தேவி எப்பொழுது உலகில் தர்மம் அழிந்து, அதர்மம் அதிகரிக்கின்றதோ அப்பொழுதெல்லாம் நான் அவதரிக்கின்றேன்.

இலட்சுமி: அன்றொருநாள் பிரம தேவனிடமிருந்த இருக்கு, யசூர், சாம, அதர்வண என்னும் நான்கு வேதங்களை யும சோமுகாசூரன் என்பவன திருடிக்கொண்டு போய் கடலுக்கடியில் ஒளித்திருந்தான்.

விஷ்ணு: அவ்வேதங்களை மீட்பதற்காகவே மச்ச அவதாரம் எடுத்தேன்.

இலட்சுமி : துருவாசரின் சாபத்தினால் இந்திரனிடமிருந்த செல்வங்களெல்லாம் திருப்பாற்கடலில் மறைந்து கொண்டன. அதை மீற்பதற்காகவே மந்தரகிரியை மத்தாகவும், வாசுகியைத் தாம்பாகவும் பூட்டி தேவர் களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்தபோது மந்தரகிரியை கடலில் மூழ்கா வண்ணம் ஆமை உருவங் கொண்டு தங்கள் திருமுதுகில் தாங்கினீர்கள்.

விஷ்ணு : இதுவே, எமது கூர்ம அவதாரத்தின் மகிமை யாகும்.

இலட்சுமி : இரணியாக்கதன் பூமியைப் பெயர்த்துக்கொண்டு போய் பாதாளத்தில் ஒளித்துவைத்திருந்தான்.

விஷ்ணு : அதை மீட்பதற்காக வராக அவதாரம் எடுத்தேன்.

இலட்சுமி : தானே கடவுள். தன்னையே வணங்கவேண்டும் என்ற இரண்யனுக்கு ''கடவுள் நீ அல்ல. அவர் தூணி லும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார் என் துயர் தீர்க்கும் தூய இறைவன்'' எனத் தூணைச் சுட்டிக் காட்டினான் தனயன் பிரகலாதன். உடனே வெறி கொண்ட இரணியனால் தூண் உடைக்கப்பட்டது.

விஷ்ணு : அங்கே நரசிங்க அவதாரம் எடுத்தேன்.

இலட்சுமி : தேவேந்திரன் சிம்மாசனததில் அமர்ந்து, தேவர் களுக்கெல்லாம் இடர்செய்த மாவலிச் சக்கரவர்த்தி யிடம் மூன்றடி நிலம் யாசகம் பெற்று பூமியையெல் லாம் ஓரடியாகவும் ஆகாயத்தையெல்லாம் மற்றோரடி யாகவும் அளந்து மூன்றாவது அடியை மாவலிச் சக்கர வர்த்தியின் சிரசின்மேல் வைத்து அழுத்தி அவனைப் பாதாளலோகம் சேர்த்தீர்கள்.


விஷ்ணு : அதற்காகவே வாமனாவதாரம் எடுத்தேன்.

இலட்சுமி : காத்தவீரியன் தனக்கும் தனது நால்வகைச் சேனைகட்கும் அறுசுவை அன்னமிட்ட ஜமதக்கினி முனிவரின் காமதேனுவைக் கபடமாகக் கவர்ந்துசென் றான்.

விஷ்ணு : அதை மிட்பதற்காகவே பரசுராமன் அவதாரம் எடுத்தேன்.

இலட்சுமி : அகலிகைக்குச் சாப விமோசனத்தையும், தசரத னுக்குப் புத்திர சோகத்தையும் பரதனுக்குப் பட்டத்

## "ஆரையூர் இளவலின்"
## "தர்மம் காத்த தலைவன்"



வரலாற்று நாடகத்தில் ஓர் நெஞ்சைத் தொடும் காட்சி.

நடிப்பவர்கள்: *(இடமிருந்து வலம்)* வை. க. கணேசானந்தம் *(ஸ்ரீ சங்கபோதி மன்னர்)*, செல்வி தா. வசந்தகுமாரி *(மகாராணி)*, க. குருநாதன் *(அமைச்சர்)*.

இடம் : மட்டக்களப்பு மாநகரசபைக் கலையரங்கம்.
காலம்: 07–11–1976 ஞாயிற்றுக்கிழமை மாலை.

இந்நாடகம் மண்முனை வடபிரிவுக் கலாசாரப் பேரவை நடாத்திய வரலாற்று நாடகப் போட்டியில் முதலாம் பரிசு பெற்ற நாடகமாகும். இந்நாடகத்தில் கிராமவாசியாகக் குண சித்திர பாத்திரமேற்று நடித்த திரு. ரி. கென்றிக் சிறந்த நடிகருக்கான விருது பெற்றார்.

தையும், அனுமனுக்குச் சிரஞ்சீவித் தன்மையையும், வாலியின் தம்பி சுக்கிரீவனுக்கு மகுடத்தையும் தந்து, இலங்காபுரி சென்று இராவணனை வென்று அவன் தம்பி விபீடனை அரியாசனம் ஏற்றி அகமகிழ்ந்தீர்கள்.

விஷ்ணு : இதுவே எமது இராம அவதாரத்தின் நோக்க மாகும்.

இலட்சுமி : அக்கிரமத்திற்கென்றே தோன்றிய அரக்கர்கள் அவனியெங்கும் நிறைந்து வஞ்சனை, சூது, கொலை முதலிய பாப காரியங்களை தினசரி செய்துகொண்டிருந் தார்கள். இதனால் பூமி பாரம் தாங்கமுடியாமல் முறையிட்ட பூமாதேவியிடம்...

விஷ்ணு : பூ பாரத்தைப் போக்குவதாக அருளிச்செய்து பலராம அவதாரம் எடுத்தேன்.

இலட்சுமி : கீதையை ஓதலும் ஓதுவித்தலும், கேட்டலும், எங்கெல்லாம் நடக்கின்றனவோ அங்கெல்லாம் நான் இருக்கின்றேன். என்று திருவாய் மலர்ந்தீர்கள்.

விஷ்ணு : ஆம் தேவி... கீதைக்காகவே கிருஷ்ண அவதாரம் எடுத்தேன். பொருள்களைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பவ னுக்கு அவற்றின்மேல் பற்று உண்டாகின்றது. கோபத்தி னின்று ஒரு மயக்கம் உண்டாகின்றது பெருமயக்கத்தி னின்று நினைவின் கேடு விளைகின்றது. நினைவுக் கேட்டால் பகுத்தறிவு அழிகின்றது. பகுத்தறிவு அழியப் பெற்ற மனிதன் முற்றும் அழிந்துபோகின்றான்.

பின்னணி: இதற்கோர் எடுத்துக்காட்டுத்தான்......

...... நீறு பூத்த நெருப்பு ......

---

## காட்சி : 2

இடம் : துருபதன் மாளிகை... பாஞ்சால தேசத்து மன்னன் வசந்த மண்டபத்தில் உலாவிக்கொண்டிருக்க, துரோணர் வருகை)

துரோணர் : வாழ்க மன்னன்! வாழ்க நின்கொற்றம்! வாழ்க உமது வளமார் திருநாடு! வாழ்க! வாழ்கவே.

துருபதன்: தாங்கள் யார்?

துரோணர்: அறிந்த முகந்தான், அருகமர்ந்து பேசிமகிழ்ந்த முகம்தான்.

துருபதன்: ம் ...... தெரியவில்லையே!

துரோணர்: என்ன... என்னைத் தெரியவில்லையா? தேனை மறந்த தேனீக்களையும், தெள்ளுதமிழ் பாவை மறந்த பாவலர்களையும், தேவகானம் மறந்த குயில்களையும் காண்பது அரிது அரசே!

துருபதன்: அப்படியென்றால்...

துரோணர்: தாங்கள் என்னை மறந்துவிடமுடியாது என்று கூறுகிறேன்.

துருபதன்: அப்படியென்றால்...

துரோணர்: தாங்கள் என்னோடு விளையாடுகிறீர்களா, அல்லது விசமத்தனம் புரிகின்றீர்களா என்று புரியாது விழிக்கின்றேன் மன்னவா!

துருபதன்: போதும் நிறுத்து. வாழ்த்திக்கொண்டுவந்து வம்பளக்கிறாய். உத்தரவின்றி உள்ளே வந்து உன்மத்தன் போல் உளறுகின்றாய்.

துரோணர்: நான் யார் என்று சொல்லித்தான் தாங்கள் அறியவேண்டுமா?

துருபதன்: அறிவிலி அறிந்துபேசு. அரசன் முன்நிற்கின்றாய் என்பதை, உன் அதிக பிரசங்கத்தனம் என் ஆவலை அடக்கி, ஆத்திரத்தைத் தூண்டிவிடும். அப்புறம் காத்துக்கொண்டிருக்கின்றது சிறைக்கதவு. சிந்திக்கத் தெரியாத உன்னைச் சிறைப்படுத்தி, சித்திரவதை செய்து சின்னாப்பின்னப்படுத்திவிட.

துரோணர்: மன்னிக்கவேண்டும் மன்னவா மன்னிக்கவேண்டும், நான் தங்கள் பால்ய நண்பன். ஆச்சிரமத்தில் தங்களுடன் ஒன்றாக கல்வி கற்றவன். என் பெயர் துரோணர்.

துருபதன்: ஓ! துரோணரா? (ஏளனமாக) என்ன பிராமணரே, ஏது இவ்வளவு தூரம்?

துரோணர்: நாம் பழைய நண்பர்களல்லவா, தங்களைப் பார்த்து பேசி, பழகிப்போகலாம் என்று வந்தேன்.

துருபதன்: பிராமணரே, பித்துப்பிடித்தவன்போல் விதற்று கின்றீரே. பிரிய நண்பன் என்று சொல்லிக்கொள்வதற்கு உன்னிடம் என்ன தகுதி இருக்கின்றது.

துரோணர்: அன்றைய நாட்களில் ஆச்சிரம வாசத்தில் அருகமர்ந்திருந்தோம், அஸ்திரம் பயின்றோம், பல ஆயுதப் பயிற்சியும் பெற்றோம், நெருங்கிப் பழகினோம், நிழல் போல் தொடர்ந்தோம். அருமை நண்பரென அனைவரும் பாராட்டினர்.

துருபதன்: இன்று நான் அரசன், நீயோ அன்னக்காவடி. முடிதரித்தவன் நான், முட்டாள் தரித்திரன் நீ! முறை கொண்டாடுகிறாயா, நட்பின் நிறை தெரியாதவனே.

துரோணர்: மறையோதியவன் நான். மற்றும் நீதி நெறி முறைகற்றுத் தேறியவன். தேய்ந்துவிடும் பிறையல்ல மன்னா நட்பு என்பது அது வளர்ந்துகொண்டே இருக்கும் வளர்மதி.

துருபதன்: பொங்கும் நிலாவிலும் மங்கும் கறைகண்ட காவலன் நான். பிறைகண்டு பேதலிக்கும் பிராமணரே, மனக்குறையுள்ளதுதான் உனக்கு. ஆனால் நிறைவேறாது உன் பேராசை. வீணே நெடுமூச்சு விட வேண்டாம்.

துரோணர்: பதவிக்கு வந்ததும் பகட்டாகப்பேசும் தாங்கள் தானே, அன்று பாலிய வயதிலே பள்ளிப் பருவத்திலே, நாம் ஆச்சிரமத்தை விட்டுப் பிரியும்போது ''துருபதா இன்றோடு நம் நட்பு மறைந்திடுமா'' என்று நான் கேட்டதற்கு, அல்ல துரோணா நீ என்று என்னை நாடி வருகிறாயோ அன்றே உனக்கு பாதி ராட்சியம் தருவேன் என்று பகட்டாகக் கூறினாயே.

துருபதன்: பரத்துவாசன் மகனுக்கு பாதிராச்சியம் வேண்டுமா?

துரோணர்: அப்படி நான் கேட்கவில்லை. அந்த நோக்கத்தோடு நான் வரவும் இல்லை.

துருபதன்: வேறு எதற்காக வந்தாய்? நட்பு என்னும் மகுடியை ஊதி, நல்ல பாம்பாக என்னை ஆட்டுவித்து,

கொள்ளை கொள்ளையாக என் செல்வத்தை அள்ளி அள்ளிக்கொண்டு போகலாம் என்றா...?

துரோணர்: அபச்சாரம்... அபச்சாரம்...

துருபதன்: அந்தணரே... அறவழி நடக்கவேண்டியவரே... என் அறிவுரை கேள்... அரசனும் ஆண்டியும், நண்பர்களாக இருக்கமுடியாது. இருக்கவும் கூடாது. அறிவிலி அறிஞனுக்கும், தரித்திரன் தனவானுக்கும், கோழை வீரனுக்கும் எப்படி நண்பனாவான்... செல்வம் சமனாக இருந்தால்தான் சினேகிதம். ராட்சியம் இல்லாதவனுக்கு இராசாவுடன் என்ன நட்பு. இதை என்றும் சிந்தையில் வைத்துக்கொண்டு இங்கிருந்து சென்றுவிடு.

துரோணர்: நண்பன் என்று நயமுடன் வந்து சொந்தம் கொண்டாடினேன். ஆனால் நீயோ சொறிநாயெனத் துன்புறுத்தித் துரத்துகின்றாய். சிம்மாசனமும், செங்கோலும் கிடைத்துவிட்ட செருக்கிலே, சிங்கம்போல் கர்ஜிக்கின்றாய் வேந்தன் என்ற மமதையிலே வேங்கை போல் சீறுகின்றாய்.

துருபதன்: சினம் பொங்குகின்றது சீக்கிரம் சென்றுவிடு இங்கிருந்து.

துரோணர்: செல்வதற்காகத்தான் வந்தேன். சிரம் தாழ்த்தி, சீருடை அணிந்து, உனக்கு சேவகம் புரிவதற்காகவல்ல. நட்பின் நயமறிந்து போகவந்தேன். கொற்றவனே அறிந்துகொண்டேன்... பசியினால் பாலின்றிப் பதறுகின்ற பாலகனுக்கு பாலில்லையே என பரதவித்த என் பத்தினியாள் பழகிய நண்பன் பாஞ்சால நாட்டு நல்ல அரசனிடம் சென்று ஒரு பசுமாடாவது வாங்கிவாருங்கள் பாலகனுக்குப் பாலூட்ட எனப் பணித்தாளே. பாவம் அவளுக்கு எங்கே தெரியப்போகின்றது. நான் இங்கே அடைந்த அவமானம். (சோகத்துடன் நடக்கிறான்)

துருபதன்: துரோணா நில் அங்கே! என்னசொன்னாய்... பாலின்றிப் பசியினால் பதறுகின்ற பாலகனுக்கு பாலூட்ட ஒரு பசுமாடாவது வாங்கிவா என்று உன் பத்தினியாள் பணித்தாளா, ம்... தருகின்றேன்... ஒன்றல்ல ஓராயிரம் பசு வேண்டுமானாலும் தருகின்றேன். தானமாக... (ஏளனமாக) நீ பிராமணனல்லவா தானம் வாங்கத் தயங்குவானேன்.

துரோணர்: (கோபமாக)...... துருபதா! இதுவரை நான் தானம் வாங்கவுமில்லை அந்த நிலைக்கு நான் இன்னும் வரவுமில்லை. அப்படியொரு நிலை எனக்கு ஏற்பட்டாலும்கூட நான் உன்னிடம் வரமாட்டேன். நான் வருகிறேன்...

துருபதன்: வரவேண்டாம் போய்விடு. (ஏளனமாகச் சிரித்து) வரட்டுக்சர்வத்துடன் வந்த குருட்டுப் பிராமணரை விரட்டு விரட்டு என்று விரட்டிவிட்டேன். வழிதடுமாறி கூனிக்குறுகிக் குற்றுயிராகப் போகின்றான். (மீண்டும் சிரிக்கின்றான்)...

— திரை —

---

## காட்சி : 3

இடம்: ஆயுதப் பயிற்சிக்கூடம்.. (துரியோதனன், கர்ணன், அர்ச்சுனன் ஆகியோர் துரோணரிடம் ஆயுதப் பயிற்சி பெற்று முடிந்தவுடன்)

துரோணர்: வீரர்களே! விற்போரிலும், மற்போரிலும், வல்ல சூரர்களே! ஆயுதப் பயிற்சி அனைத்தும் அறிந்துகொண்டீர்கள். அகிலமனைத்துமுள்ளோர் உங்கள் நாமம் கேட்டதும் அஞ்சி நடுங்குவார்கள். இனி உங்களுக்கு எதிரிகளே இல்லை. எடுத்த காரியம் யாவற்றிலும் வெற்றிபெற்று, சிரஞ்சீவியாக வாழுங்கள்.

அர்ச்சுனன்: குரு சிரேஷ்டரே! தாங்கள் கற்ற வித்தைகள் அனைத்தும் கற்றுத்தந்தீர்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் ஆய போர்க்கலைகள் அனைத்தும் கற்றுக்கொண்டோம். வீராதி வீரர்களாக, விண்ணும் மண்ணும் புகழும் வீரர்களாக, வியத்தகு முறையில் எடுத்த காரியம் அனைத்திலும் வெற்றிவாகை சூடுவோம். இது உறுதி. இத்தகைய உயர் நிலைக்கு எங்களை ஆளாக்கிய தங்களுக்குச் செய்யும் கைமாறு என்னவென்று தெரியாது கலங்குகின்றோம் சுவாமி.

கர்ணன்: வீரரெல்லாம் வியக்க நீங்கள் எங்களையெல்லாம் உருவாக்கிய ஆசானாக, ஆசிரியராக... அறிவிற் சிறந்த நற்குருவாக, அஸ்திர வித்தைகளும், ஆயுத வித்தை

களும் அமர்க்களத்திலே சமர் செய்யும் போர்த்தந்திர மும் கற்றுத்தந்தீர்கள். களிப்பு மிகக்கொண்டோம். களத்தினிலே சுடும் பகைவர் எவர்வந்து எதித்திடினும் கணப்பொழுதில் அவர்களைக் காலனுக்கு விருந்து வைப்போம். ஆனால் குலமும் கோத்திரமும் பாராது கண்ணும் கருத்துமாக கலை தந்து குன்றிடைத் தீப மாக ஒளிவீசும் தங்களுக்கு குரு தட்சணையாக என்ன வைப்போம்?

துரோணர்: வீரர்களே! உங்கள் உள்ளம் புரிந்து என் உள்ளம் உவகையால் நிறைகின்றது. குருவுக்குத் தட்சணையாக எதைக் கொடுக்கலாம், எப்படிக் கொடுக்கலாம் என்று எதுவும் புரியாது குழம்புகின்றீர்கள். உங்கள் குழப்பத் தைப் போக்கி குதூகலத்தைப் பெற்றுத்தருவது குரு வாகிய எனது தலையாய கடமையல்லவா, ஆனால் நீங்கள்...

துரியோதனன்: இராட்சியமும், இராச உபசாரமும், இரத் தினமும், முத்தும், பவளமும் இன்னும் ஏராளம் ஏராளம் அணி மணிகளும் ஆடை ஆபரணங்களும் தங்களுக்குக் குரு தட்சணையாக நாம் தரக் காத்துக்கொண்டிருக்கின் றோம்.

கர்ணன்: செந்நெல் விளைந்த கழணிகளும், செந்தாமரை மலர்ந்த தடாகங்களும்... வண்ணப் பூஞ்சோலைகளும்... வழை, பலா, தென்னந்தோப்புகளும், கறித்தோட்டங் களும், காடுகளும் மலைச்சாரல்களும் காணிக்கையாகத் தருவதற்குக் காத்திருக்கின்றோம்.

அர்ச்கனன்: ஆச்சாரியரே!... சுருங்கச் சொன்னால் அகிலம் அனைத்தையும் வெற்றிகொண்டு அடிபணிய வைக்கின் றோம்.

துரோணர்: (சிரித்துக்கொண்டே) நீங்கள் எதையும் தரச் சித்தமாயிருக்கின்றீர்கள் என்பது எனக்கு நன்கு தெரி யும். ஆனால் வீரர்களாகிய நீங்கள் தருவதற்கு இலகு வான பரிசாக இல்லாமல் வீரப்பரிசாக வெற்றிப் பரி சாக அமையவேண்டுமென நான் விரும்புகின்றேன்.

அர்ச்சுனன்: அது எதுவாக இருந்தாலும் இப்பொழுதே சொல்லுங்கள் குருதேவா. கொண்டுவந்து தங்கள் காலடியில் சமர்ப்பிக்கின்றேன்.

துரோணர்: அப்படியா! பாஞ்சால தேசத்து மன்னன் துருபதனை எனக்குத் தாருங்கள். அவனே நீங்கள் அளிக்கும் மிகச் சிறந்த குருதட்சணையாகும்.

மூவரும்: இதோ! .. இப்போதே செல்கின்றோம்...

துரோணர்: சற்றுப்பொறுங்கள். அந்த அற்பவனைப் பிடிப்பதற்கு அனைவரும் செல்லவேண்டிய அவசியமில்லை... (சிறிது சிந்தித்து) அப்பணிக்குத் துரியோதனன் மட்டும் செல்லட்டும்.

துரியோதனன்: நன்றி குருதேவா, மிக்க நன்றி .. தங்கள் ஆணையைச் சிரமேற்கொண்டேன். இந்த சந்தர்ப்பத்தை தகுந்த முறையில் பயன்படுத்துவேன். சிறிது நாழிகையில் துருபதன் உங்கள் காலடியில் கிடப்பான் என உறுதிகூறுகின்றேன்.

கர்ணன்: ஆசிரியரே! .. எந்தச் சந்தர்ப்பத்திலும் துரியோதனனைவிட்டுப் பிரியாத நான் இச்சந்தர்ப்பத்திலும் அவனுடன் செல்ல விரும்புகிறேன்.

துரோணர்: நல்லது. இருவரும் சென்று வெற்றியுடன் திரும்பி வாருங்கள்.

கர்ணன்: எடுத்த காரியம் யாவிலும் வெற்றி. எங்கு நோக்கிலும் வெற்றி. தடுத்து நிற்பவர் யாராயிருப்பிலும் தவிடுபொடியாக்கிவிடுவோம்.

துரியோதனன்: நாங்கள் சென்றுவருகின்றோம் குருவேவா! (இருவரும் செல்கின்றனர்).

அர்ச்சுனன்: ஆச்சாரியர் அவர்களே என் வீரத்தில் நம்பிக்கை இல்லாதபடியினால்தானே துருபதன் துடுக்கை அடக்கி துணிவுடன் பிடித்துவரும்படி துரியோதனனை அனுப்பினீர்கள்.

துரோணர்: பார்த்திபா. பார்புகழும் உன் வீரத்திறன் கண்டு பலமுறை பலரறியப் பாராட்டியவன் நான், ஆனால் பார்புகழும் உன் பராக்கிரமத்தைப் பாஞ்சால மன்னனைப் பிடிக்கும் சின்னஞ் சிறிய காரியத்துக்குப் பயன்படுத்தக் கூடாதென்பதற்காகவே துரியோதனனை அனுப்பினேன். என்னைக் குறைகூறாதே விஜயா.

அர்ச்சுனன்: குறை நினைக்கவில்லை. குருவின் ஆசையைப் பூர்த்திசெய்யும் வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்று தான் வருந்துகின்றேன் அவ்வளவுதான்.

துரோணர்: வருத்தப்படாதே. நடக்கப்போவதைப்பார்.

— திரை —

---

## காட்சி : 4

இடம்: துரோணர் மாளிகை (துரோணர் தனிமையில்).

துரோணர்: இந்தத் துரோணரை யார் என்று நினைத்துக் கொண்டான் அந்த அற்பன் துருபதன். ஐவர்க்கும் ஆசானாக அமர்ந்து, அகிலப்புகழ் பெற்றிருக்கும் என் அருகில் அமரக்கூட அருகதையற்ற அந்த அசந்தை பிடித்தவனை அடிமைபோல் இழுத்துக்கொண்டு வருவார்கள் என் வீரர்கள். இப்போதாவது புரிந்துகொண்டிருப்பான் அந்த புத்திகெட்டவன். என்னைப்பற்றி, என் சக்திபற்றி, என் சர்வ வல்லமைபற்றி. (சிரித்துக் கொண்டு) என்னைப் பழித்தவனைப் பழிக்குப்பழி வாங்கிவிட்டேன்.

(அப்போது துரியோதனனும், கர்ணனும் கவிழ்ந்த தலையுடனும் கலங்கிய கண்களுடனும் வருதல்).

துரோணர்: (ஆவலுடன்) துரியோதனா! கர்ணா! வந்து விட்டீர்களா! வாருங்கள் வாருங்கள். எங்கே என் குரு தட்சனை சீக்கிரம் தாருங்கள். நீங்கள் சென்ற நேரத்தில் இருந்து ஒவ்வொரு நாழிகையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்.

துரியோதனன் + கர்ணன்: ...(மௌனம்).

துரோணர்: ஏன் மௌனமாய் நிற்கின்றீர்கள்? கவிழ்ந்த தலையுடனும், கலங்கிய கண்களுடனும் கவலையே உருவாக நிற்கக்காரணம்? ஏன் சென்ற காரியம் சித்தியாகவில்லையா? துருபதனை உங்களால் பிடிக்கமுடியவில்லையா?

கர்ணன்: முழுமூச்சாக முயற்சி செய்தோம், ஆனால் முடிய வில்லை. முதற்தோல்வி முற்றும் தோல்வியாகிவிடாது. இன்னும் சிலநாட்கள் அவகாசம் தாருங்கள். அவசியம் தங்கள் ஆவலைப் பூர்த்திசெய்கின்றோம்.

துரோணர்: சர்ணா! கனகச்சிதமாகக் கதை அளப்பதில் கைதேர்ந்த வீரனாக இருக்கின்றாயேதவிர காரியத்தி லும், கத்திவீச்சிலும் கைதேர்ந்த வீரனாக இல்லையே என்பதை எண்ணும்போதுதான் நான் வேதனை அடை கின்றேன். துரியோதனா... நீ ஏன் சும்மா நின்றுகொண் டிருக்கின்றாய். சர்ணனைப்போல் நீயும் ஏதாவது...

துரியோதனன்: மன்னிக்கவேண்டும் குருவே, மன்னிக்கவேண் டும். நாங்கள் கடமையில் தவறிவிட்டோம். இல்லை இல்லை... தோல்வி கண்டுவிட்டோம். இது எங்களை எவ்வளவு வருத்துகின்றது தெரியுமா? போகட்டும் என்றாவது ஒருநாள் அவனைப்பிடித்து உங்கள்முன் மண்டியிடச் செய்கின்றோம். இது உறுதி. (அச்சமயம் அர்ச்சுனன் வந்துகொண்டு)

அர்ச்சுனன்: ஆசிரியர் அவர்களே, இப்போதாவது விடை கொடுங்கள். விரைவாகச்சென்று தங்கள் இலட்சியத்தை இனிதே நிறைவேற்றிவைக்கிறேன்.

துரோணர்: தனஞ்சயா! தக்க தருணத்தில்தான் தரிசனம் தருகிறாய், தடையேதும் இல்லை தாராளமாக உன் கடமையைச்செய்.

அர்ச்சுனன்: விடைபெறுகின்றேன் குருவே.

துரோணர்: சென்றுவா... செருக்களத்திலே எதிரியைச் சிறை பிடித்து உயிருடன் கொண்டுவா. வெற்றி உனதே.

— (காட்சி மாறுகின்றது) —

(அர்ச்சுனன் வருகின்றான்)......

துரோணர்: காண்டீபா! சென்ற காரியம் என்ன காயா, கனியா?

அர்ச்சுனன்: கனி பறிக்கச்சென்ற நான் காயுடனா திரும்பு வேன்? அது என் காண்டீபத்துக்கு மகிமை அல்லவே! தாங்கள் எதிர்பார்த்தபடி கனியுடன்தான் திரும்பியிருக்

கின்றேன். தங்கள் உள்ளத்தைக் கனியவைக்க உவகை வெள்ளத்தில் மூழ்கவைக்க இந்த சின்னஞ்சிறு காரியத்தைக்கூடவா என்னால் சாதிக்கமுடியாது?

துரோணர்: பார்த்திபா! சாதனையில் சிறந்தவன், சான்றோர் புகழும் வீரன் நீ என்பது ஏற்கனவே தெரியுமே.

அர்ச்சுனன்: குருதேவா! தங்கள் ஆணைப்படி பாஞ்சாலம் சென்றேன். அங்கு பாய்ந்துவந்த படைகளையெல்லாம் பரலோகம் சேர்த்தேன். பதறியோடிய மன்னன் துருபதனைப் பக்குவமாகச் சிறைபிடித்துத் தேர்ச்சில்லில் கட்டி இழுத்துவந்து தெருவில் நிறுத்தியிருக்கின்றேன். சீறிப்பாய்ந்த சிங்கம் கூனிக்குறுகி வேடிக்கைபார்க்கும் மக்கள் மத்தியில் அவமானத்தால் முகம் சிவக்க நிற்கின்றது.

துரோணர்: அப்படியா! நல்ல காட்சி, நல்ல காட்சி இந்தக் காட்சியைக் காணத்தானே காலமெல்லாம் காத்திருந்தேன். இப்போதுதான் என் உள்ளம் குளிர்கின்றது. உவகை வெள்ளம் பெருகுகின்றது. துரியோதனா, கர்ணா, சீக்கிரம் வாருங்கள் விஜயன் தன் வெற்றிப் பரிசை வீதியிலே நிறுத்திவைத்திருக்கின்றானாம் அந்தக் கண்கொள்ளாக் காட்சியை நாம் கண்டு மகிழ வேண்டாமா?

(நால்வரும் செல்கின்றனர்).

தெருக்காட்சி: (துருபதன் சங்கிலியால் கட்டப்பட்டு நிற்கும் காட்சியைக் காண்கின்றனர்).

துரோணர்: பல்குணா! பகைவனைப் பக்குவமாகப் பிடித்துக் கட்டியிருக்கும் இந்தக்காட்சி என் கண்களுக்கு பெரு விருந்தாக அமைந்திருக்கின்றது. உனக்கு என் நல் வாழ்த்துக்கள்.

அர்ச்சுனன்: (துருபதனை இழுத்து துரோணர்முன் நிறுத்தி) குருதேவா! இதோ என் குருதட்சனை.

துரோணர்: மதிப்புக்குரிய வீரனே, உனது குருதட்சனையை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றேன். இனி நீ போய் ஓய்வெடுத்துக்கொள்ளலாம்.

(அர்ச்சுனன் துரோணரை வணங்கிவிட்டுச் செல்கின்றான். துரியோதனனும், கர்ணனும் பின்செல்லல்).

துருபதன்: (ஆவேசத்துடன்) குள்ளக்குணம் படைத்த கள்ளப் பிராமணரே குருதட்சனை என்ற பெயரிலே உன் குரோதத்தை தீர்த்துக்கொண்டுவிட்டாய் அல்லவா? குருகுலத்தின் புனிதத்தையே குழிதோண்டிப் புதைத்து விட்டாயே.

துரோண: (ஏளனமாக) யாரது? எங்கேயோ, எப்போதோ கேட்ட குரலாக இருக்கின்றதே ஆ?... ஆமாம் பார்த்த உருவமாக இருக்கின்றது. யார் அப்பா நீ?

துருபதன்: ஓ... ஏளனம் செய்கின்றாயா, ஏமாளி என்று நினைத்து? என்னுடன் நேர் எதிர் நின்று யுத்தம் செய்யமுடியாத முதுகெலும்பற்ற மூடனே.

துரோணர்: பல்லவி பாடும் பாஞ்சால நாட்டின் பாதுகாவலர், அன்று பஞ்சுமெத்தையிலே அமர்ந்து, பாவையர் தம் கொஞ்சும் மொழியில் மெய்மறந்து, பருவத்துடிப்பிலே பாலிய நண்பனையே தூற்றி அவமானப்படுத்திய துருபத மகாராஜனே. இப்போதாவது இந்தத் துரோணர் எத்தகைய வல்லமை வாய்ந்தவர் என்று புரிந்து கொண்டீரா? நன்றாக உணர்ந்துகொண்டீரா?

துருபதன்: வேதியனே, வேங்கையுடன் விளையாடாதே, சரங்களைக் கட்டுவித்துவிட்டு கள்வெறி கொண்டவன் போல் கர்ச்சிக்காதே. கட்டவிழ்த்துவிட்டு, கரத்திலே வில்லேந்தி களத்துக்குவா. கணையைத்தொடு, உன் வீரத்தையும், விவேகத்தையும், வில்லின் திறத்தையும் பார்த்துவிடுகின்றேன்.

துரோணர்: (சிரித்துக்கொண்டு) நண்பா! உன் வீரத்திலும், வில்வித்தையிலும் எனக்கு நிறைய நம்பிக்கை உண்டு. ஆனால் நம் நட்பில் அதையும்விட மேலான நம்பிக்கை வைத்திருக்கின்றேன்.

துருபதன்: நட்பைப்பற்றிப் பேசுகின்றாயே. நா கூசவில்லையா உனக்கு?

துரோணர்: அன்று நட்பின் பேரில் நாடிவந்த என்னை, எள்ளிநகையாடி ஏளனப்படுத்தியதும் அல்லாமல் நாடாளுபவனுடன் நட்பாயிருக்க நான் நாடாளுபவ

னாக இருக்கவேண்டுமென்றாய். அதற்காக இந்த யுத்தம் அவசியமாயிற்று. ஆனால், உன்மீதுள்ள நட்பின் நயத்தால் உன் உயிருக்கு ஒருவித ஊறும் விளையாது உயிருடன் பிடித்து அழைத்துவரும்படி கூறினேன்.

துருபதன்: அழைத்துவரவில்லை. என்னைப் பிடித்துக்கட்டி இழுத்துவந்தார்கள் எதற்காக?

துரோணர்: எதற்காகவா! திரும்பவும் உன்னுடன் நண்பனாயிருக்க, அதனால் பாதி ராச்சியத்தை உனக்கே தருகின்றேன். என்னோடு நடப்பாயிருப்பதற்கு உமக்குச் சமராச்சியம் வேண்டுமல்லவா... (சிரிக்கின்றான்).

துருபதன்: உன் வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டாய், என்னைப் பழிக்குப்பழி வாங்கிவிட்டாய்.

துரோணர்: (துருபதனின் கட்டுகளை அவிழ்த்து விட்டுக் கொண்டே) நண்பா! என்னை மன்னித்துவிடு. மனக்குறை எண்ணாதே உன்னைச் சகல மரியாதையுடனும் அனுப்பிவைக்கின்றேன்.

— திரை —

---

## காட்சி : 5

இடம்: காடு (துருபதன் சிவனை நோக்கிக் கடுந்தவம் செய்துகொண்டிருக்கின்றான்).

துருபதன்: ஓம்... சிவாய நம.. ஓம் சிவாய நம...
ஓம்... சிவாய நம... ஓம் சிவாய நம...
ஓம்... சிவாய நம... ஓம் சிவாய நம...

(பல வருடங்களின்பின்)

(துருபதனை வைத்துப் புற்று வளர்கின்றது. மெலிந்து தாடியுடன் காட்சியளிக்கின்றான். அப்போது சிவன் காட்சிகொடுத்தல்).

சிவன்: பக்தா! உன் பக்திக்கு மெச்சினோம்! உன் வேண்டுதலின் படியே உனக்கு உன் மனைவிமூலம்... ஓர் மகனும், ஓர் மகளும் பிறப்பார்கள். அவர்கள்மூலம் உன் எண்ணம் நிறைவேறும்.

துருபதன்: (மகிழ்ச்சி மேலீட்டால்) இறைவா, இறைவா என் எண்ணத்தை ஈடேற்றிய மறை முதல்வா! அமலனே!! இந்த அடியேனுக்கு அருள் பாலித்த அருட்பெருஞ் சோதியே! ஆண்டவா! தில்லையில் திருநடனம் செய்யும் திருநீலகண்டா! என் துயர் நீக்கிய அப்பனே! என்றும் மறவேன் ஐயா... (கண்மூடி வணங்குகின்றான்... சிவன் மறைதல்).

(துருபதன் உருக்கமாகப் பாடுதல்)

துருபதன்: இறைவா... இறைவா... இறைவா...
இன்னருள் மறவேனையா
இகபரம் இரண்டும் ஒன்றானவனே,
இமயத்திலே உமை பங்கானவனே!
இன்பமும் துன்பமும் ஆனவனே... - எந்தன்,
இதயத்திலே கோயில் கொண்டவனே
(இறைவா)

அலைகடல் துரும்பென அலைவோர்க்கு
அருள்புரிந்தே ஆற்தல் தருவோனே,
ஆணவத்தால் அறிவிழந்தோரின் - கெட்ட
அகஇருள் நீக்கும் ஆண்டவனே (இறைவா)
அமலனே... ஆதி முதல்வனே..
ஆனந்தத் தாண்டவ மிடுவோனே
ஆதி பராசக்திக்குரியோனே .. - எந்தன்
ஆறாத்துயர் தீர்த்த பெருமானே...
(இறைவா)

— திரை —

---

## காட்சி : 6

இடம்: (பாண்டவர் பாசறை).

பின்னணி...குரல்: அமலனின் அரும்படியே, அரசன் துருபத னுக்கு அவன் மனைவியிடத்து அழகான ஓர் ஆண்மகவும், ஓர் பெண்மகவும் பிறந்தனர். அவர்கட்கு திருஷ்டத் துய்மன், திரௌபதி என நாமகரணம் சூட்டிச் சீரும் சிறப்புமாக வளர்த்துவந்தான். திரௌபதி பருவ மங்கை யானதும் சுயம்வரம் நடைபெற்றது. பார்புகழும் அரச

குமாரர்கள் முன்னிலையில் வில் வளைத்து, அம்பு தொடுத்து, அந்தரத்திலே சுற்றிக்கொண்டிருந்த பொன்மயமான இலட்சியத்தை அடித்துவீழ்த்திய வில் வீரனுக்கு மனநிறைவோடு மணமாலை சூட்டினாள் மங்கை திரௌபதி. பார்த்தசாரதியும் மற்றும் பெரியோர்களும் எவ்வளவோ முயன்றும் கூட பாரதப்போரை தடுத்துநிறுத்த முடியவில்லை. எனவே பாரதப்போர் தொடங்கியது. பாஞ்சால நாட்டு மன்னன் துருபதனின் மைந்தனும் திரௌபதியின் தமையனுமான திருஷ்டதுய்மன் பாண்டவ சேனாதிபதியாக அபிஷேகம் செய்யப்பட்டான்.

(படைத்தளபதியாக அபிஷேகம் செய்யப்பட்ட துருஷ்டதுய்மன் மற்றும் துருபதன், அர்ச்சுணன் ஆகியோர் அமர்ந்திருக்க தர்மர் எழுந்து பேசுகிறார்.)

தருமர்: மதிப்புக்குரியவர்களே! மண்ணும் விண்ணும் ஆள வேண்டும் என்ற பேராசை எமக்கு இருக்கவில்லை. எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் நமக்கு முறைப்படி கிடைக்கவேண்டிய இராட்சியத்திற்காக இதுவரையில் பல சமாதான முயற்சிகள் மேற்கொண்டு பார்த்து விட்டோம். முடிவில் சமாதானத்துக்குத் தோல்வியே கிடைத்தது. நாம் சமாதானத்தின் விரோதிகள் அல்ல. ஆனால் சமாதானம் பேசிக்கொண்டே நமது உரிமைகளை உதறித்தள்ளிவிட்டு மேலும் மேலும் காடுமேடாக அலைந்துகொண்டிருக்க நாம் கோழைகளல்ல. எனவே இந்த யுத்தம் தவிர்க்கமுடியாததாயிற்று சகோதரர்களுக்கிடையில் உற்றார், உறவினர்களுக்கிடையில் நடைபெறப்போகும் இந்தப் போர் தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் இடையே நடைபெறப்போகும் போராகும். ஆகையால், நமது படைகளுக்கிடையில் தலைமை தாங்கி வழிநடத்திச் செல்லக்கூடிய தகுதிவாய்ந்த வீரத்தளபதியாக அன்பர் திருஷ்டதுய்மன் அவர்களை அபிஷேகம் செய்துள்ளோம். அவர் ஆணைப்படி நடப்பது உங்களனைவரினதும் கடமையாகும்.

அர்ச்சுனன்: ஆசாபாசங்களை வென்றவரும் ஆச்சாரியார் துரோணருடைய அழிவுக்கென்றே அவதரித்தவரும் பார்புகழும் பரசுராம்ரையே திணறச்செய்து பிதாமகர் பீஷ்மருடைய பாணங்களைத் தடுக்கக்கூடியவரும் திருஷ்டதுய்மனே. துருபதபுரத்தினைத்தவிர பிதாமகரை

எதிர்க்கத்தகுந்த தவவலிமை மிக்கவர் வேறு யாரேனும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எனவே, தன்னிகரில்லாத தளபதி திருஷ்டதுய்மனின் தலைமையில் துட்டன் துரியோதனனும் அவனது துர்மார்க்க நண்பர்களும் சர்வநாசமாவார்கள் சமர்க்களத்திலே! வெற்றி நமதே!

திருஷ்டதுய்மன்: (எழுந்து) பெரியவர்களே! பேர் அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவர்களே! தங்களின் வீர உரை என்னை வீறுகொண்டெழச் செய்யும். வெற்றிவேல்! தங்கள் வாழ்த்தொலி எமது வெற்றிக்கு வழிகாட்டும் வைரவாள்! நெஞ்சில் உரமுண்டு நேர்மைத்திறமுண்டு வஞ்சனையில்லாத திண்தோள் வலிமையுண்டு அஞ்சாத அடலேறுபோல போர்க்களத்தில் விளையாடும் ஆற்றலுமுண்டு. கெஞ்சிடோம்! பகைவரை எமை மிஞ்சவிடோம், வித்தையில் துஞ்சிடோம், கண்கள் துயர் துடைப்போம் (தர்மரிடம் வந்து) தூயவரே! என்னை வாழ்த்தி வழியனுப்புங்கள்.

தர்மர்: வீரரே! வயதிலும், மதிப்பிலும், அறிவிலும், ஆற்றலிலும் பலத்திலும் குலத்திலும் சிறந்தவரான தங்கள் தந்தையிடம் முதலில் ஆசீர்பெற்று வாருங்கள்.

திருஷ்டதுய்மன்: (தந்தையிடம் சென்று) தந்தையே என்னை ஆசீர்வதியுங்கள்.

துருபதன்: மகனே! மகேஸ்வரன் அருளால் அவதரித்த எனது அருமை மைந்தனே! பார்புகழும் பாண்டவப்படைக்குத் தலைமை தாங்கிப் படைநடத்தும் பெரும் பணியைப் பெற்றிருக்கின்றாய். உனது பணி சிறக்க படை ஆணி சிறக்க – பாய்ந்துவரும் பகைவரெல்லாம் உயிர்துறக்க அவர்தம் உடலெல்லாம் படிமிசை வீழ்ந்திறக்க – உலகெல்லாம் உனது புகழ் பறக்க உனது தந்தைக்கு வரமீந்த வள்ளல் வடிவேலன் தந்தை வாழ்த்துகிறார்.

குழந்தாய்! அன்றொரு நாள் வேதமோதிய வேதியன் துரோகி துரியோதனனுக்குத் தூபமிடும் துரோணாச்சாரியார் வேடிக்கையென நினைத்து வேந்தன் என்றும் பாராமல் கபடமற்ற காண்டிபனை அனுப்பி என்னைக் கைதுசெய்து அவமானப்படுத்தினான். அதனால் வேதனையடைந்த நான் பெரும் வேள்விசெய்து தவமிருந்

தேன். அதன் பயனாக, நீயும் உனது தங்கை திரௌபதியும் பிறந்தீர்கள். வீராதி வீரனாகிய என்னை வென்று வெற்றிவாகை சூடிய விஜயனுக்கு உனது தங்கையை வீரப்பரிசாக அளித்து மகிழ்ந்தேன்... நீ எதற்காகப் பிறந்தாய் தெரியுமா?...

திஷ்டதுய்மன்: (ஆச்சரியத்துடன்) எதற்காக தந்தையே?...

துருபதன்: நீசன் துரோணரால் நான் அடைந்த அவமானம்... ''நீறு பூத்த நெருப்பாக'' என் நெஞ்சத்திலே எரிந்து கொண்டிருக்கின்றது. அந்த இறுமாப்புக்காரனைக் கொன்று அவன் ஆவியை எமன் உலகுக்கு அனுப்பி, அவன் இரத்தத்தைக் கொண்டுதான் என் இதயத்திலே கனன்று கொண்டிருக்கும் அந்த அக்கினிச் சுவாலையை அணைக்கமுடியும். இதைச் செய்வதற்காகவே நீ பிறந்தாய்.

துஷ்டதுய்மன்: நிச்சயமாக அணைப்பேன். ''நீறு பூத்த நெருப்பு'' ஆக தங்கள் உள்ளத்தைச் சுட்டெரித்துக் கொண்டிருக்கும் அந்த உன்மத்தத் துரோணரை உருத் தெரியாமல் அழிப்பேன். அவன் கூட்டம் அனைத்தையும் ஒழிப்பேன். வெற்றி எமது என்றே...

(போர்முரசம் கேட்கின்றது)

தருமன்: அதோ போர்முரசம் கேட்கின்றது.

அர்ச்சுனன்: புறப்படுங்கள்! பொல்லாத பகைவரை இல்லாது ஒழித்திட!

துஷ்டதுய்மன்: வாழ்க! தருமர், வாழ்க பாண்டவர்!

துருபதன்: வாழ்க! மாவீரரெல்லாம்! வாழ்க மாதவன் சேர்ந்து.

திருஷ்டதுய்மன்: போர்... போர்.. போர்...

(அனைவரும் போருக்குச் செல்கின்றனர்).

— திரை —

## "ஆரையூர் இளவலின்"
# "கண்கள் செய்த குற்றம்"
(சமூக நாடகம்)



ஓர் உருக்கமான கட்டம்.

இடமிருந்து வலமாக எஸ். வடிவேல், எஸ். பாலசுப்பிரமணியம் (அமுதக் குமரன்), ஆர். கமலநாதன், ''ஆரையூர் இளவல்''.

காலம் : 18-12-1965.

இடம் : மட். புனித மிக்கேல் கல்லூரி கலையரங்கம்.

---

கிழக்கிலங்கைத் தமிழ் நாடக மேடைக்கு ஓர் புதிய வடிவம். இங்கு ஒரே காட்சியமைப்பில் பல்சுவைகளுடன் ஓர் கதை இடம் பெறுகின்றது. கிழக்கிலங்கை நாடகப் போட்டியில் பரிசு பெற்ற நாடகம் இது.

---

## காட்சி : 7

(போர்க்களத்தில் பீஷ்மர் இறந்த துயரத்தை நினைத்துக்கொண்டு துரியோதனன் கவலையுடன் வீற்றிருத்தல். அந்நேரம் அவன் மனைவி அங்குவருகிறாள்)

துரியோதனன் மனைவி: சுவாமி!...

துரியோதனன்: (மௌனம்)

துரியோதனன் மனைவி: சுவாமி!

துரியோதனன்: தேவி! என்னைத் தனிமையில் விட்டுவிடு... தாங்கொணாத் துயரத்துடன் தவித்துக்கொண்டிருக்கிறேன்.

துரி-மனைவி: சுவாமி! தன்னிகரில்லாத் தலைவரும், தரணி வாழ் முடி மன்னரெல்லாம் போற்றும் முதல்வரும், கௌரவக் காவலரும், கர்ணனின் மெய்த்தோழனும் காந்தாரி மைந்தனுமான தாங்களா இப்படிக் கலங்குவது? தைரியமாயிருங்கள். சுவாமி தைரியமாக இருங்கள்.

துரியோதனன்: தேவி! எவர் எப்படி தேறுதல் சொன்னாலும் எனக்கு ஆறுதல் ஏற்படாது. கடந்த பத்து நாட்களும் நடந்த பாரதப்போரிலே பாண்டவர் படையின் பெரும் பகுதியை அழித்த பெரும் மதிப்புக்குரியவரான பிதாமகர் பீஷ்மர் இன்று எங்களையெல்லாம் விட்டுப் பிரியா விடை பெற்றுவிட்டார்.

துரி-மனைவி: அமைதியடையுங்கள் சுவாமி.

துரியோதனன்: அமைதிகாண்பேனா காணும் பகைவரது சிரமறுத்து, காக்கைக்கும் சழுகுக்கும், நாய்க்கும் நரிக்கும், பேய்க்கும் பிசாசுக்கும், வெருவிருந்தளிப்பேன். அதன் பிறகுதான் அமைதி.

துரி-மனைவி: விளக்கைப் பழமெனை நினைக்கும் விட்டிலும், விடத்தை பழரசமென நினைக்கும் வீரனும் வீணே இறப்பர். ஆதலால் சுவாமி சண்டையை நிறுத்தி பாண்டவர்களுடன் சமாதானம் செய்துகொண்டு அவர்களுக்குச் சேரவேண்டிய பாதி இராட்சியத்தைக் கொடுத்து சந்தோசமாக வாழ வழிதேடுங்கள். பாண்ட

வர்கள் தங்கள் சகோதரர்கள்தானே? நம் கண்களை நாமே நம் விரல்களால் குத்துவதா?

துரியோதனன்: விபரம் தெரியாத பெண்ணே, வீணே விசனப் படவேண்டாம். விதியையும் மதியால் வெல்லலாம். வீரருக்கு வெஞ்சமர்க்களமே விளையாட்டுத்திடல். தொடங்கிய காரியம் முடியும்வரை துயரமும் இல்லை. துன்பமும் இல்லை... ஆலோசனைக் கூட்டத்திற்குப் போக நேரமாகிறது நான் வருகிறேன்.

(துரியோதனன் போகின்றான்)

துரி - மனைவி: (தனிமையில்) எப்படி எடுத்துரைத்தாலும் இவர் கேட்கமாட்டேன் என்கிறாரே இறைவா! நீதான் இவரின் மனதைமாற்றி நல்லறிவைக் கொடுக்கவேண்டும். இவரையும், நாட்டையும், மக்களையும், காப்பாற்ற வேண்டும். பாரதப் போரை நிறுத்திவிடவேண்டும். ஆண்டவா... என் வேண்டுதலை பூர்த்திசெய். எனக்குத் தாலிப்பிச்சை தா...

— திரை —

---

## காட்சி : 8

இடம்: துரியோதனன் ஆலோசனைக்கூடம்.
(துரியோதனன், கர்ணன், ஆலோசனைக்கூடத்தில் படைத்தளபதியை நியமிப்பது பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.)

துரியோதனன்: கர்ணா! கடந்த பத்து நாட்களும் காலனைப் போல் களத்தில் புகுந்து இளம் காளைபோல் கடும் சமர்புரிந்து கணக்கற்ற எதிரிகளைக் கொன்றுகுவித்து, குருஷேத்திரத்தைக் குருதி வெள்ளமாக்கி, எங்களையெல்லாம் வியப்பிலும், பெருங்களிப்பிலும் மூழ்கடித்த கங்காபுரத்திரர், காண்டிபனும் சிகண்டியும் தொடுத்த பாணத்திற்குப் பலியாகி பரகதியடைந்துவிட்டார். அந்த உத்தமரின் உடலெல்லாம் அம்புகளினால் துளைக்கப்பட்டு, தரையில் விழ்ந்தபோழுது என் இதயமே வீழ்ந்துவிட்டதுபோல் வேதனைப்பட்டேன் கர்ணா, வேதனைப்பட்டேன்.

கர்ணன்: உண்மைதான் நண்பா. ஒருவர் உயிரோடிருக்கும் போது அவர் ஆற்றலை அவ்வளவாக மதிப்பதுமில்லை. மரியாதை அளிப்பதுமில்லை. அவர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்ட பின்புதான் பெரிதாக நினைக்கின்றோம். பெருமதிப்பளிக்கின்றோம்.

துரியோதனன்: இருந்தாலும் பிதாமகர்மீது உமக்கு எப் போதும் வெறுப்புத்தான் அவர் வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் பேசும் வார்த்தைகளை வினையாக எண்ணிக்கொண்டு மனம் வேதனையடைகின்றாய். அதனால்தான் அந்தப் பத்து நாட்களும் போர்க்களத் தின் பக்கமே எட்டிப்பார்க்காமல் இருந்தாய். ஒரு வேளை நீ களத்திலிருந்திருந்தால், கங்கா புத்திரனைக் காப்பாற்றியிருக்கலாம் அல்லவா.

கர்ணன்: சந்துனுராஜனின் மைந்தனை அழிப்பதற்கென்றே, சிகண்டி என்பவன் பெண்ஜம்மம் எடுத்துப் பிறந்திருக் கும்போது, நான் மட்டும் அல்ல, எத்தனையோ சிறந்த வீரர்கள் ஒழுங்கு சேர்ந்திருந்தாலும்கூட கங்கா மைந் தனை மரணதேவதையின் பிடியிலிருந்து விடுவித்து இருக்கவேமுடியாது.

துரியோதனன்: ஆம்... ஆம்... கர்ணா. வீரர்களுக்கெல்லாம் வீரனாக, விண்ணின் தாரகையாக, மண்ணிடையே மங்காப் புகழ்பெற்ற மாசற்ற ஜோதியாக ஜொலித்துக் கொண்டிருந்த அந்த மாவீரர் வீழ்ந்ததும் விதியின் பிடியாய்த்தான் இருக்கவேண்டும்.

கர்ணன்: ஆம் நண்பா. பிதாமகரைப் பிரிய தளபதியைப் பிரிந்துவிட்டோம். அடுத்ததாக யாரைத் தளபதியாக நியமிக்கப்போகின்றாய்.

துரியோதனன்: அதற்காகத்தானே இந்த ஆலோசனை சபையைக் கூட்டினேன். இதுபற்றி உன் அபிப்பிராயம் என்ன?

கர்ணன்: துரோணாச்சாரியார் வந்ததும் அவரையும் கலந்து கொண்டு ஆலோசிக்கலாமே.

துரியோதனன்: நாம் இருவரும் எதைத் தீர்மானிக்கின் றோமோ அதையே அவரும் ஏற்றுக்கொள்வார். தயங் காமல் தாராளமாகச் சொல் உனது அபிப்பிராயம் என்னவென்பதை.

கர்ணன்: நம் பக்கம் இருக்கும் அரசர்கள் அனைவருமே அறிவாளிகள், அனுபவசாலிகள், அமர் செய்வதில் சமர்த்தர்கள், படை நடத்திப் பண்பட்டவர்கள். இப்படி இருக்கும்போது, அவர்களில் ஒருவரைமட்டும் தேர்ந்தெடுத்து உயர் பொறுப்பளிப்பதால், அது மற்றவர்களுக்குப் பெரும் மனக்குறையாக இருக்கும். இதனால் நம் படைகளுக்கிடையே பிளவேற்பட்டாலும் ஏற்படலாம்.

துரியோதனன்: அதுவும் உண்மைதான். அப்படியானால் யாரைத் தலைவராக தெரிந்தெடுக்கலாம்.

கர்ணன். அஸ்திர வித்தையில் ஆசிரியரும், ஆயுதம் தாங்கியவர்களில் எல்லாம் அதி உன்னதமானவருமான துரோணாச்சாரியார் அவர்களையே படைத்தளபதியாக அபிஷேசம் செய்யலாம்.

துரியோதனன்: ஆம் கர்ணா. அதுவே நல்ல யோசனை: எவரும் எளிதில் ஏற்கும் சிறந்த யோசனை. அப்படியே செய்வோம். (அப்போது துரோணர் வந்துகொண்டிருக்கின்றார்)

கர்ணன்: அதோ ஆச்சாரியார் அவர்களே வந்துவிட்டார். (இருவரும் எழுந்து நிற்கின்றனர்)

துரோணர்: (வந்துகொண்டே) உங்களை அதிக நாளிகை காத்திருக்க வைத்துவிட்டேன்போல் தெரிகின்றது. சிரமத்திற்கு மன்னியுங்கள்.

துரியோதனன்: அப்படியொன்றுமில்லை. நாங்களும் இப்போதுதான் வந்தோம். அமருங்கள் ..

துரோணர்: (அமர்ந்தபின்) கௌரவர்களுக்கெல்லாம் வலது கரமாயிருந்தவர். வயோதிபராக இருந்தும் வாலிபம் போல் வடிவம் கொண்டு, வளைத்த படைகளையெல்லாம் வதைத்து, தன்னை எதிர்கொண்ட எதிரிகளையெல்லாம் எமலோகத்துக்சனுப்பி வெற்றிவாகை சூடியவரும், நான் வீரன். ஒரு பேடியுடன் சமர்செய்யேன் என்ற சபதத்தினால் சிகண்டி என்ற சிற்றறிவாளனின் சரத்திற்குப் பலியாகி சர்வலோகமும் புகழ பொய்யுடம்பு நீத்து மெய்யுடம்பெய்தி பாழும் இவ்வுலகை விட்டுப் பரலோகம் சேர்ந்து, இறந்தும் இறவாப்புகழ் பெற்றுவிட்டார், நம் இதயம் கலந்துவிட்ட கங்காபுத்திரர்.

கர்ணன்: அவரின் இழப்பு யாராலும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அதனால்தான் அவரை எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கின்றோம்.

துரோணர்: என்ன கர்ணா, நீயா இப்படிப் பேசுகின்றாய்? உன்வாயில் இருந்தா இந்த வார்த்தைகள் வெளிவந்தன. என்னால் நம்பவே முடியவில்லையே?

துரியோதனன்: நம்புங்கள்! நன்றாக நம்புங்கள்! இது அவர் வாயிலிருந்துவந்த வார்த்தைகள் அல்ல. இதயத்தின் எதிரொலி.

துரோணர்: உண்மைதானா கர்ணா? உன் நண்பன் துரியோதனன் கூறியது உண்மைதானா? கங்காபுரத்திரர் இறந்த பிறகுதான் களத்தில் வாள் ஏந்தி காண்டீபன் சிர மறுத்து கௌரவர்களுக்கு வெற்றிவாகை சூடுவேன். அப்படியல்லாது, கங்காபுரத்திரரே களத்தில் வெற்றி ஈட்டித் தந்துவிட்டால், கொற்றம் துறந்து, கொடுங் கானிடை சென்று, கடுந்தவம் புரிவேன் என்று சூளு ரைத்து, இந்தப் பத்து நாளும் போர்க்களப் பக்கமே எட்டிப்பாராது அரண்மனையே தஞ்சமென அடங்கி ஒடுங்கி வாழ்ந்த நீயா இப்படிக்கூறுகின்றாய்?

கர்ணன்: நான்தான் கூறுகின்றேன், நல்லவர் விஷ்மர் என்று அன்று அறியாமையால் செய்துவிட்ட சபதத்திற்காக போர்க்களப் பக்கமே நாடாமல், புறம்பாயிருந்தேன். ஆனால் இன்று மாலையில்தான் போர்க்களம் சென் றேன். போர் வெறியனாக அல்ல. போதை தெளிந்த வீரனாக. பொல்லாப்பகைவரை நில்லா தொழித்திடும் மாவீரரான பிதாமகரின் மாசற்ற வதனத்தைக் காண்ப தற்காக, அவரின் கால்களைப்பற்றி மன்னிப்புக் கேட் பதற்காக, அவரின் கரங்களைப்பற்றி ஆசீர்பெறுவதற் காக, நாளை நடக்கும் போரில் ஈடுபடுவதற்காக.

துரோணர்: அப்படியா கர்ணா! கடைசி நேரத்திலாவது உன் கண்கள் திறந்தனவே. அதற்காக நான் களிப் படைகின்றேன். கர்மவீரனின் கனிந்த ஆசீர்பெற்ற நீயே உண்மை வீரன். துரியோதனா, கங்காபுத்திரரின் கடைசி ஆசையை நான் நன்கு அறிவேன். நீ அறிவாய். நம் வீரர்களெல்லாம் அறிவர். எனவே காலம் நீ தாழ்த் தாது உனது கடமையைச் செய். அதுவே நீ அந்த அன்பருக்குச் செய்யும் மிகச்சிறந்த கைமாறாகும்.

துரியோதனன்: என்ன சொல்கின்றீர்கள் என்பதைச் சற்றுத் தெளிவாகவே சொன்னால்...

துரோணர்: (சிரித்து) தெளிவாகச் சொல்லித்தான் நீ தெரிந்துகொள்ள வேண்டுமா. நல்லது தெளியட்டும் தெளிவில்லா உன் நெஞ்சம். துரியோதனா, துரோகி என்று நீ தூற்றப்படக்கூடாது. தூய தலைவனென்று சான்றோர்களால் போற்றப்படவேண்டும். துன்மார்க்கர்களின் துயர் துடைப்பது மட்டுமே உன் கடமையாக இருக்கக்கூடாது. துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அப்பாவி மக்களை மகிழ்விக்க நல்லவர்களும், உன் நலன் நாடுபவர்களும், உத்தமர்களும், உயிர் தரச் சித்தமானவர்களும், சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ பல வளமும் பொங்க, பாண்டவர் தம் பகை மறந்து உனை நாடிவந்து நல்மனதோடு வாழ்த்த, நானிலம் எங்கும் உன் நற்புகளோங்க, நாராயணன் ஆசீர்பெற்று ஐவருடன் சமாதானம் செய்துகொண்டு ஒற்றுமையாக வாழ். இதுவே பிதாமகருடைய கடைசியாசையும், மற்றும் பெரியோரது பெருவிருப்பமும்.

துரியோதனன்: மன்னிக்கவேண்டும் குரு சிரேஷ்டரே மன்னிக்க வேண்டும். ஆசிரியரான தங்கள் வார்த்தையை அலட்சியம் செய்யவேண்டும் என்பது என் நோக்கமல்ல. ஏமாளி! கோழை! கூற்றுவனைக் கண்டஞ்சும் குலத் துரோகி, என்றெல்லாம் தூற்றுவரே மக்கள். என்னை நம்பி, என் வீரத்தை நம்பி, என் வில் திறத்தை நம்பி, என்னைச் சார்ந்திருக்கும் வீராதி வீரர்களை நம்பி, விலைமதிப்பற்ற தங்கள் இன்னுயிரை சிறுதுரும்பாக மதித்து வீர சொர்க்கம் சேர்ந்த எத்தனையோ எண்ணற்ற வீரர்களின் ஆவிகளெல்லாம் மீண்டும் வந்து என்னைச் சூழ்ந்துகொண்டு துன்புறுத்துமே! கணவனை இழந்து கைம்பெண்ணான கன்னியர்களும், காதல் தலைவனை இழந்து தவித்துக்கொண்டிருக்கும் காரிகைகளும், வீரப்புதல்வனை இழந்து விழி நீர் சிந்தும் வீரத் தாய்மார்களும், வெற்றி வராதோ என்று வெஞ்சமர் புரியும் இளம் காளையர்களும் காறி உமிள்வார்களே என்னை.

துரோணர்: துரியோதனா! உன்னால் உன் பிடிவாதத்தால், இதுவரை நடந்திருக்கும் உயிர்ச் சேதங்களையும், இனி மேல் நடக்கவிருக்கும் பெரும் சோதனைகளையும் சற்று உன் சித்தத்தில் நிறுத்திப் பார்ப்பாயானால், இப்படி

யெல்லாம் சிறு பிள்ளைத்தனமாகப் பேசமாட்டாய். இறுதியாக உன்னைக் கேட்கின்றேன். உன் கடைசி முடிவுதான் என்ன?

துரியோதனன்: இறுதிவரை போராடுவேன். வெற்றி பெறு வேன். அல்லது வெஞ்சமரில் செத்துமடிவேன். இதுவே எனது உறுதியான முடிவாகும்.

துரோணர்: அப்படியா! உன்னைத் தடுத்துநிறுத்த எந்தச் சத்தியாலும் முடியாது. இறைவன் சித்தம் எப்படியோ அப்படியே நடக்கும்..... அதுசரி துரியோதனா ... நாளைக்கு படை நடாத்த தளபதியைத் தெரிந்தெடுத்து விட்டாயா?

கர்ணன்: பிதாமகருக்குப் பிறகு கௌரவப் படைக்குத் தலைமை தாங்க தாங்கள்தான் முற்றும் தகுதியானவர்.

துரோணர்: என்று நீ நினைக்கின்றாய் இல்லையா கர்ணா?

துரியோதனன்: எல்லோருமே தங்கள் தலைமையைத்தான் நம்பியிருக்கின்றோம். வெற்றியும் தோல்வியும் தங்கள் கையில்தான் இருக்கின்றது. தாங்கள் நினைத்தால் தனஞ்சயன் மட்டுமல்ல, தறுதலை வீமனையும், தயா பரன் தர்மனையும், அவன் தம்பிமார் அனைவரையும் அழித்தொழித்து வெற்றிவாகை சூடலாம்.

துரோணர்: (விரக்தியோடு சிரிக்கின்றார்)

கர்ணன்: எதற்காகச் சிரிக்கின்றீர்கள்?

துரோணர்: என்னை அழிப்பதற்கென்றே ஒருவன் பிறந் திருக்கின்றானே அதை மறந்துவிட்டீர்களே என்பதை நினைத்தேன். அந்த எண்ணத்தில்தான் சிரித்தேன்.

கர்ணன்: யார்? திருஷ்டத்துய்மனா? அவனொரு பொடிப் பயல். என் பாணங்களுக்கு அவனால் பதில் சொல்லவே முடியாது.

துரோணர்: கர்ணா எதிரிகளின் பலத்தை நாம் ஏளனமாக எடைபோட்டுவிடக்கூடாது. அவர்களுடைய திறமையை நாம் சரியாக எடைபோடவேண்டும். தன் பலத்தைவிட தன் எதிரியின் பலத்தை குறைத்து எடைபோடுபவர், எதிலுமே வெற்றிபெறமுடியாது. நாம் எதையும்

மேலெழுந்த வாரியாகப் பார்க்கக்கூடாது. துரியோ தனா, உன் எண்ணம் எதுவாக இருந்தாலும் உன் வேண்டுகோளிற்கிணங்க நான் இன்றே உனது படையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுகின்றேன். எதிரிகள் எவராயிருந்தாலும் அவர்களை எமனுலாகம் அனுப்பிவிட்டு என் கடமையைத் திறம்படச் செய்வேன். இப்போது உனக்கு மகிழ்ச்சிதானே?

துரியோதனன்: நன்றி குருதேவா, மிக்க நன்றி.

துரோணர்: துரியோதனா, இத்தோடு இன்னொன்றையும் ஞாபகம் வைத்துக்கொள். பிதாமகரை அழிப்பதற்கு சிகண்டி பிறந்ததுபோல், துருபதனின் தூய்மையான தவத்திலே திருஷ்டதுய்மன் பிறந்திருக்கின்றான். என்னை அழிப்பதற்கென்றே. அவனால் எனக்கு மரணம் நிச்சயம் என்பது உறுதியாகிவிட்டது. இது தெய்வ நியதி. இதை யாராலுமே மாற்றமுடியாது. இருந்தும் நான் உனக்காக நீ அளித்த அன்னம், அரச வாழ்வு, ஆணை காட்டும் செங்கோல், அத்தாணி மண்டபம், அமைச்சர்கள், அதிகாரிகள், அடங்கி நடக்க ஆயிரம் ஆயிரம் வேலையாட்கள், அதற்குமேல் அலைகடல் போல் விரிந்துகிடக்கும் யானை, குதிரை, ஆள், தேர்ப் படைகள் இத்தனையும் தந்த உனக்காக என்திறமை அத்தனையும் செலுத்தி நான் சமர்செய்வேன். ஆனால், தற்செயலாக நான் காலன் கைப்பட்டு களத்திலே இறந்துவிட நேர்ந்துவிட்டால், இன்றுவரைக்கும் சமா தானத்திற்குச் சம்மதிக்காத நீ அதன் பிறகாவது ஐவ ருடன் சமாதானம் செய்துகொண்டு ஒரே குலத்தவரான நீங்கள் ஒற்றுமையாக வாழுங்கள். இதுவே எனது இறுதிவேண்டுகோள்.

(துரோணர் செல்கின்றார்)

— திரை —

---

## காட்சி ; 9

துரியோதனன் மாளிகை... (துரியோதனன் மனைவி போரைப்பற்றி நினைந்து பொருமிக்கொண்டிருக் கின்றாள். அவள் தோழி தேறுதல் கூறுகின்றாள்)

துரி - மனைவி: துரோணாச்சாரியார் படை நடத்தியும், கர்ணன் பக்கத்துணையாய் இருந்தும்கூட கௌரவர் பக்கம் பெருஞ்சேதம் ஏற்பட்டுக்கொண்டிருப்பதாகக் கூறுகின்றார்களே கர்ணனுக்குச் சமனான ஓர் வீரனை உலகில் எங்கும் கண்டதில்லை. கண்ணனைச் சகாய மாகக்கொண்ட என்னை யுத்தத்தில் தேவர்கள்கூட ஜெயிக்கமுடியாதே, அப்படியிருக்க இந்தப் பரதேசி பாண்டவர்களா ஜெயிக்கப்போகின்றார்கள் என்று அடிக்கடி சொல்வாரே, எல்லாம் பொய்யாய், புனை கதையாய்ப் போய்விடுமோ. ஆண்டவா! நீதான் அவரை ஆபத்திலிருந்து காப்பாற்றவேண்டும். அவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கவேண்டும்.

தோழி: தேவி! கவலையடையாதீர்கள், கடவுள் அவரைக் காப்பாற்றுவார். அதோ! கர்ண மகாராஜனே வந்து கொண்டிருக்கின்றார்.

கர்ணன்: (வந்துகொண்டே) அரசர் இருக்கிறாரா?

துரி-மனைவி: இல்லை, இன்னும் போர்க்களத்திலிருந்து திரும்பவில்லை. போர் முடிந்துவிட்டதா?

கர்ணன்: இன்றைய போர் முடிந்துவிட்டது.

துரி-மனைவி: அரசரை இன்னும் காணவில்லையே!

கர்ணன்: அரசருக்கு ஆபத்து எதுவுமில்லை. என் முன்னால் தான் வந்துகொண்டிருந்தார். இடையில் எங்கேயாவது தாமதித்துவிட்டார்போலும். சீக்கிரம் வந்துவிடுவார்.

துரி-மனைவி: இன்றையப் போரில் தங்கள் பக்கம் பெரும் சேதம் ஏற்பட்டதாமே!

கர்ணன்: போர் என்றால் பூப்பந்து விளையாட்டல்ல. இரு பக்கமும் சேதமேற்படத்தான் செய்யும். எண்ணற்ற வீரர்கள் இறக்கத்தான் செய்வர். இது தவிர்க்கமுடியாதது.

துரி-மனனவி: தவிர்க்கமுடியாததல்ல தாங்கள் நினைத்தால்!

கர்ணன்: நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

துரி-மனைவி: இனிமேலாவது முயற்சி செய்யுங்கள் என்று சொல்கிறேன்.

கர்ணன்: எதற்கு...?

துரி-மனைவி: யுத்தம் நடைபெறாமல் இருப்பதற்கு.

கர்ணன்: அது சாத்தியமாகுமா? தலைக்குமேல் வெள்ளம் போனபின்.

துரி-மனைவி: சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன என்று மூடத்தனமாகத் தத்தளிக்காமல் நீந்திக் கரைசேரலாம் அல்லவா.

கர்ணன்: தங்கள் கணவர் அதை விரும்பமாட்டார்.

துரி-மனைவி: நீங்கள் சொன்னால் அவர் தட்டமாட்டார்.

கர்ணன்: சொன்னேனே பலமுறை கேட்டாரா அவர். தேரோட்டி மகனாகத் தெருவிலே அலைந்துதிரிந்த என்னை, பார்போற்றும் மன்னராக, பட்டம் தந்து, படைபலம் அளித்து, அங்கதேசத்து அரசனாக அபிஷேகம் செய்து, அரியணை ஏற்றி ஆனந்தக் களிப்படைந்த அன்பனை, பிரிய நண்பனை அஸதனாபுரத்து அரசனை ஆயுள் முழுவதும் மறவேன்.

துரி-மனைவி: தங்கள் நண்பர் தவறான வழியில் நடப்பதை அறிந்திருந்தும், அதைத் தட்டிக்கேட்காமல் தக்க ஆலோசனை கூறாமல், தாங்களும் அவர்களுடன் சேர்ந்து செல்கிறீர்களே. இது தகுமா? தர்மம்தானா?

கர்ணன்: கண்களைக் கட்டிக் காட்டிலே விட்டதைப்போன்ற நிலையிலே நான் இருந்துகொண்டிருக்கிறேன். குந்தி மைந்தனான நான், குந்தி மைந்தர்களாகிய எனது சகோதரர்கள் பாண்டவர்களுக்கெதிராகப் பயங்கரப் போரில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறேன். எதற்காக? சமாதானத்தை நான் விரும்பாதபடியினாலா? அல்லது தங்கள் கணவர் விரும்பாதபடியினாலா என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப்பாருங்கள். என்மீது வீண் பழியைச் சுமத்தாதீர்கள். இலங்கையர்கோன் ராவணன் தம்பி கும்பகர்ணனைப்போல் செஞ்சோற்றுக்கடனைத் தீர்ப்பதற்காக இறுதி மூச்சு உள்ளவரை தங்கள் கணவருக்காகவே உயிர்வாழ்வேன், உயிர்வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.

துரோணர்: (வந்துகொண்டே) என்ன கர்ணா... உன் பேச்சு பிரமாதமாக இருக்கின்றதே.

கர்ணன்: பிரமாதமாக ஒன்றுமில்லை குருவே. என் நிலையை விளக்குகின்றேன். அவ்வளவுதான்.

துரோணர்: ஏன் தேவி அவர்கள் சந்தேகப்படுகின்றார்களா?

துரி-மனைவி: அப்படியொன்றுமில்லை. போரை நிறுத்தமுடியாதா என்று அவரைக் கேட்டேன். குருதேவா, தாங்களாவது இந்த விஷயத்தில் முயற்சிக்கக்கூடாதா?

துரோணர்: முயற்சிக்கக்கூடாதா என்றா கேட்கின்றாய். ஆரம்பமுதற்கொண்டே சமாதானத்துக்காக உழைத்து வருபவனாயிற்றே நான். கண்ணன் தூது வந்தபோது கூட சமாதானத்தைத்தான் வலியுறுத்தினேன். சபையில் இருந்த பெரியோர்களும் அதைத்தான் சொன்னார்கள். தங்கள் மாமனார் திருதராஷ்டிரனும், மாமியார் காந்தாரியும்கூட சமாதானம் செய்துகொள்ளும்படி எல்லவளவு எடுத்துச்சொன்னார்கள். ஆனால் எதையுமே இலட்சியப்படுத்தவில்லை மன்னன் துரியோதனன். கடைசியாக நான் படைத் தலைமைப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதற்கு முன்புகூடப் போரை நிறுத்திவிடும்படி எவ்வளவோ எடுத்துச்சொன்னேன். அதற்கு, பொங்கியெழும் கடலாகத் தங்கள் கணவர் பொருமினாரே தவிர போரை நிறுத்துவதற்குச் சம்மதிக்கவில்லையம்மா. என் செய்வது. நானும் கர்ணனைப்போன்று என் செஞ்சோற்றுக்கடனைத் தீர்ப்பதற்காக உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு களத்திலே கடுஞ் சமர் செய்துகொண்டிருக்கிறேன். இதைத் தவிர வேறு வழியில்லை குழந்தாய்...

துரி–மனை: நான் யார்மீதும் பழிசுமத்தத் தயாராக இல்லை. இறைவன்மீதுதான் இந்தப் பெரும் பழியைப் போடுவேன். அவரின்றி ஓர் அணுவும் அசையாது. ஆடுபவரும், ஆட்டுபவரும் அவரே. அதோ அவரே வந்து விட்டார்.

துரோணர்: (ஆச்சரியத்துடன்) ...யார் ஆண்டவரா?...

கர்ணன்: இல்லை ஆள்பவன். நாட்டை ஆள்பவன்.

(துரியோதனன் வருகிறான்)

துரோணர்: ...வா துரியோதனா, உனக்காகத்தான் நான் இத்தனை நாழிகையும் காத்துக்கொண்டிருந்தேன்.

ஏதோ களத்திலே வைத்து அவசரமாகக் கதைக்க வேண்டும் என்றாயே, என்ன அது?

துரியோதனன்: ...ஆமாம் ஆச்சாரியார் அவர்களே. ஓர் அவசரமான வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன்.

துரோணர்: துரியோதனா உன்பக்கம் எத்தனையோ சிறந்த வீரர்களும் வில்லாளர்களும் இருக்கும்போது என்னைத் தேர்ந்து படைத்தளபதியாக்கிப் பாராட்டி, பல சிறப்புக்களும் செய்திருக்கின்றாய். இதற்கு ஈடாக நீ எதைக் கேட்டாலும் நான் தரச் சித்தமாயிருக்கின்றேன். என்னால் உனக்கு என்ன ஆகவேண்டும்?

துரியோதனன்: தாங்கள்... எப்படியாவது... (சிறிது தாமதித்து) தருமரை உயிருடன் பிடித்துத்தரவேண்டும். தாங்கள் இதைச் செய்வீர்களேயானால்...

துரோணர்: துரியோதனா நீயுமா தருமருடைய உயிரைக் காப்பாற்ற விரும்புகின்றாய்? நீ நீடூழி வாழவேண்டும். நீண்ட புகழ் உன்னைச் சேரவேண்டும. உத்தமன் தர்மபுத்திரனுக்கு உயிர்ச்சேதம் ஏற்படக்கூடாதென்று நீ சொல்லியபிறகு அவன் சத்துரு பயமற்றவன் என்பது தெளிவாகிவிட்டது பகைவனுக்கும் நண்பன் என்று பாண்டு மைந்தனுக்குத் தந்திருக்கும் பெயரை நீ உண்மையாக்கிவிட்டாய். குந்தியின் மகனைக் கொல்லாது உயிரோடு பிடித்துத் தரவேண்டும் என்று கூறுகின்றாய். அப்படியென்றால் யுத்தத்தில் வெகு சீக்கிரம் ஜெயித்து விட்டு அவர்களுக்குச் சேரவேண்டிய இராச்சியத்தை அவர்களுக்குக் கொடுத்து அவர்களுடன் சமாதானம் செய்துகொள்ளப்போகின்றாய் என்று நம்புகின்றேன். இதனால் உண்மையிலேயே என்னைவிடச் சந்தோஷப் படுகின்றவர்கள் வேறு யாராகவும் இருக்கமுடியாது துரியோதனா, இருக்கமுடியாது. உன் ஆசைப்படியே தர்மபுத்திரனை உயிரோடு பிடித்துத் தருகின்றேன்.

துரியோதனன்: நன்றி குருதேவா... பாண்டுவின் மூத்த மைந்தனான புர்மபுத்திரனைக் கொன்றால் பாண்டவர்களின் கோபம் கட்டுக்கடங்காமல் காட்டாற்று வெள்ளம்போல் பாய்ந்து நம் அனைவரையும் அழித்தொழித்துவிடுவார்கள். அவர்களே ஜெயமும் பெறுவார்கள். அல்லது இருபக்கத்து வீரர்களும் அழிந்

தொழிந்தாலும் பார்புகழும் அச்சுதன் மாத்திரம் உயிரோடு இருப்பான், அவன் குந்திக்கோ அல்லது திரௌபதிக்கோ இராச்சியத்தையும் அளித்துவிடுவான். இதனால் தரணி ஆளும் நமக்கோர் லாபமும் இல்லை. எனவேதான் தர்மனை உயிரோடு பிடித்தால் யுத்தம் சீக்கிரமாகவும், வெற்றிகரமாகவும் முடிந்துவிடும்... சத்திரிய தர்மத்திற்கும், சத்தியத்திற்கும் கட்டுப்பட்டவனாகிய தர்மனை மறுபடியும் தந்திரமாக சூதாட்டத்திற்கு இழுத்து ஏமாற்றலாம். அல்லது காட்டுக்கனுப்பலாம். இதுவே எனது தந்திரோபாயம்.

துரோணர்: (கோபமாக) துரியோதனா, உன் பாதகத் திட்டத்திற்கு என்னையுமா பகடைக்காயாகப் பாவிக்கின்றாய். பண்புள்ளவர் செய்யும் செய்கையா இவையெல்லாம்? குருவுக்கு மிஞ்சிய குலத்துரோகம் செய்யும் துரோகியே, உன் வார்த்தையில் மதிமயங்கி உனக்கு வாக்களித்துவிட்டேன் துரியோதனா உன்னை வினயமாக வேண்டிக் கேட்கிறேன்: நான் ஆணையிட்டபடி நாளை ஆதவன் அஸ்தமிக்கும் முன்னர் களத்திலே தர்மராசனை உயிரோடு பிடித்துத் தருகிறேன். அவனுடன் தாராளமனதுடன் நடந்துகொள். சகோதர பாசத்தை மறந்துவிடாதே. (சோகமாக வெளியேறுதல்)

துரியோதனன்: (ஏளனமாகச் சிரித்து) இதுவும் ஓர் போர்த் தந்திரம்தானே? போர்க்கலையிலே வித்தகரான, வீராதிவீரரான தாங்களே இப்படி விசனப்பட்டு வேதனைப்பட்டுச் செல்வது எனக்கு வேடிக்கையாக இருக்கின்றது.

— திரை —

---

## காட்சி : 10

போர்க்களம்.

குரல்: ...துரோணருடைய வில்லிலிருந்து புறப்பட்ட பல்லாயிரக்கணக்கான பாணங்கள் பாண்டவ சேனை வீரர்களை வீழ்த்தி... பாண்டவப் படையின் மத்தியில் பயத்தைப் பரப்பிக்கொண்டிருக்கின்றது. அப்போது அசுவத்தாமன் என்னும் பெரிய யானை ஒன்னைத் தனது

இரும்பு உலக்கையினால் தாக்கிக் கொல்கின்றான் பீமன் (பீமன் உரத்த குரலில்) அசுவத்தாமனைக் கொன்றேன், அசுவத்தாமனைக் கொன்றேன் என்று கூச்சலிடுகின்றான்.

துரோணர்: (அதிர்ச்சியுடன்) என்ன! என் மகன் அசுவத்தாமன் இறந்துவிட்டானா? என் மகன் அசுவத்தாமன் இறந்தது உண்மையா? தர்மா என் மகன் அசுவத்தாமன் இறந்தது உண்மையா?

தர்மர்: ''குரல்'' ...அசுவத்தாமன் (சங்கொலிக்கின்றது) என்னும் யானை இறந்தது உண்மை.

துரோணர்: ஐயோ மகனே அசுவத்தாமா! நீ என்னைவிட்டுப் பிரிந்துவிட்டாயா. (வில் அம்பு வீசி எல்லாவற்றையும் எறிகின்றார்.)

வீமன் குரல்: ...கெட்டுப்போன பிராமணர்கள் தமக்குரிய தொழிலை விட்டுவிட்டு சத்திரியர்களுடைய தொழிலில் இறங்கியபடியால் அல்லவா அரசர்கள் இறந்து மடிகின்றனர். கொல்லா விரதமே மேலான அறமென்றும், அந்த அறத்திற்குப் பிராமண குலமே வேரென்றும் அறிந்த நீர் அந்தணகுலத்தில் பிறந்திருந்தும் வெட்கமில்லாமல் கொலைத் தொழிலைப் புரிந்துவருகின்றீரே. ஏன் இப்படிப் பாவச்செயலைச் செய்கின்றீர்?

(அதிர்ச்சியாலும், அவமானத்தாலும் தாக்குண்ட துரோணர் தளர்ந்து தள்ளாடி அமர்கிறார்.)

திருஷ்டதும்மன்: (நிஷ்டையில் இருந்த துரோணரை வாளால் வெட்டுதல்,)

(பயங்கரமாகச் சிரித்து) பாவச்செயலில் ஈடுபட்ட பிராமணனுக்குச் சரியான பாடம் கற்பித்துவிட்டேன். பழிக்குப்பழி வாங்கிவிட்டேன். பாஞ்சால மன்னனை பழித்த பாவியைப் பரலோகம் சேர்த்துவிட்டேன். என் தந்தையின் நெஞ்சிலே ''நீறுபூத்த நெருப்பு'' ஆக எரிந்துகொண்டிருந்த அக்கினிச் சுவாலையை அந்த அந்தணனின் ஆறாகப் பெருகும் இரத்தத்தினால் அணைத்துவிட்டேன். அமைதியை அளித்துவிட்டேன். என் பிறவிப் பெருங்கடனைத் தீர்த்துவிட்டேன்.

(சிரித்து) என் பிறவிப் பெருங்கடனைத் தீர்த்துவிட்டேன்...

(போர்க்களத்திலே மயான அமைதி நிலவுகின்றது... துரியோதனனும் கர்ணனும் துரோணரின் உயிரற்ற உடலை வணங்குகின்றனர்.)

பின்னணிப் பாடல்:

"அசுவத்தாமன் என்னும் யானை
இறந்ததன்றோ! — அந்தோ உனது
அருமை மைந்தன் என நினைத்து
ஆவி துறந்தனையே!
அவனி போற்றும் அஸ்திர மேதையே!
அமர்க்கள ஞானியே"
துஷ்டன் துரியோதனனின் செஞ்சோற்றுக் கடனைதீர்க்க
செங்குருதியானாயே... ஐயோ செங்குருதியானாயே!...

— திரை —

---

## காட்சி 11

(மகாவிஷ்ணு, மகாலட்சுமி திருப்பாற்கடலில் அமர்ந்திருத்தல்)

விஷ்ணு: தேவி, பார்த்தாயா, நீதி சாஸ்திரங்களைத் தெளிவுறக் கற்றிருந்தும், நீசனுடன் சேர்ந்திருந்தார் துரோணர். துரியோதனன் தந்த சொகுசான வாழ்விலும், பெரும்பதவியிலும், அரசபோகத்திலும் மயங்கி, செஞ்சோற்றுக்கடன் தீர்க்க அறவழி துறந்து, அதர்மத்தின் பக்கம் சேர்ந்து தர்மத்திற்கு விரோதியாகி கற்ற வித்தைகளையெல்லாம் தவறான வழிகளிலே பயன்படுத்தினார் துரோணர். இதனால்தான் இத்தகைய அழிவு ஏற்பட்டது. துரோணருக்கு, இடையிலே எத்தகைய இடர் ஏற்பட்டாலும் இறுதி வெற்றி தர்மத்திற்கே.

லெட்சுமி: அடுத்ததாக, மானிட தேகமும், குதிரை முகமுமாக அவதரித்துத் திருக்கரங்களில் வாளும் கேடயமும் சங்குசக்கரமும் ஏந்திப் பாவிகளைச் சங்கரிக்கவும், அதர்

மத்தைப் போக்கவும் சித்தமாகிக் கால முடிவை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றீர்கள்.

**விஷ்ணு:** இதுவே எனது பத்தாவது அவதாரமாகிய கல்கி அவதாரமாகும்.

நல்லோரைக் காக்கவும், தீயோரை அழிக்கவும், அற நெறியை நிலைநாட்டவும், யுகந்தோறும் நான் உலகத்தில் பிறக்கின்றேன். ஆதலால் எல்லாவகையாலும் இறைவனிடம் சரண்புகுந்தால் இறைவனது அருளால் உயர்ந்த அமைதியையும், அழிவற்ற பதவியையும் அடையலாம்.

— திரை —

——— வணக்கம் ———



கல்லடி-உப்போடை வளர்மதி இலக்கிய மன்றம் அளிக்கும்

"ஆரையூர் இளவலின்"

# "நீறு பூத்த நெருப்பு"

(இதிகாச நாடகம்)

காலம் : *21-04-1972 வெள்ளிக்கிழமை மாலை.*

இடம் : *கல்லடி - உப்போடை சிவாநந்த வித்தியாலய விளையாட்டு மைதானத் திறந்தவெளி அரங்கு.*

தலைமை: *திரு. ரி. பாலச்சந்திரன் அவர்கள் (மேலதிக அரசாங்க அதிபர்)*

மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தல்:
*திரு. க. தியாகராசா அவர்கள் (மாநகர முதல்வர்)*

நடிகர்கள்:

*துரோணர் — வை. க. கணேசானந்தம்*
*துரியோதனன் — கா. கனகலிங்கம்*
*துருபதன் — சா. சிவபாக்கியராசா*
*துட்டத்துன்மன் — கு. விவலநாநன்*
*கர்ணன் — து. இரத்தினராசா*
*காண்டீபன் — க. உ. வே. க. குருநாதன்*
*சகாதேவன் — எஸ். தங்கவடிவேல்*
*விஷ்ணு — க. உ. வே. ந. கணேசானந்தன்*

கௌரவ நடிகர்கள்:

*தருமர் — பண்டிதர், சைவப்புலவர் த. கிருஷ்ணபிள்ளை.*
*ஆசிரியர் சி. சந்திரசேகரம்.*

நடிகைகள்:

*இலக்குமி — செல்வி வி. கௌசலாதேவி*
*துரியோதனன் மனைவி — செல்வி தா. நேசலட்சுமி*
*தோழி — செல்வி வி. பானுமதி.*

குழந்தை நட்சத்திரம்: *சிவன் — செல்வி க. மாலதி.*

நடனம் : *செல்வி ச. சந்திரப்பிரபா.*

ஒப்பனை : வேலு - ஜெயா, ரி. கென்றிக், ஐ. சிவானந்த ராஜா, எஸ். அரசரெட்ணம், செல்வி தா. இந்திராணி, சாந்தி செபமாலை.

ஒலி : ''சுந்தரம்ஸ்'', ''நியூ முகைதீன்''

ஒளி : செ. சிவகுமார், ''சுந்தரம்ஸ்'', ''நியூ முகைதீன்''

இசை : ஆரையம்பதி உதயசூரியன் இசைக்குழு. ஜெயம் இசைக்குழு.

பின்னணி: க. மயில்வாகனம், யோசப் வெஞ்சமின், செல்வி த. இந்திராணி குழுவினர், ச. சந்திரகுமாரி.

கலை : ஜெயா – வேலு.

தயாரிப்பு: வளர்மதி இலக்கிய மன்றம்.

கதை, வசனம், பாடல்கள், நெறியாள்கை :

க. செல்லத்தம்பி (ஆரையூர் இளவல்)

—★—

இந்நாடகம் 21-04-1972 தொடக்கம் கல்லடி - உப்போடை, மஞ்சந்தொடுவாய், ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு, களுதாவளை, களுவாஞ்சிக்குடி, மண்டூர் (3 நிதியுதவிக் காட்சிகள்), கல்லடி, அமிர்தகளி (2 தடவைகள்), வாழைச்சேனை (2 நிதியுதவிக் காட்சிகள்), மட். மாநகர மண்டபம் (2 நிதியுதவிக் காட்சிகள்), போரதீவு, கிளிவெட்டி (திருமலை), காரைதீவு (அம்பாறை), மட். திறந்தவெளி அரங்கு, வாகனேரி, மேலும் பல இடங்களில் மேடையேறிப் பல்லாயிரம் மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது.

மேலும் இந்நாடகம் மேடையேறிய அனைத்து இடங்களிலும் அன்பு ரசிகர்களின் ''அரோஹரா'' கோஷங்களுடன் தென்றலும், தேன்மாரியும் (ஒவ்வொரு இடங்களிலும் அரங்கேற்றத்தின் சிறிது நேரத்திற்கு முன்னர் இளங்காற்றும், தூற்றல் மழையும்) ரசிகர்களை மகிழ்வித்தது நெஞ்சம் மறவாத இனிய நிகழ்வுகளாகும். இது நாடக வரலாற்றில் ஓர் அதிசயமாகும்.



# ஆனந்தக் கூத்தன்

(சமூக நாடகம்)

"ஆரையூர் இளவல்"

(திரை திறக்கப்படுவதன் முன்னர் இப்பாடல் பாடப் படுகின்றது. குமர குருபர சுவாமிகளின் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்ப் பாடல் இது.)

பாடல் :

''பெருந்தேனிறைக்கும் நறைக் கூந்தற்
பிடியே வருக முழு ஞானப்
பெருக்கே வருக பிறை மௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடு நல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக பழ மறையின்
குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும் பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே!''

(இப்பாடல் பாடி முடிந்ததும் பின்வருமாறு
அறிவிக்கப்படுகின்றது.)

அறிவிப்பு : வன இலாகாவுக்காக நில அளவையாளர் நீல கண்டமும் அவரது உதவியாளர் ஆரோக்கியமும் வேலை யாட்களுடன் காடு அளந்து கொண்டிருந்தபோது மதங் கொண்ட ஓர் காட்டு யானையால் துரத்தப்பட்டுக் காட்டில் வெகுதூரம் ஓடி வழிதவறிக் காட்டில் அலைந்து திரியும்போது ஒருநாள் மாலை ஓர் பெரிய ஆலமரத் தடிக்கு வருகின்றனர்.

திரை திறக்கப்படுகின்றது.

காட்சி : 01.

இடம் : ஓர் ஆலமரத்தின் கீழ்.

பாத்திரங்கள் : நீலகண்டம், ஆரோக்கியம்.

நீலகண்டம்: (களைத்துத் தளர்ந்துபோய் வந்துகொண்டே) அப்பாடா...... இனிமேல் என்னால ஒரு அடிகூட நடக்க முடியாது. (சோர்ந்துபோய் ஆலமரத்தடியில் அமர் கின்றார்)

ஆரோக்கியம்: (நீலகண்டத்துக்குச் சற்றுத் தள்ளி நிலத்தில் அமர்ந்துகொண்டே) ஓம் ஐயா எனக்கும் கஷ்டமாகத் தான் இருக்கு. இந்த மூண்டு நாளும் வழிதெரியாம இந் தப் பெரிய காட்டுக்குள்ளேயே சுற்றிக்கொண்டிருக்கம்.

நீலகண்டம்: வழி ஒண்டும் தெரியல்லையே. நம்மட வேலை யாட்கள் என்ன ஆனார்களோ. அதுவும் தெரியல்லயே.

ஆரோக்கியம்: யேசுவே! அவர்களுக்கு ஒண்டும் வராம காப் பாத்த வேனும் பிதாவே.

நீலகண்டம்: போன கிழமைதான் இந்தப் பகுதிக்கு மாற்ற லாகி வந்தன். எனக்கு முன்பின் தெரியாத பகுதி இது. தெரியாத பகுதிக்கு அதுவும் காட்டுப் பகுதிக்கு திடீரெண்டு அனுப்பாதிங்க, அப்படி அனுப்புவதாக இருந்தாலும் இப்பகுதிய நன்றாகத் தெரிந்தவங்களை யும் சேர்த்து அனுப்புங்க எண்டு எவ்வளவோ சொல் லிப் பாத்தன்.

ஆரோக்கியம்: கேக்கல்லயே அவசரம் அவசரம் எண்டாங்க அந்த அவசரத்த இப்ப நாம அனுபவிக்கிறம். நீங்களும் இந்த இடத்துக்குப் புதிசி நானும் புதிசி அங்க கந் தோரில இருக்கிற மேலதிகாரியும் புதிசி. நம்மோட வந்த வேலையாட்களும் புதிசி என்ன செய்யிறது. ஆர நோகிறது. எண்டாலும் ஐயா......

நீலகண்டம்: சொல்லு ஆரோக்கியம். நீயாவது என்னோட இருக்கிறது எனக்கு எவ்வளவு ஆறுதலாக இருக்கு தெரியுமா?

ஆரோக்கியம்: ஐயா! நாம ஆருக்கும் துன்பம் செய்யல. அந்த யேசுபிதா நம்மளுக்கு நல்ல வழிகாட்டுவார்

பாருங்க. சாப்பாடு இல்லாம குடிக்கத் தண்ணிகூட இல்லாம காட்டில அலைஞ்சி திரிஞ்சம் நேத்து அந்த மழை பெஞ்சதால மழைத் தண்ணியக் குடிச்சம் அதால தான் இப்ப கொஞ்சம் தெம்பாக இரிக்கம். கவலைப் படாதிங்க ஐயா.

நீலகண்டம்: கவலைப்படாம எப்படியப்பா இரிக்கமுடியும். நம்மள நம்பிவந்த வேலையாட்களுக்கு என்ன நடந்ததோ தெரியல்லையே அவங்கள் குடும்பமும் நம்மட குடும்பமும் அவர்களையும் நம்மளையும் தேடி எங் கெங்கெல்லாம் அலையுறாங்களோ என்னென்ன கஷ் டப்படுகிறாங்களோ தெரியல்லையே...... (அழுகிறார்)

ஆரோக்கியம்: ஐயா! நீங்க அழலாமா? இவ்வளவு அனுபவ சாலியான நீங்களே அழுதால் நான் என்னய்யா செய் வது? உங்கட நிழலில் இருக்கிறதாலதான் நான் என் னைப் பத்தியும் என் வீட்டைப்பத்தியும் யோசிக்காம இருந்தன். இப்ப உங்கட துன்பத்தப் பார்க்கும்போது நான்...... நான்...... (விம்மி விம்மி அழுகிறான்.)

நீலகண்டம்: அழாதே அரோக்கியம். அழாதே: நான் நம் மட இன்றைய நிலைக்காக அழல்ல. இது ஒத சாதா ரண நிகழ்ச்சி இத நான் பெரிசாக நினைச்சிக் கவலைப் படல்ல. ஆனால் நான் அழுதது... (அழுகையை அடக் கிக்கொண்டு கம்மிய குரலில்) இருபதொரு வருடங் களாக என்னையும் என்ர மனைவியையும் அழவைத்துக் கொண்டிருக்கிற ஒந சம்பவத்த நினைச்சி (பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்த முடியாமல் அழு கின்றார்)

ஆரோக்கியம்: (தழுதழுத்த குரலில்) யேசுவே! இவருக்கு ஆறுதலைக் கொடு ஐயா அது என்ன சம்பவம் எண்டு எனக்கும் சொன்னால் உங்கட வேதனை கொஞ்சம் குறைவாக இருக்கும். சொல்லுங்க ஐயா!

நீலகண்டம்: (கண்ணீரைத் துடைந்துக்கொண்டே) சொல்லு றன் ஆரோக்கியம். அதை நான் சொல்லத்தான்வேண் டும். எங்களுக்குத் திருமணமாகி ஐந்து வருடங்கள் குழந்தை இல்லாமல் இருந்தோம். குழந்தை இல்லாதது என்னையும மனைவியையும் வெகுவாகப் பாதித்திருந் தது. அதனால கதிர்காமத்துக்குச் சென்றோம். முருகப்

பெருமானுடைய சந்நிதியில் நிண்டு எம்பெருமானிட்டக் குழந்தை வரம் கேட்டுப் பிரார்த்தித்துக்கொண்டோம். குழந்தை கிடைத்ததும் கால்நடையாகக் கதிர்காம யாத்திரை சென்று முருகன் சந்நிதியில் வைத்துக் குழந்தைக்கு முடி இறக்குவதாகப் பிரார்த்தனை.

ஆரோக்கியம்: பிரார்த்தனை நிறைவேறியதா ஐயா?

நீலகண்டம்: ஓம் ஆரோக்கியம். எம்பெருமான் எங்கள் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்தார். அடுத்த வருடமே எங்களுக்கு அழகான ஆண் குழந்தையொன்று பிறந்தது. ஆனந்தமயிலோனின் அருட்கடாட்சத்தினால பிறந்த குழந்தை ஆதலால் அவனுக்கு ஆனந்தன் என்று நாமகரணஞ் சூட்டினோம்.

ஆரோக்கியம்: புறகு...... என்னய்யா நடந்தது?

நீலகண்டம்: குழந்தைக்கு மூன்று வயதானபோது குழந்தையையும் அழைத்துக்கொண்டு மட்டக்களப்பிலிருந்து கால்நடையாகக் கதிர்காம யாத்திரையை மேற்கொண்டோம். (பெருமூச்சுவிட்டுக் கண் கலங்குகின்றார்.)

ஆரோக்கியம்: ஐயா! அதுக்குப்புறகு......?

நீலகண்டம்: பொத்துவில், உகந்தை, சங்கமாங்கண்டி வரை வரையும் யாத்திரை சுகமாக இருந்தது. சங்கமாங்கண்டியிலிருந்து புத்தலைநோக்கிக் காட்டுப் பாதையால் செல்லவேண்டும்...... (அழுகையை அடக்கிக்கொண்டு எழுந்து சிறிது தூரம் நடக்கின்றார். ஆரோக்கியமும் அவர் பின்னால் செல்கின்றான். பின்பு திரும்பிவந்து அதே ஆலமரத்தின் கீழ் நிற்கின்றனர்.)

ஆரோக்கியம்: ஐயா! உங்களுக்கு மனவருத்தத்தைத் தந்துத்தன். என்னை மன்னிச்சுக்கொள்ளுங்க.

நீலகண்டம்: அப்படியொன்றுமில்ல ஆரோக்கியம். என் மன அமைதியக் கெடுத்துக்கொண்டிருக்கிற அந்தச் சம்பவத்த வாய்விட்டு மனம்விட்டுச் சொல்லும்போது என்ர மனதுக்கு ஆறுதலாக இருக்கு. (பெருமூச்சு விட்டுக்கொண்டே) அன்று அந்தக் காட்டுப்பாதையில் நாங்க சென்றுகொண்டிருந்தபோது திடீரெண்டு காட்டிக்குள்ளிருந்து வெளிப்பட்ட ஒரு மதம்பிடித்த காட்டு

யானை எங்களத் துரத்தத் தொடங்கியது. நாங்களும் எங்களோடு யாத்திரை செய்த அடியார்களும் காட்டுக்குள் பல பக்கங்களாலயும் சிதறி ஓடத்தொடங்கினோம். அப்போது எனது மனைவியின் கையிலிருந்த குழந்தையை ஒரு பெரியவர் வாங்கிக்கொண்டார். வெகு நேரத்துக்குப் பிறகு கங்கைக் கரையை வந்து சேர்ந்தோம். குழந்தையையும் பெரியவரையும் தேடினோம் ஆறு நாட்களாக ஐயன் கந்தப்பெருமான் வீதியெல்லாம் தேடினோம். பெரியவரையும் காணவில்லை: எங்கள் அன்புச் செல்வனும் கிடைக்கவில்லை. இன்று வரை தேடிக்கொண்டேயிருக்கின்றோம். (விம்மி வெடித்து அழுகிறார் அந்தப் பாசத் தந்தை நீலகண்டம்)

ஆரோக்கியம்: (சோகக் குரலில்) ஐயா இப்படியொரு சோகக்கதை உங்கள் வாழ்க்கையில் நடந்திருக்குமெண்டு என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. ஐயா! இந்தக் கலியுகத்தில வாற கஷ்டங்களுக்கெல்லாம் பரிகாரம் தேடும் ஒரே வழி இறைபக்திதான் எண்டு அடிக்கடி நீங்க சொல்லுவிங்களே. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கட்டாயம் நான் சேச்சுக்குப் போகவேணும் எண்டு என்னக் கட்டாயப்படுத்துவிங்களே. உங்களையும் கடவுள் இப்படிச் சோதிச்சுவிட்டானே.

நீலக்கண்டம்: ஓம் ஓம். சோதித்தல் இறைவனுக்கு மிகவும் பிடித்தமான திருவிளையாடல் இது அவன் தந்த வாழ்வுதானே. அந்த வாழ்வை நாம எப்படி வாழுறோம் என்று சோதித்துப் பார்ப்பதுல அவனுக்கு அதிகமான அக்கறையிருக்கு. இதனாலதான் தினம் தினம் நாம தீக்குளிக்கின்றோம். தீக்குளிப்பு என்கின்ற துன்பத்திலே மிதக்கின்றோம். அதுவும் ஒரு சோதனைதான், இந்தச் சோதனையில சித்திபெற்றால் மகிழ்ச்சியடைகின்றோம். தோல்வியடைந்தால் வருத்தமடைகின்றோம்.

ஆரோக்கியம்: அப்பாடா எவ்வளவு பெரிய தத்துவத்த இவ்வளவு சிம்பிளாகச் சொல்லுறிங்க.

நீலகண்டம்: ஆரோக்கியம் உங்களுக்கும் உலகஞானம் இருக்கின்றது. சமய ஞானமும் இருக்கின்றது. தத்து

வத்தை நாம அறிஞ்சிவைத்திருப்பது நல்லதுதான். அதை சொல்லுவதிலும் தவறில்ல. ஆனாலும் சில சமயங்களில் பாசம் மேலெழுந்து அந்தத் தத்துவங்கள் ஞானங்களையெல்லாம் மறைத்துவிடுகிறது இல்லையா?

ஆரோக்கியம்: உண்மைதான் ஐயா வெற்றியையும் தோல்வியையும், துன்பத்தையும், இன்பத்தையும் சமமாக நோக்குகின்ற மனப் பக்குவம் மனிதனுக்கு இல்லாதபடியால்தான் மனிதன் துன்பப்படுகின்றான். நீங்க சொன்னதுபோல பாசம் மேலோங்கி நிற்கிறதால இந்தச் சமத்துவ நோக்கு தளர்வடைஞ்சு போகுது. இதை மனிதனுடைய பலவீனம் எண்டு சொல்லலாமா? என்னவோ ஐயா! நான் உங்களைவிடக் குறைவாகத்தான் படிச்சவன் உங்களோடு தர்க்கித்துப் பேசுகிறேன் எண்டு நினைச்சிடாதிங்க,

நீலகண்டம்: (ஆரோக்கியத்தின் தோளில் அன்புடன் தட்டிக் கொண்டே) ஆரோக்கியம்! உங்களை நான் மதிக்கின்றேன். நீங்கள் என்னையும்விடச் சிறந்த விவேகமுள்ளவர். எனக்கு மேலதிகாரியாக இருக்கவேண்டியவர் ஆனால் என்னோடு வேலைசெய்வதை ஒரு குறையாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

ஆரோக்கியம்: அப்பிடி நான் சொல்லவும் இல்லை. இப்படி எதுவும் நினைக்கவும் இல்லையே ஐயா.

நீலகண்டம்: ஆரோக்கியம் உங்கட நல்ல மனதுக்காக உங்கள நான் அதிகமாக நேசிக்கிறன். நீங்க சொன்னீங்களே படிப்பு எண்டு. அது அவரவர்களுக்குக் கிடைக்கிற சந்தர்ப்பத்தைப் பொறுத்து வருவது. அதிகம் படித்தவர் ;கெட்டிக்காரர் என்றோ குறையப் படித்தவர் கெட்டித்தனம் இல்லாதவர் என்பதோ அதன் கருத்தல்ல எனக்குச் சந்தற்பம் கொஞ்சம் கூடக் கிடைத்தது. அதனால் நான் கூடப் படித்தேன். உங்களுக்குச் சந்தர்ப்பம் குறையக் கிடைத்திருக்கு அதனால் கொஞ்சம் குறைவாகப் படித்திருக்கிறிங்க. ஆனாலும் என்னையும்விட உங்களுக்கு ஞானம் அதிகமாயிருக்கின்றது. அந்த ஞானத்துக்குச் சான்றுப் பத்திரம் இல்லாதபடியால்தான் நீங்கள் என் பணிப்பின்கீழ் வேலைசெய்கின்றீர்கள். உங்களிடமுள்ள ஞானத்துக்குச் சான்றுப் பத்திரம் கிடைத்துவிட்டால் நான் உங்கள் பணிப்பின்

கீழும் நீங்கள் என் மேலதிகாரியாகவும் கடமையாற்ற லாம். என் மகன் என்னையும்விடக் கூடப் படித்து பெரிய பெரிய பட்டங்களெல்லாம் பெற்று என்னையும் விட உயர்ந்த பதவியிலே இருக்கவேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். அவனுடைய படிப்பிற்காக இது வரை நான் ஒரு சதம்கூடச் செலவழிக்கவில்லையே அதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே. இப்ப அவன் எங்க இருக்கிறானோ எப்படி இருக் றானோ (அவர் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்துகொண்டிருக்கின்றது. அவர் தன்னை யும் மறந்து வாய்விட்டு அழுகிறார்.)

ஆரோக்கியம்: (நீலகண்டம் நிலைகண்டு உளமுருகிய ஆரோக்கியம் உணர்ச்சிப் பெருக்கோடு) ஐயா!...... ஐயா!...... என்னை மன்னிச்சிடுங்க ஐயா!... (வாஞ்சை யோடு முழந்தாளிட்டு நீலகண்டத்தின் கால்களிரண் டையும் பற்றிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுகின் றான்.)

நீலகண்டம்: (சிறிது நேரத்தின் பின்னர் நீலகண்டம் தன் னைக் கட்டுப்படுத்திக்கொண்டு ஆரோக்கியத்தின் தலை முடியை வருடிக்கொண்டு அவன் தோள்களைப் பற் றித் தூக்கிவிடுகிறார்.)

எழுந்திரு ஆரோக்கியம் பாத்திங்களா! நான் படித்த படிப்பு கற்றுக்கொண்ட தத்துவங்கள் எல்லாம் என் பிள்ளைப் பாசத்தில் தவிடுபொடியாகிவிட்டது.

ஆரோக்கியம்: (வாஞ்சையுடன் தழுதழுத்த குரலில்) ஐயா!...

நீலகண்டம்: இங்கு என் உடம்பு மட்டும்தான் செத்த பிண மாக நடந்துகொண்டிருக்கின்றது. கடந்த 21 வருடங் களும் இதே நிலைதான் எனக்கும் என் மனைவிக்கும் எங்கள் உயிர்கள் எங்கள் ஆசைச் செல்வன் ஆனந் தனைத் தேடி அலைந்துகொண்டிருக்கின்றன. எங்கிருக் கின்றானோ எப்படியிருக்கின்றானோ! எங்களைத் தேடி எப்போது வருவானோ......

ஆரோக்கியம்: ஐயா! உங்கட மகன் எங்க இருந்தாலும் ஒரு குறையுமில்லாம நல்லாத்தான் இருப்பான். நலமாகத் தான் இருப்பான். கடவுள் உங்கட பக்கம் இருக்கும்

வரையும் நீங்க ஒண்டுக்கும் கவலைப்படாதிங்க. அவ னுக்கு ஒரு குறையுமிருக்காது.

நீலகண்டம்: ஆரோக்கியம்! நீங்க சொல்லுறத நான் ஆண் டவன் வாக்காக நம்புறன். இறை சோதனையிலிருந்து சித்தியடையிறதுக்கு ஒரேயொரு மார்க்கம் இறைவ னைப் பக்தியோடு இறைஞ்சுவதுதான். இண்டைக்குச் சிவராத்திரி, கடந்த 21 வருடங்களாக நானும் மனைவி யும் சிவராத்திரி விரதத்த தொடர்ந்து அனுஷ்டித்து வருகிறம் ஆரோக்கியம். இருட்டாகிறது இண்டைக்கு இந்த மரத்தடியில இரவைக் கழிப்பம்.

(ஆரோக்கியம் அப்பகுதியில் நின்ற பட்டமரக்கிளை ஒன்றை ஒடித்துக்கொண்டுவந்து அவ்விடத்தில் தீ மூட்டு கின்றான்.)

ஆரோக்கியம்: ஐயா! இரவைக்கு நானும் விழித்திருக்கப் போறன். விழித்திருந்து பிரார்த்திக்கப் போறன். நீங்க சிவபெருமானைப் பிரார்த்திப்பீங்க நான் யேசுபிரானப் பிரார்த்திக்கிறன்.

நீலகண்டம்: ஆரோக்கியம் சிவபெருமான், யேசுபிரான், புத்தபெருமான், அல்லா என்ற நாமங்களால அழைத் தாலும் ஒரே கடவுள்தான் பல நாமங்களிலும், ரூபங் களிலும் இருக்கிறார். உலகம் அரக்கர்களின் மாயை களினாலும், துன்பங்களாலும் அவஸ்தைப்பட்டபோது சிவபெருமான் குழந்தைக் குமரனை இந்த உலகத்துக்கு அனுப்பி உயிர்களைக் காப்பாற்றினார். அந்த உமா மகேஸ்வரனிடம் என் குழந்தையைக் காட்டும்படி வேண்டிக்கொண்டிருக்கிறன்.

ஆரோக்கியம்: ஐயா! கவலைப்படாதிங்க. உங்கள் வேண்டு தல் நிச்சயமாக நிறைவேறும் மனுக்குலத்தைத் துன் பத்திலிருந்து மீட்பதற்காக அவதரித்தவர்தான் யேசு பிரான். உங்கள் துயரம் நீங்கவேண்டுமென்று நான் அவரைப் பிரார்த்திக்கின்றன்.

(இருவரும் மௌனமாகப் பிரார்த்தனையில் ஈடுபட் டிருக்கின்றார்கள். சிறிது நேரத்தில் தூரத்திலிருந்து ஓர் மத்தள ஓசை அவர்களுக்குக் கேட்கின்றது.)

நீலகண்டம்: ஆரோக்கியம்! அதோ மத்தாளச் சத்தம் கேட் கிறதல்லவா...!

ஆரோக்கியம்: (உற்றுக் கேட்டுவிட்டு மகிழ்ச்சியோடு) ஓம் ஐயா! கிட்டடியில ஏதேனும் கிராமம் இருக்கிறாப் போல சிவராத்திரிக்குக் கூத்து ஆடுறாங்களாக்கும்.

நீலகண்டம்: (மகிழ்ச்சியோடு ''சிவ சிவா'' என்று சொல்லிக் கொண்டே எழுந்து) நாம அங்க போவம் ஆரோக்கியம்.

ஆரோக்கியம்: ஓம் ஐயா இறைவன் நம்மோட இரக்கமாயி ருக்கிறார் ஐயா. அவர் நமக்கு வழிகாட்டுறார். வாங் கய்யா போவம்.

(இருவரும் ஆளுக்கொரு எரிந்துகொண்டிருக்கும் விறகுக் கட்டையைக் கையில் பிடித்துக்கொண்டு மத்தள ஒலி வரும் திசையைநோக்கி மகிழ்ச்சியோடு செல்கின்றனர்)

— திரை —

—★—

காட்சி : 02.

இடம் : பிள்ளையார் கோயில் வீதி.

பாத்திரங்கள் : இராமர், சீதை, இலட்சுமணன், பரதன், சத்துருக்கன், அண்ணாவியார், மத்தளக் கலைஞர், ஏடு பார்ப்பவர், பக்கப் பாட்டுக்காரர் (சபையோர்) இருவர், நீலகண்டம், ஆரோக்கியம், பார்வையாளர்கள்.

(கோயில் வீதியிலுள்ள சுமார் 2 அடி உயரமும், 15 அடி விட்டமுங் கொண்டதாகத் தென்னங்கிடுகினால் வளைத்துக் கட்டப்பட்டதும் மணல் நிரப்பிச் சமப்படுத்தப்பட்டதுமான மேடை. மேடையை வளைத்து வட்டவடிவில் 8 அடி உயரமுள்ள 4 தம்பங்கள் நடப்பட்டு அந்தத்தில் குடை வடிவில் சீலை கட்டப்பட்ட கூரை. மேடையை வளைத்து 5 அடி உயரத்தில் 6 தம்பங்கள் நடப்பட்டு தம்பங்களின் நுனியில் பப்பாசிக்காயில் தேங்காய் எண்ணெய் தோய்ந்த சீலைப் பந்தத்தில் எரியும் விளக்குகள் அதுபோன்ற அமைப்பில் வீதியில் ஆங்காங்கே எரியும் விளக்குகள் ஆலய வீதியைத் தேவலோகமாக்கிக்கொண்டிருக்கின்றன.

மேற்படி வட்டக்களரியில் ''இராம நாடகம்'' வடமோடிக் கூத்து ஆடப்படுகின்றது. பெரும்பாலும் அவ்வூர் மக்களும் பக்கத்து ஊர் மக்களுமாக வீதியில் பாய்விரித்தமர்ந்து கூத்துப் பார்த்து மகிழ்கின்றனர். இராமர் கொலுவில் வருகிறார்)

கொலுவிருத்தம்: (இராமர் பாடத் தொடர்ந்து பக்கப் பாட்டுக்காரரும், ஏடு பார்ப்பவரும் பாடுகின்றனர். அண்ணாவியாரின் சல்லாரித் தாளமும், மத்தளக் கலைஞரின் மத்தள இசையும் பாடலுக்கு இனிமை சேர்க்கின்றன.)

மதியனைய முகமலர்சேர் சிரமீது நவகோடி
    மணியிலகு முடிதுலங்க
மருவு மதகரி யொலியின் மிதரேகை மீதில்வரு
    மாரி மழை சொரிய வருமுன்
துதியனைய உயர்வுதரு சிரமீதில் நவகோடி
    தோளணிகள் ஒளி தரவே
துய்யமுனி வரலாறு கூற வானவர்களும்
    துய்ய மழை மாரி சொரிய
விதியின் முறை பிறழாது நடன நாட்டியராட
    வெண் கவரி மாதர் வீசி
வேத வேதியர்கூட வேந்தர் பணிவிடை நாட
    வேத கோஷங்களாட
பதியுலவு தேவ கன்னிய ரேவல் பெறு சீதை
    பரதர் லெட்சுமணரினுடனே
பகரு சத்துருக்கர் முன்னான சிறிராமர் பதி
    படர் சபை விளங்க வந்தார்.

(அப்போது நீலகண்டமும், ஆரோக்கியமும் அங்கு வருகின்றனர். அவர்கள் ஆலயத்தை வலம்வந்து இறைவனை வணங்கிவிட்டு வீதியில் அமர்ந்து கூத்தை ரசிக்கின்றனர். அண்ணாவியார் இராமர் கொலு வரவுத் தருப்பாடல் பாடுகின்றார். பக்கப்பாட்டுக்காரரும் சேர்ந்து பாடுகின்றனர். மத்தளம் பேசுகின்றது. கூத்தர்கள் ஆடுகின்றார்கள்.)

தகதிகதா தெய்யாத் தெய்தெய்
தாதெய்யத்தோம் தகதிகதா
தகதிகதா தெய்யாத் தெய் தெய்
தாதெய்யத்தோம் தகதிகதா.

(மீண்டும் மீண்டும் இந்தத் தருப்பாடல் பாடப்படுகின்றது. கூத்தர்கள் நின்ற நிலையிலும், பக்கங்களுக்குத் திரும்பியும் அபிநயஞ் செய்து ஆடி அந்த இடத்திலே ஒருவர் பின் ஒருவராக பாம்புபோல் வளைந்து ஆடிச் சென்று (வீசானம் போட்டு) பின்னர் எட்டுப்போன்ற இலக்கத்தைப்போல் வளைந்து ஆடிச்சென்று (எட்டுப்போட்டு) நடு அரங்கிற்கு வருகின்றனர். நடு அரங்கில் அண்ணாவியார் பாடும் பின் வரும் தருவுக்கு ஆடுகின்றனர்.)

தகதத் தகதத் தகதத் தகதத்
தந்தரி நாதரி தகுந்தரி குகுந்தரி
தந்தரி நாதரி தகுந்தரி குகுந்தரி
தணுத்சத் தணுத்சத் தணுத்சத்
தகததிங்கிணத்தோம் தகததிங்கிணத்தோம்
தணுத்சத் தணுத்சத் தணுத்சத்
தகததிங்கிணத்தோம் தகததிங்கிணத்தோம்.

(என்ற தருவுக்கு ஆடிக்கொண்டு முன் களரிக்கு வருகின்றனர். முன் களரியில் பின்வரும் தாளத்துக்கு ஆடுகின்றனர்.)

தாம் தாம் தக தந்தரிகிட தக
தீங்தாரத் தில்லானா சுந்தரி
தகணக சுந்தரி ததிமிர்தகிட தெய்
தளங்கு தித்தக தகததிங்கிணத்தோம்
தகததிங்கிணத்தோம் தகததிங்கிணத்தோம்.

(என்று தாளம் தீர்க்கப்படுகின்றது. தொடர்ந்து இராமர் கொலு வரவுப் பாட்டுப்பாட அண்ணாவியாரும், பக்கப் பாட்டுக்காரரும் தொடர்ந்து பாடுகின்றனர். மத்தளம் பேசுகின்றது )

இராமர் பாடல்:

கொலுவில் வந்தார் — நல்ல
ஒயிலுடன் ராமர் கொலுவில் வந்தார்.
(கொலுவில்)

கொலுவில் வந்தனர் அயோத்தியாபுரி
குலங்கள் முழுவதும் விளங்கவே ராமர்.
(கொலுவில்)

வலிமை மிஞ்சிய கோதண்ட ராமர்
மகிழும் லட்சுமணர் பரத சத்துருக்கர்.
(கொலுவில்)

தேச துரக பதாதி சூழவே
செழிக்கும் அயோத்தியிற் தசரதர் பெற்றவர்
(கொலுவில்)

பிசகிலாக் குலம் விளங்கவே நல்ல
பெலத்த தம்பிமார் சூழவே ராமர்.
(கொலுவில்)

கொத்து முத்துச் சரங்கள் மின்னவே
குண்டலங்களு மாடவே ராமர்.
(கொலுவில்)

கோதை பத்தினி சீதை மாதுடன்
கூடவே சபை தோணவே ராமர்.
(கொலுவில்)

கோசலா தேவி பெற்ற மைந்தனும்
குழந்தை மூவரும் சூழவே ராமர்.
(கொலுவில்)

சுந்தரப் பணிகள் மின்னச்
சோதிகள் பளபளென்ன
சந்திரன் போல் ராமச்சந்திரன்
சபையில் வந்து தோற்றினார்.
(கொலுவில்)

(அப்போது ஆலயமணி ஒலிக்கின்றது )

அறிவித்தல்: ஆலய அறிவித்தல். இரண்டாம் ஜாமப் பூசை ஆரம்பமாகவுள்ளது. அடியார்கள் ஆலயத்துள் வந்து பூசையில் கலந்துகொண்டு எம்பிரான் அருள் பெறுமாறு வேண்டுகின்றோம். பூசையின் பின்னர் கூத்துத் தொடர்ந்து நடைபெறும்.

(கூத்து நிறுத்தப்படுகின்றது. பார்வையாளர்களுடன் நீலகண்டமும், ஆரோக்கியமும் ஆலய வெளிக்கிணற்றில் கை, கால், முகம் கழுவிக்கொண்டு ஆலயத்துள் செல்கின்றனர்.)

— திரை —

—★—

காட்சி : 03.

இடம் : நீலகண்டம் பங்களா.

பாத்திரங்கள் : நீலகண்டம், மகள் ரதிதேவி, மனைவி அம்பிகா.

(காலைநேரம். பங்களாவின் உள் மண்டபத்தில் நீல கண்டம் ஆழ்ந்த சிந்தனையுடன் குறுக்கும் நெடுக்கு மாக நடந்துகொண்டிருக்கின்றார். அப்போது அங்கு அவர் மகள் ரதிதேவி வருகின்றாள்.)

ரதிதேவி: இப்பெல்லாம் அப்பாவுக்கு எப்ப பார்த்தாலும் பெரிய யோசனையும் உலாவுமாகத்தான் கிடக்கு.

நீலகண்டம்: (உலாத்திக்கொண்டே) ...ம்...

ரதிதேவி: (இடுப்பில் கையை ஊன்றியபடி வேடிக்கை பார்ப் பவளைப்போல் நின்றுகொண்டு) ...ம்...அப்பா...உம்...

நீலகண்டம்: என்னம்மா......! அங்க அம்மா கூப்பிடுறா...... போம்மா...

ரதிதேவி: ...ம்... கும்... அம்மா கூப்பிடல்ல அப்பா. ஏனப்பா என்னத் துரத்துறீங்க. அப்படி எனனதான் பெரிய யோசனையோ. (செல்லமாக) எனக்குச் சொல்லக் கூடாதா?...

நீலகண்டம்: பெத்தவங்களுக்கு பிள்ளைகளைப்பத்தித்தானே யம்மா கவல இருக்கும். அவங்க நல்லாப் படிக்க வேணும் .. நல்லா வாழவேணும்...

ரதிதேவி! அதற்கு ஏன் இப்பிடிச் சீரியஸாக யோசிக்கிறீங்க. எண்ட படிப்பில ஏதும் குறகிற கண்டீங்களா...?

நீலகண்டம்: இல்லம்மா... இல்ல.

ரதிதேவி: அப்பா இந்த முற நான் கண்டிப்பாக மெடிக்கல் கொலிச்சிக்கு எடுபடுவன் அப்பா. எங்க எனக்குத் தாங்ஸ் சொல்லுங்க.

நீலகண்டம்: மெனி மெனி தாங்ஸ் அம்மா. சந்தோஷம்டா கண்ணா...

ரதிதேவி: அப்பா! நான் டாக்டராக வந்தப்புறம் வைத்தியத்துறையில பெரிய பெரிய ஆராய்ச்சியெல்லாம் செய்யப்போறன். இந்தப் புற்றுநோயிருக்கிறதே அது தான் ''கான்சர்''. இந்த உயிர்கொல்லி நோய்க்கு ஏதாவது நல்ல மருந்து கண்டுபிடிச்சாகணும்.

நீலகண்டம்: புற்றுநோயைவிடப் பயங்கரமான நோயொன்று இப்ப உலகமெல்லாம் வேகமாகப் பரவிக்கொண்டு வருதம்மா. முதலில அதக் கட்டுப்படுத்தியாகணும். இல்லாட்டா 21ம் நூற்றாண்டில அந்த நோயால உலக மக்களில பெருந்தொகையினர் அழிஞ்சுபோவாங்களாம்.

ரதிதேவி: எதச் சொல்றீங்க அப்பா. எயிட்சா? ஓ!...சிம்பிள்.

நீலகண்டம்: என்னம்மா இது. இவ்வளவு லேசாகச் சொல்லுறா? எவ்வளவு பெரிய கொடிய நோய் அது...

ரதிதேவி: (சடுமையான தொனியில்) அப்பா! இந்த உலகத்த வெல்லவேணுமானா மனிதனுக்கு முதலில கொடுக்க வேண்டிய மருந்து ''மன அடக்கம்''. அதாவது ''புலனடக்கம்'' என்கிற மருந்து. அந்த அடக்கத்த மீறி அட்டகாசமாக நடப்பதால்தான் மனிதன் கஷ்டப்படுறான், வீணாக அழிஞ்சுபோறான். அதைத் தடுக்கவேணும். அதுக்காக இந்த ''மன அடக்கம்'' என்ற மருந்த ஒவ்வொரு மனிதரையும் அவசியம் குடிக்கச்செய்யவேணும்.

நீலகண்டம்: அதெப்படியம்மா...?

ரதிதேவி: அப்பா! இராமரைப்போல ஏகபத்தினி விரதம் காக்கவேண்டிய அலசியம் இப்ப ஒவ்வொரு ஆண் மகனுக்கும் ஏற்பட்டிருக்கு. அதேபோல சீதையைப் போல பதிவிரதையாக இருக்கவேண்டிய கடமை ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்கு.

நீலகண்டம்: அப்புறம்...?

ரதிதேவி: மனித சமுதாயம் இந்தச் சவாலை ஏத்துச் சமாளிக்கவேணும். அத வலியுறுத்துவதக்குத்தான் ''எயிட்ஸ்'' என்கிற கொடிய நோயை இறைவனாகப் பார்த்து அனுப்பியிருக்கிறார். இராமாயணத்தின் பெருமை இப்ப உலகமெலாம் பேசப்படுகிறதப்பா.

நீலகண்டம்: இராமாயணம் வெறும் கதையில்லம்மா. அது மனிதனை வாழ்விக்க இறைவன் அவதாரமூர்த்தியாக வந்து அருள்செய்த வரலாறு. யேசுவைப்போல, புத்தரைப்போல, நபிகள் நாயகத்தைப்போல, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப்போல, ஏன் நமது காலத்தில் வாழ்ந்த மகாத்மா காந்தியைப்போல, அதற்கு முன்னால் வாழ்ந்த பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்போல எங்கும் நிறைந்த பரப்பிரம்மம் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியாக அவதாரஞ்செய்து மனிதன் எப்படியும் வாழக்கூடாது. ''இப்படித்தான் வாழவேண்டும்'' என்று வாழ்ந்து காட்டிய வரலாறுதான் இராமாயணம்.

ரதிதேவி: இன்னும் சொல்லுங்கப்பா...

நீலகண்டம்: அம்மா! சமஸ்கிருதத்தில ஒரு சுலோகம் இருக்கு. ''இதிஹாஸாய நபஹ'' என்று சொல்லிச் சிவபெருமானைத் துதிக்கும் சுலோகம் அது.

ரதிதேவி: அப்படியெண்டால் என்னப்பா..?

நீலகண்டம்: இராமாயணம் போன்ற இதிகாசங்களின் வடிவங்கொண்டவர் சிவபெருமான் என்பது அதற்கு அர்த்தம்.

ரதிதேவி: உண்மைதான் அப்பா. சிவபெருமான் சக்தியும் சிவமுமாக அர்த்தநாரீஸ்வரர் தோற்றத்தில் இருப்பதால் அவர் நடுநிலையாளராக - பாகுபாடற்றவராக இருக்கின்றார். மணமான ஒவ்வொரு ஆண்மகனும் தனது மனைவி தன்னுடலில் பாதியாக இருககிறாள் என்பதையும், மணமான ஒவ்வொரு பெண்மகளும் தனது கணவர் தனது உடலில் பாதியாக இருக்கிறார் என்பதையும் அதுபோல் மணமாகாத ஒவ்வொரு ஆண்மகனும் தனக்கு மனைவியாக வரப்போகிறவள் தனது உடலில் பாதியாக இருப்பாள் என்பதையும், மணமாகாத ஒவவொரு பெண்மகளும் தனக்குக் கணவராக வரப்போகிறவர் தனது உடலில் பாதியாக இருப்பார் என்பதையும்...

நீலகண்டம்: இதுதான் மனிதனுக்கு இறைவனால் வழங்கப்பட்டிருக்கும் வரம் என்பதையும், அந்த வரத்தை மீறினால் வாழ்க்கை நரகமாக இருக்கும் என்பதையும் மனிதகுலத்துக்கு எடுத்துச்சொல்வதுதான் இறை தத்து

வம். அந்தத் தத்துவத்தை நாம் இராமாயணத்தில் காண்கின்றோம். படிப்புவாசனையில்லாத பாமர மக்கள்கூட இந்தத் தத்துவத்தைப் புரிந்துவைத்திருக்கின்றனர். நமது பாரம்பரிய கலையான கூத்துக் கலை இந்தப் பெரும்பணியைச் செய்திருக்கின்றது. இராமாயணக் கதையை நாம் புத்தகத்தைப் படித்து அறிய வேண்டிய அவசியம் நமக்கு இல்லை. பாட்டி கதையாகவே அதை நாம் கேட்டறிந்திருக்கிறோம், கூத்துக்களில் பார்த்து மகிழ்ந்திருக்கின்றோம். ஒருவனுக்கு ஒருத்தி என்னும் பாரம்பரியத்தைப் பின்பற்றுபவர்கள் நாம். அந்தப் புனிதமான பண்பாட்டை இன்று உலக நாடுகளெல்லாம் போற்றுகின்றன, நாமும் போற்றப் படுகின்றோம். இந்த ''எயிட்ஸ்'' நோயைப்பற்றி நாம் கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை.

(அப்போது அம்பிகா கையில் இரண்டு கப் காப்பியுடன் அங்கு வருகிறாள்.)

அம்பிகா: (வந்துகொண்டே) என்னங்க! விடிஞ்சதும் விடியாததுமாக அப்பாவும் மகளும் சண்டை போடுறீங்க...

நீலகண்டம்: அதெல்லாம் ஒண்டுமில்ல அம்பிகா. ஒரு ஆராட்சி... அவ்வளவுதான்.

ரதிதேவி: இல்லம்மா உண்மையாக நான்தான் வலியவந்து அப்பாவோட சண்டை போட்டனான்.

அம்பிகா: ஏன்டா கண்ணா! அப்படி என்னதான் செஞ்சு போட்டார் அப்பா.

ரதிதேவி: இஞ்ச பாரம்மா! உங்கரெண்டு பேரிலயும் எனக்குச் சரியான பொறாமையாக இருக்கு. அதுதான் அப்பாவோட சண்டை போட்டன்.

அம்பிகா: என்ன எங்களப்பாத்துப் பொறாமைப்படுறயா? .. அந்த ஆமை வரக்கூடாதே. ஏன்டா கண்ணா வந்தது ?

ரதிதேவி: போம்மா! நீங்க ரெண்டுபேரும் சண்டை போடுறதப் பாக்கவேணுமெண்டு எனக்கு ஆசையாயிருக்கு. அக்கம் பக்கத்தில எல்லாம் புருஷனுக்கும் பொண்டாட்டிக்கும் அடிக்கடி சண்டை நடக்குதே. அப்பிடி ஏன்

இந்த வீட்டில நடக்கிறதில்ல. நீங்க ரெண்டுபேரும் என்ன ஏலாவாளிகளா?

அம்பிகா: (சிரிப்போடு) அதுவா? அது எனக்குத்தெரியாதே. உங்க அப்பாட்டத்தான் கேளேன்.

நீலகண்டம்: ஒருவர ஒருவர் புரிந்து நடந்துகொண்டா ஏனம்மா சண்டைபோடவேணும். இஞ்சபார் எனக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்ற விபரங்கள அம்மா நன்றாக அறிஞ்சிவைச்சிருக்கா. அதனால சாப்பாடு தொடக்கம் சகல விஷயங்களிலயும் எனக்குப் பிடிச்சதச் சிறப்பாகச் செய்யிறா. பிறகு ஏன் சண்டை.

அம்பிகா: அப்பாவும் அப்படித்தானம்மா. என் விருப்பப் படியேதான் எல்லாம் செய்கிறார். இந்த ஆராட்சி யெல்லாம் இப்ப எதுக்கு. கோப்பியக் குடியுங்க ஆறப் போகுது. கண்ணா! கோப்பியக் குடிச்சித்து சமைய லறைக்கு வாம்மா. இன்டைக்கு லீவுதானே. எனக்குக் கொஞ்சம் சமையலுக்குக் கெல்ப்பண்ணு. அப்பாவுக்கு வேல இருக்கும். அங்க ஆரோக்கியம் மாமா வந்திருக் கார்.

(அம்பிகா சமையலறைக்குச் செல்கிறாள். நீலகண்டமும் மகளும் காப்பி அருந்துகின்றனர்.)

— திரை —

—★—

காட்சி : 04.

இடம் : நீலகண்டம் பங்களாவின் வரவேற்பறை.

பாத்திரங்கள் : நீலகண்டம், ஆரோக்கியம்.

(நீலகண்டம் தனது பங்களாவின் வரவேற்பறையில் ஆரோக்கியத்தை வரவேற்கின்றார்.)

நீலகண்டம்: வாங்க ஆரோக்கியம். உட்காருங்க.

ஆரோக்கியம்: (உட்கார்ந்து கொண்டே) வரச்சொன்னீங் களாம் ஐயா!

நீலகண்டம்: ஓம்... ஓம்... நாளைக்குக் காலமேதான் வரச் சொன்ன நான். இண்டு ஞாயிற்றுக்கிழமையல்லவா சேச்சுக்குப் போயிருப்பாயென்டுதான் நாளைக்கு வரச் சொன்னன். இண்டைக்கு சேச்சுக்குப் போகவில்லையா?

ஆரோக்கியம்: சேச்சுக்கு அந்திக்குத்தான் போகவேணும். போன ஞாயிற்றுக்கிழமை மேரியையும் திரேசாவையும் கூட்டித்துப்போனன்.

நீலகண்டம்: அப்படியா? சந்தோஷம். ஆச்சரியமாயிருக்கே வழமைக்கு மாறாக குடும்பத்தோட போயிருக்கிறீங்க. என்ன விசேஷம்...?

ஆரோக்கியம்: ஐயா! அண்டைக்கு நீங்க சொன்ன செய்தி எண்ட மனத அரிச்சிக்கொண்டிருக்கு. கெதியில உங்கட மகன் உங்களுக்குக் கிடைக்கவேணுமென்டு ஆசைப் படுறன். அதுக்கு எனக்குத்தெரிஞ்ச ஒரே வழி ஆண்ட வரிட்ட மன்றாடுறதுதான். இத எண்ட பொஞ்சாதி மேரிட்டச் சொன்னன். அவள் சந்தோஷப்பட்டு மகள் திரேசாவையும் கூட்டித்துவந்தாள். மூண்டு பேருமாப் போய் ஆண்டவரிட்ட வேண்டுதல் செஞ்சம். ஐயாவும் போன ஞாயிற்றுக்கிழமை இருதய ஆண்டவர் சேச்சுக் குப் போனதாகக் கேள்விப்பட்டன்..?

நீலகண்டம்: ஓம் ஆரோக்கியம் நீங்க வழமையாகச் செல்லும் இருதய ஆண்டவர் ஆலயத்துக்கு அண்டு நானும் சென்று பிரார்த்தனை செய்தன். உங்களுக்கு அடிக்கடி நெஞ்சுக்குத்து வருமெண்டு சொன்னீங்களே! டொக்ட ரிட்டப்போய் சோதிச்சுப் பாத்திங்களா? உங்களுக்கு ஒண்டும் வரப்படாதெண்டு இருதய ஆண்டவரிட்ட வேண்டிக்கொண்டேன் நீங்க உடம்பக் கவனமாகப் பாத்துக்கவேணும். புள்ளகுட்டிக்காரன் சுகமாக இருக்க வேணும். நீங்க உடனடியாக இப்ப ஒரு வேல செய்ய வேணும்.

ஆரோக்கியம்: சொல்லுங்க ஐயா!

நீலகண்டம்: அந்த மதுப்பழக்கத்த விட்டுப்போட வேணும் தெரிஞ்சதா...

ஆரோக்கியம்: ஓம் ஐயா! ஐயாட சொல்ல நான் தட்ட மாட்டன். டொக்டரப் பாத்தன் பரிசோதிச்சார்.

கொஞ்சம் ''பிறசர்'' அதிகமாக இருக்கெண்டு சொன்னார். குளிசையெல்லாம் தந்தார். ஒழுங்காகப் பாவிக்க வேண்டுமாம். எதுக்கும் கவலப்படக்கூடாதாம்.

நீலகண்டம்: ஓம் ஓம். கவலதான் மனிதனுக்கு எமன். அதோட வாய்க்கட்டும் முக்கியம். கண்டதயெல்லாம் சாப்பிடக்கூடாது. கொழுப்பு, எண்ணெய் பதார்த்தங்களை ஏறெடுத்தும் பாக்கக்கூடாது. டொக்டர் சொன்ன உணவு வகைகளை மட்டுந்தான் சாப்பிடவேணும். அது சரி, நான் ஒருமாதம் லீவில போறன். உங்களுக்கும் ஓய்வுவேணும். நீங்களும் ஒரு மாதம் லீவு எடுத்துக் கொள்ளுங்க என்ன..?

ஆரோக்கியம்: ஓம் ஐயா! நானும் உங்களிட்ட லீவு கேட்க வேணும் எண்டுதான் இருந்தநான்.

நீலகண்டம்: சித்திர வருஷப்பிறப்புக்கு இன்னும் பத்து நாள் தான் கிடக்கு. நம்மட்ட வேலை செய்யிற ஆட்களுக்கு வருஷச் செலவுக்கு என்னவும் கொடுக்கவேணும். ஹஜ்ஜிப் பெருநாளுக்கு மீராசாய்வுக்கும் செலவிருக்கும. குணதிலகாவுக்கும் வருஷக் கொண்டாட்டம் இருக்கு. இன்னும் ஒருவரும் வரவில்லையே ஏன்?...

ஆரோக்கியம்: ஒரு நாளும் அவங்களாகவந்து கேக்கிறதில்லையே. நீங்க கூப்பிட்டுக்கொடுத்தா சந்தோஷமாக வாங்கிக்கொள்ளுவாங்க. அவங்களுக்குத்தான் ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கிறீங்களே.

நீலகண்டம்: சம்பளம் கொடுக்கிறது அவங்கட வேலைக்காக. ஆனா அவங்க நம்மட்ட விசுவாசமாக வேல செய்யிறாங்களே அதுக்குத்தான் இப்படி நல்ல நாள் பெருநாளில சர்மானம் கொடுக்கிறது. நம்மட்ட வேலை செய்யிறவங்களும், வேலசெஞ்சவங்களும் சந்தோஷமாயிருக்கவேணும். அப்பதானே நாமளும் சந்தோஷமாக இருக்கமுடியும்... ம்... கொஞ்சம் இருங்கவாறன் (தனது அறைக்குள் செல்கிறார்.)

ஆரோக்கியம்: (தனக்குள்) இந்த மனுஷன் தன்னைப்பத்தியோ தனது குடும்பத்தைப்பத்தியோ கவலப்படுறதாத் தெரியல்ல. மத்தவங்களப்பத்தித்தான் எப்பவும் நினைக்கிறார். மத்தவங்களுக்கு உதவி செய்யிறதுமில்லாம அவங்கட ஆரோக்கியத்துக்காக ஆண்டவனையும்

வேண்டிக்கொள்ளுறாரு. இப்படிப்பட்ட மனுஷனிட்ட வேல செய்யிறவங்க, வேல செஞ்சவங்களெல்லாம் கொடுத்துவச்சவங்கதான்.

நீலகண்டம்: (அறைக்குள்ளிருந்து பண நோட்டுக்களுடன் வந்து அவற்றை ஆரோக்கியத்திடம் கொடுத்து) ...ம் ...இந்தாங்க. இதில பதினாலாயிரம் ரூபா இருக்கு அவங்க ஐஞ்சு பேருக்கும் ஆளுக்கு இரண்டாயிரமாகக் கொடுங்க. மற்றது நம்மட்ட வேல செஞ்சாரே நம சிவாயம் இப்ப அவர் கொஞ்சம் கஷ்டப்படுகிறார்போல இருக்கு. அவருக்கும் ஒரு இரண்டாயிரத்தக் கொடுங்க. மிகுதிய நீங்க வச்சுக்கொள்ளுங்க. அண்டு சிவராத்திரியண்டு நமக்கு வழிகாட்டின பிள்ளையாரப்பனக் கொஞ்சம் தரிசிக்கவேணும். அதோட அண்டு ராமருக்கு ஆடினானே அந்தப் பையனையும் ஒருதரம் பார்க்க வேணுமெண்டு ஆசையாயிருக்கு.

ஆரோக்கியம்: நானும் உங்களோட வாறன் ஐயா. எனக்கும் ஒரு "நேர்த்தி" இருக்கு ஐயா! எனக்கு நந்தாருக்கு அன்பளிப்புத் தந்த நீங்கதானே. இத...

நீலகண்டம்: பரவாயில்ல வைத்தியச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்க.

ஆரோக்கியம்: (உணர்ச்சிவயப்பட்டவராக நன்றிப் பெருக்கோடு) ஐயா!...

(ஆரோக்கியம் கண்கள் பனிக்க நீலகண்டத்தை வாஞ்சையுடன் பார்த்துக்கொண்டிருக்கின்றான். அச்சமயம் பக்கத்துத் தெரு ஸ்ரீ முருகன் கோயிலிலிருந்து ஒலிபெருக்கியில் பாடல் ஒன்று கேட்கின்றது.)

பாடல் :

"பேராதரிக்கும் அடியவர்தம் பிறப்பை
ஒழித்துப் பெருவாழ்வும்
பேறும் கொடுக்கவரும் பிள்ளைப்
பெருமான் என்னும் பேராளா...
சேரா நிருதர் குலகலகா
சேவற்கொடியாய் திருச்செந்தூர்த்
தேவா தேவர் சிறைமீட்ட செல்வா
என்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து ......................................"

— திரை —

## "குடும்பம் ஒரு கோயில்" *(சமூகம்)*

இடம் : மட். மாநகர மண்டபக் கலையரங்கம்.

காலம்: 29-01-1977 சனிக்கிழமை மாலை.

பிரதம **அதிதி:** திரு. ஆர். பிறட்மன் வீரக்கோன்.

(முன்னாள் மட். மாவட்ட அரசாங்க அதிபரும். சர்வதேச திட்ட மிட்ட பெற்றோர் சம்மேளனத்தின் இந்துசமுத்திரப் பிராந்திய இயக்குனரும்)



நாடக நிறைவை அடுத்து அரங்கில் எடுத்த படம்.
நாடக மேம்பாட்டுக்காக உழைத்த கலைஞர்கள் சிலருடன்
''ஆரையூர் இளவல்''

நிற்பவர்கள்: (இடமிருந்து வலமாக) சா. சிவபாக்கியராசா, எம். ஏ. சி. எம். அலியார், சு. காராளசிங்கம், திருமதி தங்கம்மா சந்திர சேகரம் (ஆசிரியை), க. உ. வே. ந. கணேசானந்தன்,

ஆசனத்தில் அமர்ந்திருப்பவர்கள்: (இடமிருந்து வலமாக) எஸ். தாமோதரம்பிள்ளை (முன்னாள் பொலிஸ் பரிசோதகர்), ''ஆரையூர் இளவல்'', சி. சந்திரசேகரம் (ஆசிரியர்),

மேடையில் அமர்ந்திருப்பவர்கள்: (இடமிருந்து வலமாக தலைப்பாகை யுடன்) ரைற்றஸ் கென்றிக், து. இரத்தினராசா.

நாட்டில் இருந்து தென்நாட்டுக்குலந்து கலந்ததுதான் வடமோடி எண்டு சொல்லுறாங்க.

ஆரோக்கியம்: ஆனா பாட்டிலயும், தாளக்கட்டிலயும், ஆட்டத்திலயும் சுவையானது தென்மோடிக் கூத்துதான் ஐயா,

நீலகண்டம்: ஓமோம், தமிழப்போல சுவையானது எண்டு சொல்லுங்க. ஆரோக்கியம் அண்டைக்கு ராமராக ஆடினதும் இப்ப செகதனியாளியாக ஆடுகிறதும் ஒரு ஆள்போலத்தான் தெரியுது இல்லையா?

ஆரோக்கியம்: அப்படித்தான் நினைக்கிறன் ஐயா, என்ன ஆட்டம் ஆடுறான் பொடியன். இவனப் பெத்தவங்க பாக்கியசாலிகள்தான் ஐயா.

நீலகண்டம்: (கலங்கிய கண்களுடன்) ஓம் ஆரோக்கியம். அந்தப் பாக்கியசாலிகள நாம பாராட்டவேணும். பரிசு குடுக்கவேணும். என்ற மசனும் இப்ப இவனப்போல தான் இருக்கவேணும். அவன இப்ப உடனே பார்க்க வேணும் என்ற தாபம் எனக்கு இப்ப அதிகமாகிவருது ஆரோக்கியம்.

ஆரோக்கியம்: கவலப்படாதிங்க ஐயா, உங்கட மகன் உங்களுக்குக் கெதியில கிடைப்பான் எண்டு எண்ட மனம் சொல்லுது கூத்தப் பாப்பம். செகதனியாளி மன்னருர சபைத் தருப்பாட்ட அண்ணாவியார் பாடுறார். அவர் கிழவராயிருந்தாலும் வெங்கலத்த உருட்டிறமாதிரி இருக்கு அவரிர குரல்.

நீலகண்டம்: ஓமோம்... கலைஞர்கள் எப்போதும் இளமையானவர்கள்தான். வயது போனாலும் அதிலயும் ஒரு கவர்ச்சி இருக்கு பாத்திங்களா.

(அண்ணாவியார் பாடுகிறார், கூத்தர்கள் ஆடுகின்றனர், மத்தளம் பேசுகின்றது.)

"தருமத்தை யொருமித்து நிரமித்த
வுரையுற்றதரை முத்துவொரு சந்திர நிழலிலே
வரையுற்ற புயசித்திர மலிசித்த
சனையொத்துவரு செகதனையாளி வருகின்றார்.
புடையண்டு எழில்கண்டு தொழுபெண்டு விளிவண்டு

புரல்கொண்டு மொருள்கொண்டு பொருந்தவே குடை
கொண்டதுடி கொண்டார் களுமின்றி யொலிமன்றி
இயல் செகதனையாளி வருகின்றார்''

தரு:

தனனம் தனதன தனனம் தனதன
தனனம் தனதன தானீனா
தனனம் தனதன தனனம் தனதன
தனனம் தனதன தானீனா
தந்த தனதான தந்த தனதான
தனந்த தனதான தானீனா

செகதனையாளி மன்னர் விருத்தம்:

மன்னவர் வீரம்போற்ற வரும்புகழ் எவரும் சாற்ற
இன்னிலத் தெனக்கு வாய்மை இயம்பு மந்திரியே கேளாய்
அன்ன மின்னடையாளான அலங்கார ரூபியைத்தான்
கன்னி மின்னாளையிப்போ களிப்புடன் அழைத்திடாயே.

வசனம்: ஆனாற் கேளும் மந்திரி எங்கள் சற்புத்திரியான அலங்கார ரூபியை அழைத்து வருவீராக.

மந்திரி: அப்படியே ஆகட்டும் அரசே.

அலங்காரரூபி வரவு விருத்தம்:

(அலங்காரரூபி பாடுகிறார்)

''உருமருவு கரளவரி விளிபுரளத் தளதளௗவுசிதமான
திருமருவு கனகமொடு பனகமணியணி திகளத் திலதந்தீட்ட
கருமருவுச்சியு மிந்திரனும் நாண காமன் பேண
மருமருவு களபமுலை அலங்கார ரூபி சபை
வருகின்றாளே''

வரவுத் தருத்தாளம்:

(அண்ணாவியாரும், ஏடு பார்ப்பவரும், பக்கப்பாட்டுக்காரரும் தருப்பாட மத்தளம் பேசுகின்றது. அலங்காரரூபி ஆடுகின்றாள்.)

ததித் துளாதக ததிங்கணத் தகதிமி
தாதிமிதத்தா தெய்யே
ததித் துளாதக ததிங்கணத் தகதிமி
தாதிமிதத்தா தெய்யே

ததித் துளாதக ததிங்கணத் தகதிமி
தாதிமி தத்தா தெய்யே
திரும்பு திரும்புக திரும்பு திரும்புக திரும்பு திரும்புக
தா தொங்கதி மீந்தா தீந்தாந்தா
தா தொங்கதி மீந்தா தீந்தாந்தா
தா தொங்கதி மீந்தா தீந்தாந்தா
தா தொங்கதி மீந்தா தீந்தாந்தா
தனனம் தனதன தனனம் தனதன
தனன்ம் தனதன தானீனா
தனனம் தனதன தனனம் தனதன
தனந்த தனதான தானீனா
தந்த தனதான தனந்த தனதான
தனனம் தனதன தானீனா
தந்த தனதான தந்த தனதான
தனந்த தனதான தானீனா
தாதாம் தாதிந்தத் தோதக
தாதாம் தாதிங்தத் தோதக
தாதெய்யத்தா தளங்கு ததிங்கண.

(இவ்வாட்டத்தில் எட்டுப்போட்டு ஆடுகிறார்.)

தாகத் தாகத் தாகத் தெய்யத்தா தகம் தத்துமீ
தாகத் தாகத் தாகத் தெய்யத்தா தகம் தத்துமீ
தாகத் தாகத் தாகத் தெய்யத்தா தகம் தத்துமீ
தாகத் தாகத் தாகத் தெய்யத்தா தகம் தத்துமீ
தாதெய்யத்தா தளங்கு ததிங்கண

அலங்காரரூபி சபை தரு:
(சபையோர் பாடுகிறார்கள்)

களப பரிமள மிளகுநறை சுமகமென அவையிடை
அழகு கிளிமொழி பழகு குயிலலங்கார ரூபியும்
களப முலையழகு அணிசேர் மணியணி போர்வையும்
பழகு தமிழ் தரு மிளமுகநகை தோகையும்
சங்கையணி திகழ் துங்கமணியணி தங்கமயிலென
சங்ககாலமாகத் தந்தையழைக்கவே
யலங்கார ரூபியும் தோற்றினாளே.

தரு:
(அண்ணாவியார் பாடுகிறார்)

தனனம் தனதன தனனம் தனதன
தனனம் தனதன தானீனா
தந்ததனதான தந்ததனதான
தனந்த தனதான தானீனா.

அலங்கார ரூபி கொச்சகம்:

''கையார மான்பிடித்துக் காட்டகத்திலே நடித்த
மெய்யாரு மையன் விளங்குந் திருவருளால்
பொய்யாகக் கீர்த்தி புகழ்பூண்டு அரசாண்டிருக்கும்
ஐயாவே யென்னை யழைத்ததென்ன சொல்லுவீரே''

அலங்காரரூபி வசனம்:

சரணம் சரணம் பிதாவே! என்னை அழைத்த காரியம் இன்ன தென்று சொல்லுவீராக.

செகதனியாளி விருத்தம்:

''கிளிதிகழ்தரு மரகத மயில்மிசை
வருமுயர் குருபரனருளாலே
வரமகிழ்தர அழகிய கிளியென
வருமொரு மகளே கேளாய்
தளவளமென நிறை முழுநிலவென
வளர்தளர் விழி குழையெனவும்
சுரசமது அரசவனிதையர் பலரொடு
சபைதனிலிது பொழுதில்
தெளிதரு விழிகளினழ கெதிர் முகமலர்
தெரிசனையது புரியத்
திருவுளமது நினைவொடு கடிதுனையளி
செறிமுறை மயில்வரவே
களிபெற யகளினன் விளைவொடு வளமுள
கன நவமணியனையிற்
கருதரு விடுதொடு நதிபரவிடு
சுககரமொடு மருவுவையே.''

செகதனியாளி வசனம்:

ஆனாற் கேளும் மகளே! உன்னைக் காண ஆசையாய் அழைத்தேன். அழைத்த காரியத்தைப் பிறகு அறியத்தருகிறேன். இப்போது தோழிமாருடன் விளையாடித் தாயாருடன் இரு மகளே.

அலங்காரரூபி வசனம்:

அப்படியே பாக்கியந்தான் பிதாவே.

செகதனியாளி வசனம்:

ஆனாற் கேளும் மந்திரி! நமது தூதுவர்களை அழைத்துவருவீராக.

மந்திரி வசனம்:

அப்படியே ஆகட்டும் அரசே.

தூதுவர் வரவு விருத்தம்:
(தூதுவர் பாடுகிறார்கள்)

''சிரமிசை சரிகை குல்லாச் செண்டு பூண்டழகு காட்டி
உரமிசை சட்டைபூட்டி உரைக்கும் வல்லபங்கள் காட்டி
நிலமிசை வேந்தர் போற்றும் செகதனியாளிராசன்
நலமிசை காக்கும் தூதர் நடைவேகமாய் வருகின்றாரே''

வரவுத் தரு:
(வேகமான குதிநடையாட்டம்)

தாதாம் தாதெய்ய தாதாம் தாதெய்ய
தாதாம் தாதெய்ய தாதாம் தாதெய்ய
தாதாம் தாதெய்ய தாதாம் தாதெய்ய

தாதொங்க திமீந்தா தாதொங்க திமீந்தா
தாதொங்க திமீந்தா தாதொங்க திமீந்தா
தாதொங்க திமீந்தா தாதொங்க திமீந்தா

திரும்பு திரும்புக திரும்பு திரும்புக திரும்பு திரும்புக
தாதொங்க திமீந்தா தாதொங்க திமீந்தா
தாதொங்க திமீந்தா தீந்தாந்தா
தாதொங்க திமீந்தா தீந்தாந்தா
தாதொங்க திமீந்தா தீந்தாந்தா

தனனம் தனதன தனனம் தனதன
தனனம் தனதன தானீனா
தந்ததனதான தந்ததனதான
தனந்ததனதான தானீனா
தந்ததனதான தந்ததனதான
தனந்ததனதான தானீனா
தக்கசம் தாந்தரிகிடதெய் தக்கசம் தாந்தரிகிடதெய்
தக்கசம் தாந்தரிகிடதெய் தக்கசம் தாந்தரிகிடதெய்
தக்கசம் தாதெய் தக்கசம் தாதெய் தக்கசம் தாதெய்
தாதரிகிட தோதரிகிட தாதெய்யத்தா தளங்குதரிகிட.

சபை தரு:

(சபையோர் பாடுகிறார்கள்)

மருவலி தொடையார் துரைபணி விடையார்
குரைதுளி விடையார் தூயசம்பிரமத்தூதர் வந்தனரே
வரைபொரு குரத்தார் சூரிகைத் தாளத்தார்
மருவுசுந்தர தரு
தரளகந் தளத்தார் துரிதங்கொள் வரத்தார் சரிதங்கள்
சிரத்தார் சூரகெம்பீரத் தூதர் வந்தனரே.

தரு:

தனனம் தனதன தனனம் தனதன
தனனம் தனதன தானீனா
தந்ததனதான தந்ததனதான
தனந்ததனதான தானீனா.

நீலகண்டம்: ஆரோக்கியம்! விதானையாரிர வீட்டுக்குக்கிட்ட கார விட்டுத்துவந்தம். விதானையாரும் வீட்டில இல்ல. ஆரும் புள்ளயள் குறும்பு செஞ்சாலும் செய்வாங்க. ஒருதரம் போய்ப் பார்த்துத்து வருவமா?

ஆரோக்கியம்: ஓம் ஐயா. வாங்க பொயிற்று வருவம்.

(இருவரும் எழுந்து கார் இருக்கும் இடத்தைநோக்கிச் செல்கின்றனர். கூத்து நடக்கின்றது.)

— திரை —

—★—

காட்சி : 06.
இடம் : அண்ணாவியார் வீட்டுத் தோட்டம்.
பாத்திரங்கள் : அண்ணாவியார், நீலகண்டம், ஆரோக்கியம்.

(காலைநேரம், அண்ணாவியார் தனது வீட்டுத்தோட்டப் பயிர்களுக்குத் தண்ணீர் வார்த்துக்கொண்டிருக்கிறார். அப்போது அங்கு நீலகண்டமும், ஆரோக்கியமும் வருகின்றனர்.)

அண்ணாவியார்: (கையில் தண்ணீர்க் குடத்துடன்) வாங் கய்யா வாங்க. விதானையாரய்யா விசளம் அனுப்பி யிருந்தாரு. இதுகளுக்குத் தண்ணியூத்திப்போட்டு அங்க வருவமெண்டுதான் இருந்த நான். அதுக்குள்ள ஐயா மாரே வந்திட்டிங்க.

நீலகண்டம்: (மகிழ்ச்சியோடு) ஓம் அண்ணாவியார். நாங்க உங்களைத் தேடி வாறதுதானே முற.

ஆரோக்கியம்: பயிரெல்லாம் பச்சப்பசேலென்றிருக்கு, வடி வாகவும் வைச்சிருக்கிறீங்க.

நீலகண்டம்: கலையுள்ளங் கொண்டவங்க எந்த வேலையை யும் வடிவாகத்தான் செய்வாங்க.

அண்ணாவியார்: ஐயா! கலை உள்ளத்தை வளக்குது. இந் தப் பயிருகள் உடம்ப வளக்குது. உடம்பு ஆரோக்கிய மாக இருந்தாத்தானே உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கமுடியும்.

நீலகண்டம்: ஓமோம். சரியாகச் சொன்னீங்க கலை முயற்சி யத் தெய்வ தரிசனம் எண்டும், பயிருக்கு நீரூற்றி வளக்கிறத இறைவனப் பூவும் நீருங்கொண்டு வழிபடுற தப்போல எண்டும் ஞானிகள் சொல்லியிருக்காங்க.

ஆரோக்கியம்: இந்த வயோதிப காலத்திலயும் விடிய விடிய கூத்து ஆடிப்போட்டு வந்து கொஞ்சமும் களைப்பில் லாம இப்ப பயிருகளுக்கெல்லாம் நீர் அள்ளிச் சொரியி றீங்க. அண்ணாவியாருக்கு இப்ப அறுபது அறுபத் தைஞ்சி வயதிருக்குமாக்கும்.

அண்ணாவியார்: இல்ல ஐயா, இந்த வருஷம் வாற "கம்சன் கத" அழுதில அண்டைக்கு எனக்கு எண்பத்தைஞ்சு வயசு முடியுது, எண்பத்தாறு ஆரம்பிக்குது.

ஆரோக்கியம்: நீங்க ஒரு அதிசயப்பிறவிதான் அண்ணாவி யார்.

அண்ணாவியார்: என்னய்யா உங்களுக்கு வியப்பாக இருக்கா. இதக்குக் காரணம் கைக்குத்து அரிசியும், பச்சை இலை காய்கறிகளும், கூத்து ஆட்டமும்தான். இதனால உடம்பு உறுதியாக இருக்கு. எப்பவும் சுறுசுறுப்பாக இயங்குது. மத்தது இறைவன, விழித்திருந்து, பசித்திருந்து பிராத்

தனை செஞ்சா அதாலயும் அதிகம் பலன் கிடைக்குது. அதனாலதான் அடிக்கடி கூத்தாடி அந்த ஆனந்தக் கூத்தன வேண்டிக்கொள்ளுறம்... ஐயையோ...

நீலகண்டம்
ஆரோக்கியம் } (அதிர்ச்சியடைந்து) என்ன அண்ணாவியார்...?

அண்ணாவியார்: ஐயாமாருக்குத் தண்ணிவென்னி குடுக்காம நிக்கவச்சிக் கதைச்சுக்கொண்டிருக்கேனே. வாங்க ஐயா வீட்டுக்குப் போயிருந்து கதைப்பம்.

(அண்ணாவியார் தனது கையிலிருந்த தண்ணீர்க்குடத்தைப் பயிர்க் காலைக்குள் வைத்துவிட்டு நீலகண்டத்தையும், ஆரோக்கியத்தையும் அழைத்துக்கொண்டு தனது வீட்டுக்குச் செல்கிறார். அவர் வீடு தென்னங்கீற்றால் சுவர் அமைக்கப் பட்டு வைக்கோல் கொண்டு கூரை வேயப்பட்டு களிமண் போட்டுச் சாணத்தால் பூசி மெழுகப்பட்ட தரையுமாக அழ காகவும் சுத்தமாகவும் காணப்படுகின்றது. வீட்டு விறாந்தை யில் மூன்று கதிரைகள் போடப்பட்டிருக்கின்றன. கதிரை களின் முன்பாக மத்தள வடிவில் ஓர் மரக்குற்றி. அதன்மேல் தாமரையும், வம்மிப்பூவும், குருவிச்சம்பூவும், காக்கணம் பூவும், பொற்கொன்றை மலரும் கொண்டு செய்யப்பட்ட அழகிய பூச்சாடி ஒன்று இருக்கின்றது. காக்கணம் பூவின் நறு மணம் அங்கு பரந்து மனத்திற்குப் புத்துணர்வைக் கொடுக் கின்றது.)

அண்ணாவியார்: (கதிரைகளைக் காட்டி) இருங்க ஐயா! இப்ப வந்திடுறன். (சமையல் குடிலுக்குள் செல்கின்றார்)

(நீலகண்டமும், ஆரோக்கியமும் கதிரைகளில் அமர் கின்றனர்.)

ஆரோக்கியம்: ஐயா! இதுதான் அண்ணாவியாரிர வீடுபோல இருக்கு. கலைஞர்களோட ஏழ்மையும் கூடப்பிறந் திருக்கு.

நீலகண்டம்: இது வெறும் குடிசல்ல ஆரோக்கியம். கமலாச னத்துக் கற்பகம் அருளாட்சி செய்யிற அரச வசந்த மாளிகை இது. ஆடம்பரமில்லாத தூய்மையான இல் லம். இது எனக்கு மிச்சம் பிடிச்சிருக்கு. இப்படிப்பட்ட இடத்தில காலமெல்லாம் இருக்கவேண்டுமென்று ஆசை யாயிருக்கு.

ஆரோக்கியம்: ஐயா! விதானையார் சொன்னார், இப்ப கொஞ்ச மாதங்களுக்கு முன்னம் ஊரார்களெல்லாம் சேர்ந்து அண்ணாவியாருக்கு பெரியதொரு வீடு கட்டிக் கொடுக்கிறதுக்காகப் பணம் சேத்தாங்களாம். அண்ணாவியார் அந்தப் பணத்தையெல்லாம் வாங்கி ஆலயத் திருப்பணிக்காகக் கொடுத்துப்போட்டாராமே.

நீலகண்டம்: ஓமோம். நானும் கேள்விப்பட்டன். நல்ல மனுஷன். நாணயமான மனுஷன். அவரிட்ட நாணயம் இருக்கிறதால அவருக்கு மத்தவங்கட நாணயம் தேவப படல்ல. தன்ர சொந்த உழைப்புத்தான் அவருக்குக் கடவுள்.

(அப்போது அண்ணாவியார் பால் காச்சி எடுத்துக் கொண்டுவந்து அவர்களுக்குத் தருகிறார்.)

அண்ணாவியார்: குடிங்க ஐயா! ஐயாமார் என்ர குடிலுக்கு வந்திருக்கிறது எனக்கு எவ்வளவோ சந்தோஷமாயிருக்கு.

நீலகண்டம்: (பாலைச் சுவைத்துக் குடித்துக்கொண்டே) அண்ணாவியார்! இது ஒரு சாதாரண குடிசமாதிரி எங்களுக்குத் தெரியல்ல. கலாபமயிலின் கருணை வெள்ளத்திலே குளித்துக்கொண்டிருக்கிற குடிசையாக இதை நாங்க உணருறோம்.

ஆரோக்கியம்: ஓம் அண்ணாவியார். ஐயா சொல்லுறது வார்த்தைக்கு வார்த்த சரி. நாங்களும் எங்கட வாழ்நாளெல்லாம் இங்கயே இருந்திடலாம்போல ஆசையாயிருக்கு. அண்ணாவியார்! உங்கட மகன்ட ஆட்டம் எங்கள மெய்மறக்கச் செய்துபோட்டுது.

நீலகண்டம்: மகனப் பாத்துப் பாராட்டி பரிசு கொடுக்கலாம் எண்டுதான்...

அண்ணாவியார்: (மகிழ்ச்சியோடு) அப்பிடியா ஐயா, நீங்க கலையிர பெருமைய அறிஞ்சவங்க. உங்கள நான் வணங்குறன் ஐயா. மகனவங்க கோயில் களரில ஆடி முடிஞ்ச உடனே ஊருக்குள்ள ஆடப்போயிருக்காங்க. ஊர் மரியாதைக்காக ஒரு ரெண்டு மூண்டு வீட்டில ஆடித்து இப்ப வந்துடுவாங்க.

ஆரோக்கியம்: எங்கெங்க ஆடுவாங்க அண்ணாவியார்!

அண்ணாவியார்: அதுவா, தலமுற தலமுறயாக நடக்கிற மாதிரி கோயில் வண்ணக்கர் வீட்டிலயும், விதானை யார் வீட்டிலயும், பெரிய வாத்தியாரிர வீட்டிலயும், பரிசாரியாரிர வீட்டிலயும் ஆடுவாங்க. நேரமிருந்தா இன்னும் ரெண்டு மூண்டு வீட்டில ஆடுவாங்க. ஆனா இண்டைக்குக் கெதியா வரச்சொவ்லியிருக்கன். நானும் ஒருக்கா பக்கத்து ஊர் சாத்திரியாரக் கொஞ்சம் பாத் துத்து வரவேணும்.

நீலகண்டம்: அப்ப அண்ணாவியார் நீங்களும் அவசரமாக வெளியில போகவேணுமெண்டு சொல்லுறதால நாங்க போயித்து இன்னொரு நாளைக்கு வாறமே.

அண்ணாவியார்: எனக்கொண்டும் அவசரமில்லை. நான் எண்ட பயணத்த நாளைக்கு வெச்சிக்கொள்ளுறன். இவ்வளவு தூரம் வந்த நீங்க ஆறுதலாக இருந்து மகனப் பாத்துத்துப் போங்க ஐயா.

நீலகண்டம்: அப்படியெண்டா மிச்சம் சந்தோஷம். (பக்கத்தி லுள்ள கதிரையைக்காட்டி) நீங்களும் இப்படி இருங்க அண்ணாவியார். நம்மட ஆரோக்கியத்துக்கு சில விஷ யங்களை அறியவேணுமாம்.

அண்ணாவியார்: (கதிரையில் இருந்துகொண்டே) அப்பிடியா ஐயா.

ஆரோக்கியம்: வேறொண்டுமில்ல அண்ணாவியார். இந்தக் கூத்தில் சில விஷயங்கள் அறிய வேண்டும்போல இருக்கு. நானும அந்தக்காலத்தில கூத்து ஆடினநான்தான். ஞானசவுந்தரி, செட்டி பெத்த பிள்ள, புனித வளனார், அரிச்சந்திரா எண்டு பல கூத்துக்களில ஆடியிருக்கன் ஆனா சில விஷயங்கள இன்னம் விளங்காமயிருக்கு.

அண்ணாவியார்: சொல்லுங்க ஐயா. எனக்குத் தெரிஞ்சத சொல்லித்தாறன்.

ஆரோக்கியம்: அண்ணாவியார் இந்தக் கூத்துத் தருத்தாளங் களுக்கு ஏதாவது கருத்து இருக்குமா?

அண்ணாவியார்: கூத்துத் தருக்கள் ஆட்டத் தாள இசைக்கு ஏற்றவாறா அமைக்கப்பட்டிருந்தாலும் அதற்கும் கருத் துக் கொள்ளலாம் என்பது நம்மட ஆரையம்பதி

பண்டிதர் செல்லப்பா பூபாலபிள்ளை ஐயாட கருத்து. கிராமியக் கலைவடிவங்களை நன்றாக அறிந்த மேதை யாக இருந்தவர் பண்டிதர் ஐயா. பண்டிதர் ஐயாட்ட அடியேன் முத்தமிழும், சங்க இலக்கியமும், சமயமும் படித்தவன்.

நீலகண்டம்: அப்படியா? பண்டிதர் ஐயாட சீஷனைச் சந்திச் சிறதில எங்களுக்குப் பெருமையாகவும், இரட்டிப்பு மகிழ்ச்சியாகவுமிருக்கு. அண்ணாவியார்! இந்தத் தாள இசை நயங்கள எங்களுக்குக்கொஞ்சம் சொல்லித்தந்தா சந்தோஷமாயிருக்கும்.

அண்ணாவியார்: சொல்லுறன் ஐயா!

[அண்ணாவியார் எழுந்துநின்று தனது குடிசைச் சுவரில் (கிடுகினால் கட்டப்பட்டது) கண்ணாடிப் பிறேம் போட்டு மாட்டிவைக்கப்பட்டிருக்கும் பண்டிதர் செ. பூபாலபிள்ளை ஐயா அவர்களின் புகைப்படத்துக்குக் கைகூப்பிக் குருவணக்கம் செலுத்துகின்றார். நீலகண்ட மும், ஆரோக்கியமும் தாங்களும் எழுந்துநின்று பண்டி தர் ஐயாவின் படத்துக்கு வணக்கஞ் செலுத்துகின்றனர். பிறகு மூவரும் இருக்க அண்ணாவியார் தொடர்ந்து கூறுகின்றார் ]

ஐயா! வடமோடிக்கூத்து வரவுத் தாளத்தரு இப்படி இருக்கின்றது.

(பாடுகிறார்)

''தகதிகதா தெய்யாத் தெய் தெய்
தா தெய்யத் தோம் தகதிகதா''

இதற்கு, ''திசைகளெல்லாம் பரவிப் பாய்ந்து ஒளி தரும் தெய்வமே தெய்வமே தெய்வமே'' என்று கருத் துக்கொள்ளலாம். அதுபோல தென்மோடிக்கூத்து வர வுத் தாளத்தரு இப்படியிருக்கின்றது.

(பாடுகிறார்)

''ததித் துளாதக ததிங்கணத் தகதிமி
தாதிமி தத்தா தெய்யே''

இதற்கு, பலம்மிக்க துளசிமாலையணிந்து பிரகாச மான குதிரைகள் பூட்டப்பட்ட தேரிலே பேரொளி யாகவும், ஒலியாகவும் வந்து இடர் நீக்கும் தெய்வமே'' என்று கருத்துக்கொள்ளலாம்.

நீலகண்டம்: ஆகா! என்ன அழகான விளக்கம்:

ஆரோக்கியம்: ஐயா! இந்த விஷயங்களெல்லாம் தெரியா மல்தானே நம்மட ஆட்கள் கூத்து ஆடுறாங்க.

அண்ணாவியார்: மகனுக்கு இந்த ஞானமெல்லாம் நிறைய இருக்கு. அவன் வெறும் ஆட்டக்காரனில்ல. ஒரு சிறந்த அண்ணாவி. இப்ப வசந்தன் கூத்துப் பழக்கிக்கொண் டிருக்கான். மத்தளம் பேசவைக்கிறதில மகா விண்ணன்

நீலகண்டம்: அண்ணாவியார்! இந்த வசந்தன் கூத்து, கும்மி, ஊஞ்சல் இப்படியெல்லாம் சுவையான கலைவடிவங்கள நம்மட முதுபெரும் சொத்தாக நம்மட மூதாதையர் தந்திருக்காங்க. அவைகளிர தருக்களைப் பற்றியும் கொஞ்சம் சொல்லுங்களன்.

அண்ணாவியார்: ஐயா! தமிழ் எண்டாலே சுவைதானே. முக்கனிகளின் சாறும், தேனும், பாலும், பசு நெய்யும், பருப்பும், கற்கண்டும் சர்க்கரையும் கலந்து இளஞ்சூட் டில் இறக்கி எடுத்த ஒரு சுவைக்கட்டியல்லவா முத் தமிழ். இஞ்சபாருங்க வசந்தன் பாடல் தரு ஒன்று,

(பாடுகிறார்)

''தென்தின தினனா தினதின தினனா
தினதின தினனா தினனானா''

இதன் சுவைக்கு நிகர் சொல்லமுடியுமா? இதனால் தானோ என்னவோ தமிழில வைதாரையும் முருகப் பெருமான வாழ்த்துவதாகக் கூறுகிறார்கள்.

ஆரோக்கியம்: இந்த தருவுக்கு கருத்து எப்படிச் சொல்ல லாம் அண்ணாவியார்?

அண்ணாவியார்: இதற்கு, ''தினம் தினம் அழகாகவும், இனிமையாகவும், இசையாகவும், நாள் நட்சத்திரமாக வும் இருந்து அருள்புரியும் சூரிய பகவானே!'' என்று சூரிய பகவானைத் துதிப்பதாகப் பொருள் சொல்ல லாம்.

வசந்தனின் இன்னுமொரு தருப்பாடல்,

(பாடுகிறார்)

''தினதந்தினா தினதந்தினா
தினதந்தினா தினனா''

இதற்கு, ''பகலாகவும் இரவாகவும் இருந்து யானை முகத்தோனால் பூஜிக்கப்படும் பகவானே! குஞ்ஜரானன பூஜிதாயதினராத்ரி-சரீரவதே'' என்று சூரிய பகவான் துதிக்கப்படுவதாகக் கருத்துக் கூறலாம்.

ஆரோக்கியம்: அடுத்த தருவச் சொல்லுங்க அண்ணாவியார்.

அண்ணாவியார்: (பாடுகிறார்)

''தனம் தனம் தனதானா – தன
தானதனாதன தானினதானா''

இதற்கு, ''தனேச்வராய, தனாவர்த்தனாய என்று போற்றப்பட்டுச் செல்வமெல்லாம் தந்தவரே! அந்தச் செல்வத்தைப் பிறர்க்குத் தானம் செய்து சிறப்புற்று வாழ அருளுமையா'' என்று சூரிய பகவானை வேண்டுவதாகக் கருத்துக் கொள்ளலாம். வசந்தன் பாடல் தருவிலே இன்னுமொன்று இருக்கிறது. ''பெருங்கொடையாக உன் நினைவைத் தந்து அருள்புரியுமையா!'' என்று சூரிய பகவானை வேண்டுவதாக இத்தரு அமைந்திருக்கிறது. அந்தத் தரு,

(பாடுகிறார்)

''தான தன்னா தன தானதன்னா தன
தான தன்னா தன தானதன்னா''

நீலகண்டம்: (மெய்மறந்த நிலையில்) ஆகா! இன்பத்தேன் வந்து காதிலே பாயும் விந்தை இதுதானோ...

அண்ணாவியார்: ஐயா! இந்த வைகாசி மாதப் பூரணைக்கு– கண்ணகை அம்மன் குளுத்தி அண்டைக்கு வசந்தன் கூத்து இங்க கோயிலடியில ஆடப்போறாங்க. என்ர மகன்தான் அண்ணாவியார் வந்து பாருங்க ஐயா.

நீலகண்டம்: கண்டிப்பாக வருவம் அண்ணாவியார்.

ஆரோக்கியம்: ஐயா அண்ணாவியாரே!

(பாடுகிறார்)

''கும்மியடி பெண்காள் கும்மியடி
குபிரொடுங்கி யோடவே கும்மியடி
நம்மையாளும் இறைவனை நிதமும்
நாடிக் கும்மியடியுங்கடி - தினம்
தேடிக் கும்மியடியுங்கடி''

நானனன்னா... நன நானனன்னா...

அண்ணாவியார்: (இடைமறித்து) ஐயா! அந்தப்பாட்டுக்கு தரு இப்படி வருமையா...

(பாடுகிறார்)

''தன்னானே நாதினம் தன்னானே - தன
தன்னன்ன நாதினம் தன்னானே''

ஆரோக்கியம்: இதுக்குக் கருத்தையும் சொல்லுங்க.

அண்ணாவியார்: ''சூரிய பகவானை நினைத்து வழிபடுபவர்கள் தினமும் பொலிவுடன் வாழ்வார்கள்'' என்பதாக இருக்கும்.

ஐயா! இதே கருத்துத்தான் ஊஞ்சற்பாட்டுத் தருக்களிலும் காணப்படுகிறது.

நீலகண்டம்: அண்ணாவியார்! அதையும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன்.

அண்ணாவியார்: (பாடுகிறார்)

''கரிமுக நாதா அன்னை
முதல்வனே உந்தன் பாதம்
கண்மலர் ஏந்தியே கவலைநோய் கழைந்துமே
கலைக ளெல்லாம் அர்ப்பணித்தோம்''

தரு:

''தனதன தந்தோம் தானை
தானை தனந்தோம் தானை
தானை தனாதனை தானை தனாதனை
தானை தந்தோம் தனனானே''

இந்தத் தருவுக்கு இப்படிக் கருத்துச் சொல்லலாம். தேவசேனாபதி முருகப்பெருமானாக வந்து செல்வம் செல்வமாகத் தந்த ''சிகிவாஹநாய'' சூரிய பகவானைத் துதிப்போமாக.

இன்னும் ஒரு பாடல்.

(பாடுகிறார்)

''செல்வமெலாம் பெற்றுச் சிந்தை மகிழவே
செந்தாமரை நாயகியாள் — அருள்
செய்வாள் நம் கரம் சிவந்து மலர்ந்திட
வாரி வழங்கிடுவோம்''

இதற்கு தருப்பாடல்,

(பாடுகிறார்)

''தந்தனத் தந்தனத் தந்தனத் தந்தனத்
தந்தனத் தானானே — தன
தந்தனத் தந்தனத் தந்தனத் தந்தனத்
தந்தனத் தானானே''

''கமலாச்ரயாய'' என்று துதிக்கப்படும் சூரியதேவனே! நீ தந்த செல்வத்தினால் என்றும் உனை நினைக்க அருள்வாயாக'' என்று இத்தருவுக்குக் கருத்துச் சொல்லலாம்.

ஆரோக்கியம்: அண்ணாவியார்! இந்த ஊஞ்சில் பாட்டில ''தனன தன...'' எண்டும் ஒரு ராகம் இருக்கல்லவா?

அண்ணாவியார்: ஓமோம். அது...

(பாடுகிறார்)

''தனன தன தனன தன
தனன நன தனனா
தனனா தனா தந்த நாதந்த நானா''

இதற்கு, ''செல்வம் செல்வமாகப் பொலியத்தரும் தெய்வமே!'' என்று சூரியபகவான் துதிக்கப்படுகிறார் எனக் கருத்துக்கொள்ளலாம்.

ஆரோக்கியம்: (பாடுகிறார்)

''செய்யும் தொழில் தெய்வம் நம்
சிந்தையுள் இருப்பார்......''

அண்ணாவியார்: (ஆரோக்கியத்தைத் தொடர்ந்து பாடுகிறார்.)

தீவினைகள் வாராது காத்திடுவாரே.

அண்ணாவியார்
ஆரோக்கியம் } சேர்ந்து பாடுகிறார்கள்.

''செய்யும் தொழிற் தெய்வம் நம் சிந்தையுள் இருப்பார்
தீவினைகள் வாராது காத்திடுவாரே
அறநெறிகள் தழைத்தோங்க ஆனந்தம் பெருக
அருட்சோதித் தெய்வமதைப் போற்றி வாழ்வோமே...''

(இப்போது நீலகண்டம் ''தரு''ப் பாட மற்ற இருவரும் சேர்ந்து பாடுகின்றனர்.)

தரு:

''தனன தன தனன தன தனன தன தனனா
தனனா தனா தந்த நா தந்த நானா''

ஆரோக்கியம்: அண்ணாவியார்! இந்த நம்மட பாரம்பரிய இசை வடிவங்களில வாற தருப் பாட்டெல்லாம் சூரிய பகவானைப் போற்றுற மாதிரித்தானே இருக்கு. அது ஏன் அண்ணாவியார் அப்பிடி ?

அண்ணாவியார்: ஐயா! இப்ப நீங்க கேக்கிற இந்தக் கேள்விய அப்ப நாங்களும் பண்டிதர் ஐயாட்டக் கேட்டம். அதற்கு ஐயா பெருமையாகக் கம்பீரமான குரலில் சொன்னாரு... அத நினைச்சுப் பார்க்கக்குள்ள எனக்கும் பெருமையாகத்தான் இருக்கு.

நீலகண்டம்: அப்படியா? ஐயா என்னதான் சொன்னாரு. அதச் சொல்லுங்களன்?

அண்ணாவியார்: பண்டிதர் ஐயா சொன்னார்கள்,

''தமிழரெல்லாம் ஒழுக்கமுள்ளவர்கள். அவர்கள் நன்றியுமுள்ளவர்கள். நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் என்று நீங்கள் படிக்கவில்லையா?'' என்று எங்க

ளிடம் கேட்டார்கள். ''நன்றி செலுத்துதல் ஒரு புனிதமான தெய்வ வழிபாடு'' என்று சொன்னார்கள்.

**ஆரோக்கியம்:** ஐயா சொன்னதெல்லாம் தேவவாக்குத்தான் அண்ணாவியார். நீங்க சொல்லுங்க அண்ணாவியார்.

**அண்ணாவியார்:** அதனாலதான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் பாடியபோது ''ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்'' என்று சூரியபகவானைத் துதித்துக்கொண்டு பாடியிருக்காரு. அந்தப் பாரம்பரிய நடைமுறையைப் பின்பற்றித்தான் சிலப்பதிகாரத்தை முன்மாதிரியாகக்கொண்டு நன்றியுள்ள தமிழர்கள் தங்களுடைய கலைவடிவங்களுக்குத் தங்களுக்கு வாழ்வு தந்தவரும், ''கலாத்மனே'' என்று போற்றப்படும் கலைவடிவினரான சூரியபகவானைத் துதித்துத் தருப் பாடியிருக்கிறார்களாம்.

**நீலகண்டம்:** ஓம் அண்ணாவியார். அதனாலதான் தை மாதத்தில பிறக்கிற தமிழ்ப் புதுவருடத்தையும் சூரியபகவானுக்குப் பொங்கல் படைத்து வழிபட்டு ஆரம்பிக்கின்றோம். சித்திரை வருடத்திற்கும் சூரியபகவானை நினைத்துப் பொங்கி வழிபடுகிறோம். சித்திரை வருடத்தில் வாற ''விஷு புண்ணியகால''மாக சூரிய பகவான் இருப்பதாக வேதங்கள் கூறுகின்றன. அதனாலதான் விஷு புண்ணியகாலத்தில் ''மருத்துநீர்'' வைக்கிறது முதலான சுபகருமங்களைச் செய்யிறம்.

**அண்ணாவியார்:** ஐயாவுக்கு வயது குறைவாக இருப்பதாலும் நம்மட பாரம்பரியத்தப்பத்தி நல்லாகத் தெரிஞ்சு வைச்சிருக்கிறீங்க. நீங்க சொல்லுங்க ஐயா.

**நீலகண்டம்:** நம்மட பாரம்பரியப் பழக்கவழக்கங்கள்பத்தி நாம ஒவ்வொருவரும் கண்டிப்பாக அறிஞ்சு வைத்திருக்கவேண்டும் இல்லையா? இந்தப் பாரம்பரியமும் பழக்கவழக்கங்களும்தானே மேல்நாட்டவர்களுக்கு நம் மீது பிரியத்தை ஏற்படுத்தியது.

**அண்ணாவியார்:** உண்மைதான் ஐயா. நீங்க சொல்லுங்க ஐயா.

நீலகண்டம்: அண்ணாவியார்! உங்கட குருநாதர் பண்டிதர் பூபாலபிள்ளை ஐயாவைப்பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருங்கள் ஐயா அவர்கள் கல்விப்பயிரையும், விவசாயப் பயிரையும் மிகவும் செழிப்பாக வளர்த்திருக்கிறார். ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராக இருந்து பல ஆசிரிய திலகங்களைத் தோற்றுவித்திருக்கிறார். அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராக இருந்து சிறப்பாகச் சமயப்பணியாற்றியிருக்கின்றார். வித்தகர் விபுலாநந்த அடிகளாரும், அவர் மருகர் நடராஜானந்த அடிகளாரும் போற்றிப் பாராட்டும் வகையில் சிறந்த தமிழ்ப்பணியும், சமயப்பணியும் செய்திருக்கின்றார். சிறந்த கவிதையாளராகவும் திகழ்ந்திருக்கின்றார். அது மட்டுமல்ல, கதிர்காமக் கந்தன் ஆலயத்தில் மட்டகளப்பு மக்களுக்கு என்று ஓர் திருவிழா எடுத்து பேராசிரியர் இலங்கையின் இரும்பு அரசன் சாண்டோ சங்கரதாஸ் ஐயாவுடன் சேர்ந்து செய்திருக்கிறார். இன்னும்...

அண்ணாவியார்: சொல்லுங்க ஐயா! என்ர குருநாதரைப் பற்றி நீங்க சொல்லுறதக் கேட்கிறபோது சர்க்கரைப் பந்தலில தேன்மாரி பொழிவதைப்போல இருக்கிறது. ஐயா அவர்கள் கனவில்கூட யாருக்கும் எதுவித துன்பமும் நினைக்காதவர். மற்றவர்களுடைய உயர்வுக்காக வாழ்ந்தவர். மற்றவர்கள உயர்த்தும் ஏணியாக இருந்தவர். உயர்ந்த குணமும், விடா முயற்சியுமுள்ளவர். நீங்க சொல்லுங்க ஐயா!

நீலகண்டம்: அண்ணாவியார்! நல்லவர்களைப்பத்தி, நல்லது செய்தவர்களைப்பத்தி நாலு வார்த்தை பேசுவதற்கு நாணமடையக்கூடாது. இப்பிடிப்பட்ட விஷயங்களில எல்லாம் ''கஞ்சத்தனம்'' காட்டக்கூடாது. திறமை எங்க இருந்தாலும் அதப் போற்றவேண்டும், பாராட்டவேண்டும். அவங்கள ஊக்குவிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஊக்குவித்தல முன்மாதிரியாக் கொண்டுதான் மற்றவர்கள் வளரமுடியும். பொறாமைப்பட்டு அவர்கள இருட்டடிப்புச் செய்யக்கூடாது. பொறாமை என்கின்ற பொருமல அழித்துவிட்டு ''பொலிதல்'' என்னும் செழித்தலைக் கொடுக்கவேண்டும். அதுதான் நன்றியுணர்வுள்ள சமுதாயக் கடமையாகும்.

ஆரோக்கியம்: சரியாத்தான் சொன்னீங்க ஐயா. இத இன்னும் கொஞ்சம் அழுத்திச் சொல்லுங்க. ''நம்மட

சமுதாயம் இன்னும் முன்னேறல்லையே'' என்று அங்க லாய்க்கிறவங்கட காதில இந்த உங்கட நல்ல வார்த் தைகள் நல்லாத் தெளிவா விழட்டும்.

நீலகண்டம்: பண்டிதர் ஐயா அவர்கள் ஒரு சிறந்த விவசாயி யாகவும் இருந்திருக்கிறார். கல்லடி சரவணை வீதியில அந்த நாட்களில ஒரு அழகான விவசாயத் தோட்ட மும் செய்திருக்கிறார். ஒவ்வொரு நாளும் அதிகாலை யில வீதியில அங்கங்க கிடக்கிற பசுவின் சாணங்களை யெல்லாம் சேகரித்துக் கொண்டுபோய் பயிர்களுக்குப் போட்டுத் தண்ணீர் ஊற்றிவிட்டு கல்லடி விநாயகர் ஆலய வீதியில இருந்த அவரது வீட்டுக்கு வந்து அங் கிருந்து புறப்பட்டுக்கொண்டு கால்நடையாகவே கப்பீர மாக மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலைக்குச் செல்வா ராம். நன்றியுள்ள மக்கள் ஐயா அவர்கள் வாழ்ந்த விநாயகர் ஆலய வீதிக்கு இப்போது பண்டிதர் செ. பூபாலபிள்ளை வீதி என்று பெயர்சூடி ஐயாவைக் கௌரவித்திருக்கிறார்கள்.

அண்ணாவியார்: ஐயா! நீங்க சொன்ன சரவணை வீதி விவ சாயத் தோட்டத்துக்கு நானும் போயிருக்கிறன். பண்டி தர் ஐயா எங்களை அழைத்து அந்த விவசாயத் தோட் டத்தில வைத்துப் பாடம் சொல்லித் தந்திருக்கிறார். பச்சைப்பசேலென்ற காய்கறித் தோட்டத்திலிருந்து அந்தப் பசுமையான சூழலில இலக்கியம் படித்தது பசுமரத்தாணிபோல மனதில இண்டைக்கும் இனிமை யாகப் பதிஞ்சிருக்கு.

ஆரோக்கியம்: பண்டிதர் ஐயாவைப் பின்பற்றி நாங்களும் வாழத்தொடங்கினா நிச்சயமாக அமைதியாகவும் சந் தோஷமாகவும் வாழலாம்.

நீலகண்டம்: அதிலென்ன சந்தேகம். இங்கயும் அண்ணாவி யார் பண்டிதர் ஐயாவைப் பின்பற்றித்தானே வாழ்ந்து கொண்டிருக்கார்.

ஆரோக்கியம்: ஐயா! பொழுதும் மதியத்துக்கு வந்தித்து. அங்க ஊரில தேடுவாங்களே.

அண்ணாவியார்: அதுதானே பாருங்க. ஐயாமாரோட கதைச் சித்திருந்ததில நேரம் போனதே தெரியல்லயே. ஆகா! இண்டைக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கு. பழைய

சம்பவங்கள நினைச்சிப்பார்த்தாலே நெஞ்சமெல்லாம் இனிக்குது. இப்பிடிப்பட்ட மகிழ்ச்சிகரமான மனோ நிலையை இண்டைய இளந்தலைமுறையினர் ஒவ்வொரு வரும் அனுபவிக்கவேணும். அதற்கான தேடலைக் கண்டுகொடுப்பதே இண்டைய மனித சமுதாயத்தின் முக்கிய கடமையாக இருக்கவேணும். இல்லையா ஐயா.

நீலகண்டம்: (எழுந்து உலவிக்கொண்டும், அடிக்கடி தனது கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டும்) நீங்க சொல்லுறது சரிதான் அண்ணாவியார். இளந்தலைமுறையினருடைய மனதில மகிழ்ச்சியை ஏற்படுத்துற வகையில தானே மகன உருவாக்கியிருக்கீங்க. அதற்கு உங்கள எப்படிப் பாராட்டினாலும் பெறும். என்ர மனதும் எண்டுமில்லாதபடி இன்று எவ்வளவோ பரபரப்பாக இருக்கு. (மனதுள்) இண்டைக்கு மகன நேருக்குநேர் பார்க்கவேணும், பேசவேணும் எண்ட தவிப்போட வந்தன் ஆனா... அவ்வளவு சுலபமாக அந்தத் தரிசனம் கிடைப்பதாகத் தெரியவில்லையே.

ஆரோக்கியம்: அண்ணாவியார்! நேற்றுக் காலமே வீட்டில இருந்து புறப்படக்குள்ள பொழுது படுறத்துக்கு முன்ன வந்திடுவம் எண்டுதான் ஐயா வீட்டில சொல்லித்து வந்தாரு. வழியில கார் பழுதானதால அதத் திருத்திக் கொண்டு இங்க வர பொழுதுபட்டுப்போச்சு.

நீலகண்டம்: அதுவும் நல்லதுக்குத்தான். இல்லாட்டி இந்த அழகான - அருமையான – தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் பெருமைப்படக்கூடிய கூத்தப் பார்க்கக் கிடைச்சிருக்குமா?

(சிறிதுநேரம் மௌனம்)

அண்ணாவியார்: ஐயா! என்ன யோசிக்கிறீங்க. மகன் இன்னும் வரவில்லையே எண்டா. இது வருஷ காலந் தானே... ஆறுதலாக வரட்டுமே...

நீலகண்டம்: அண்ணாவியார்!

அண்ணாவியார்: ஐயா!

நீலகண்டம்: (தனது சேட் பைக்குள் இருந்து ஒரு சிறிய பார்சலை எடுத்து அண்ணாவியாரிடம் கொடுக்கிறார்) இத மகனிட்ட கொடுத்திடுங்க.

அண்ணாவியார்: சரி ஐயா!

நீலகண்டம்: (பாசத்தோடு அண்ணாவியாரின் கரங்களைப் பற்றிக்கொண்டு) அண்ணாவியார்! பெரியவரே; உங்களக் கண்டு கதைச்சது எங்கட வாழ்க்கையில எண்டுமே மறக்கமுடியாதது. நாங்க பொயிற்று ரெண்டு மூண்டு நாளையில திரும்பவும் வாறம். மகனப் பார்க்கிறதுக்கு.

அண்ணாவியார்: கொஞ்சம் இருங்க ஐயா! சாப்பிட்டுத்துப் போகலாம்.

நீலகண்டம்: பெரியவரே! உங்களோட கதைச்சதே எங்களுக்குப் பெரிய விருந்து சாப்பிட்டமாதிரி மகிழ்ச்சியாக இருக்கு. நாங்க பொயிற்று திரும்பவும் வருவம்.

ஆரோக்கியம்: (அண்ணாவியாரைப் பார்த்து) ஓம் ஐயா! நேரம் போகுது. பொழுது படுறத்துக்கு முன்ன வீட்டுக்குப் போய்ச் சேரவேண்டும்.

நீலகண்டம்; அப்ப நாங்க வாறம் ஐயா.

அண்ணாவியார்: வாங்கய்யா. நீங்க மறுபடியும் வரவேணும். அத நான் ஆவலோட எதிர்பார்த்துக்கொண்டிருபபன்.

(நீலகண்டமும், ஆரோக்கியமும் அண்ணாவியாரிடம் விடைபெற்றுச் செல்கின்றனர். அண்ணாவியார் அவர்கள் செல்லும் திசையைக் கனிவோடு பார்த்துக் கொண்டிருக்கிறார் )

— திரை —

—★—

காட்சி : 07.

இடம் : அண்ணாவியார் குடிசை.

பாத்திரங்கள் : அண்ணாவியார், ஆனந்தன்.

(அண்ணாவியார் மகனைப் பிரிந்த துயரத்தோடு தனது குடிசையின் விறாந்தையில் இருந்து சோகத்துடன் மத்தளம் அடித்துப் பாடுகின்றார்)

கொச்சகம்:

நாதா வேதா ஐந்தெழுத்தை உரைத்துப்
பொருளை நவிலறியா
ஆதா வேதா விழவுதைத்த அமலா விமலா முடியாத
சாதா வேதா பொருவுபசி தன்னா
லென்னாற் றாங்காமல்
போதா வேதா எனையாளும் புகலத்
தெருவிற் போந்தேனே.

தரு:

தனதந்தத் தனதானினா தனதானின
தனதந்தத் தனதானினா
தனன தானின தான தனன தானின தான
தனன தானின தான தனன தானின தானா...

பாட்டு:

சிரவிந்தை தரு மைந்தனே ஐயோ ஐயோ
சூரர் பொரவந்த தொரு சுந்தனே ஐயோ ஐயோ
எங்கும் திரியட்டோ பசிவயிற் றெரியட்டோ
மகனாரைப் பிரியட்டோ
மனம்நொந்து திரியட்டோ சுவாமி.
(தனதந்தத் தன தானினா)

மரவுந்து மரவிந்தனே ஐயோ ஐயோ இது
வரவந்த தெது சொந்தமோ ஐயோ ஐயோ
உடல் வளர்க்கட்டோ படுகட்டை பிளக்கட்டோ
வயிறென்ன முளக்கட்டோ
உயிரிங்கே யிழக்கட்டோ சுவாமி.
(தனதந்தத் தன தானினா)

விடியும் பொழுதும் வரல்லையே ஐயோ ஐயோ கஞ்சி
குடியென்பவரு மில்லையே ஐயோ ஐயோ என்னை
வெறுத்தாயோ மனம் சற்றுக கறுத்தாயோ ஒருநிலை
நிறுத்தாயோ பிழையெல்லாம் பொறுத்தாள்வாய் சுவாமி.
(தனதந்தத் தன தானினா)

பாலுந் தேனும் பொங்குதே ஐயோ ஐயோ இதைப்
பருக யாரும் இல்லையே ஐயோ ஐயோ எந்தன்
பாசம் கட்டுமீறுதே ஐயோ ஐயோ மகன்
நேசம் தொட்டு ஆட்டுதே ஐயோ ஐயோ நாளும்
ஆறாதோ என்மனம் தாராயோ ஒருவரம்
பாராயோ கடைக்கண்ணால் தீராயோ துயர் சுவாமி!
(தனதந்தத் தன தானினா)

. தண்ணந் துளபமணி கண்ணன் மருகோனே முருகையா
பன்னிரு கையா முன்னிருமையா எந்தன்
கண்ணன் வந்தெனை அணைந்திட
வருள்செய் முருகையாவே.

(அழுகை மீறிட) தன... தந்தத்...

(அப்போது ஆனந்தனின் பாடல் ஒலிக்கிறது)

(அழுகுரலில்)

தன தந்தத் தன தா னீ னா தன தா னீன
தன தந்தத் தன தா னீ னா.

(ஆனந்தனின் பாடலைக் கேட்டு அண்ணாவியார் ஆனந்தமேலீட்டால்...)

அண்ணாவியார்: மகனே! ஆனந்தா!... (கடப்படிக்கு ஓடி வருகிறார்) மகனே!... மகனே!...

ஆனந்தன்: (வெளியிலிருந்து வந்தவன்) அப்பா... அப்பா...

(தந்தையின் அணைப்பிலே குழந்தையாகி அழுதுகொண்டிருக்கிறான்.)

அண்ணாவியார்: (மகனை அணைத்துக்கொண்டே) மகனே! எங்கே என்னை மறந்துவிடுவாயோ எண்டு நினைச்சன். ராஜயோகத்திலும் இந்த ஏழை யோகத்தனை மறந்து விடல்லயே கண்ணா.

ஆனந்தன்: (தந்தையின் அணைப்பிலிருந்து விலகி) அப்பா! மகனுக்கு ராஜயோகம் வந்துவிட்டது எண்டு நினைச்சுத்தானே என்னை அவங்களோட அனுப்பிவைச்சிங்க.

அண்ணாவியார்: மகனே! நீ இருக்கவேண்டிய இடம் அது தானே. ஊமை கண்ட கனவுபோல...

ஆனந்தன்: ஊமை கண்ட கனவுபோல...

அண்ணாவியார்: இவ்வளவு காலமும் அந்த விஷயத்த உன்னிட்டச் சொல்லாம மூடி மறைச்சிவைச்சிருந்தன். அது என்ர குத்தம்தான். எங்கே நீ என்மீது வைச்சிருக்கிற பாசம் குறைஞ்சுபோகுமோ எண்ட சுயநலம்தான் அதுக்குக் காரணம்.

ஆனந்தன்: அதுக்காக நான் கொஞ்சமும் வருத்தப்படல்ல அப்பா. பாத்திங்களா அப்பா என்ன அனுப்பிப்போட்டு எனக்காக இங்கே அழுது புலம்பிக்கொண்டிருக்கிறீர்களே. என்ன விட்டுப் பிரிய எப்படியப்பா உங்களுக்கு மனது வந்தது?

அண்ணாவியார்: மகனே! இந்த ஒருநாள் பிரிவுக்கே நான் இப்பிடித் துடிச்சுப்போனேனெண்டா 21 வருஷகாலமாக உன்னைப் பிரிந்திருந்த உன் அம்மாவும் அப்பாவும் எப்பிடித் துடிச்சிருப்பாங்க. பாவம். இந்த 21 வருஷமும் அவங்க பிடியாத விரதமே இல்லையாம். சுத்தாத கோயிலே இல்லையாம். தெய்வம் இங்க இரிக்க அவங்க தேசமெல்லாம் தேடித் திரிஞ்சிருக்காங்க.

ஆனந்தன்: (கனிவாக) அப்பா...!

அண்ணாவியார்: வா மகன்! உள்ளே வா! உனக்காகப் பால் காய்ச்சி தேன் கலந்து வைச்சிருக்கன்.

(மகனை அழைத்துச்சென்று பால் கொடுக்கிறார். அவன் அதைத் தந்தைக்கு ஊட்டுகிறான். தந்தை மகனுக்கு ஊட்டுகிறார். பின்பு இருவரும் அமர்ந்திருந்து கதைக்கின்றனர்.)

அண்ணாவியார்: மகன்! அம்மா சுகமாக இருக்கிறாவா?

ஆனந்தன்: (வேதனையோடு) பாவம் அப்பா! அம்மா. சரியான சாப்பாடு இல்லாம, உறக்கம் இல்லாம, கவலையால நல்லா மெலிஞ்சிருக்கா. என்னைக் கண்ட சந்தோஷத்தில... அத நான் எப்படியப்பா சொல்லுவன். என்னைக் கண்ட சந்தோஷத்துல என்னைக் கட்டியணைச்சுக்கொண்டு குழந்தையாட்டம்...

(அவன் கண்களிலிருந்து பெருகிவருகின்ற ஆனந்தக் கண்ணீரைக் கண்டு அண்ணாவியார் மெய்மறந்திருக்கின்றார்.)

அண்ணாவியார்: (தழுதழுத்த குரலில்) குழந்தைப் பாசம் பெத்தவங்களுக்குத்தான் தெரியும். ஆனால் நான் பிள்ளை பெறாதவன். எங்களுக்குக் கலியாணமாகி அடுத்த வருஷமே அவ பூவும் பொட்டுமாகப் போய்ச் சேர்ந்திட்டா. ஐம்பது வருஷமாக அவ நினைவோட

வாழ்ந்திட்டன். இடையில 21 வருஷத்துக்கு முன்னம் கதிர்காமத்துக்குப் போயிருக்கக்குள்ள கந்தப்பெருமான் உன்ன என்னிடந் தந்தார். நீ என்னிட்ட வந்தபுறகு தான் குழந்தைப் பாசம் என்ன எண்டு உணச்ந்தன். நானும் ஒரு குழந்தையாகி உன்னோடு வாழ்ந்தன். இந்த உலகத்தில என்னைப்போல கொடுத்துவைச்ச வங்க வேறு எவரும் இல்ல எண்டுதான் நினைச்சன்.

ஆனந்தன்: அப்பா! உங்கட பாசத்தில பங்குபோட இப்ப அம்மாவும், அப்பாவும், தங்கையும் வந்துத்தாங்க எண்டு கவலப்படுறீங்களா?

அண்ணாவியார்: (வாஞ்சையோடு மகனின் தலைமுடியைத் தடவிக்கொண்டே) இல்ல மகன். சந்தோஷப்படுறன். பெரிய மனது படைச்சவங்க நீலகண்டம் ஐபாவும் அம்மாவும். நீலகண்டம் ஐயா பலதடவ இங்க வந்திருக்கார். அவர் எந்தச்சமயத்திலயும் என்ற மகனக் கூட்டித்துப் போறன் எண்டோ, என்ற பிள்ளய எனக்குத் தந்துவிடுங்க என்றோ என்னைக் கேட்கவில்லையே.

ஆனந்தன்: ஏன்...?

அண்ணாவியார்: நான் உன்மீது உயிரையே வச்சிருப்பத நல்லாக அறிந்திருந்தார். ஆனா உன் பிரிவால அவரும் அம்மாவும் எவ்வளவு வேதனையோட இருந்தாங்க என்கிறத விதானையார் ஐபா சொல்லித்தான் நான் அறிஞ்சுகொண்டன்.

ஆனந்தன்: என்னப்பத்தி விதானையார் ஐயாவுக்கு எப்படியப்பா தெரியும்?

அண்ணாவியார்; கதிர்காமத்தில வச்சி நீ எனக்கு கிடைச்சதும் இங்க வந்து முதலில விதானையார் ஐயாவுக்கு அறிவிச்சுப்போட்டுத்தான் உன்ன வைச்சி வளர்த்த நான். விதானையார் ஐயாவும் எல்லா இடமும் அறிவிச்சியிருந்தாரு.

ஆனந்தன்: அப்பிடியெண்டா அப்பா! அப்பா ஏன் இவ்வளவு நாளும் என்னப் பாக்க வரல்ல.

அண்ணாவியார்: இவ்வளவு நாளும் அவருக்குச் செய்தி கிடைக்கல்ல. எனக்கும் இதுக்கு முன்னம் அவரத் தெரி

யல்ல. சிவராத்திரி அண்டைக்கு அந்தச் சிவபெருமான் தான் அவர இங்க கொண்டுவந்து சேர்த்திருக்கார். இங்க வந்ததும் உன்னப் பார்த்ததும் அவர் உன்னப் பத்தி விதானையார் ஐயாட்ட விசாரிச்சிருக்கார்.

ஆனந்தன்: விதானையர் ஐயாட்ட விசாரிச்சது நல்லதாப் போச்சி இல்லாட்டப் பாவம் அவங்க.

அண்ணாவியார்: புது இடம் எப்படி மகன்?

ஆனந்தன்: அம்மா இரிக்கிற இடம் ஆண்டவன் இரிக்கிற ஆலயம் மாதிரித்தானேயப்பா.

அண்ணாவியார்: ஆலயம் மாதிரி இல்ல மகன். அம்மா இரிக்கிற இடம் ஆலயந்தான்.

ஆனந்தன்: அப்பா! அம்மாவும் அப்பாவும் தங்கச்சியும் என் மேல் உயிரையே வைச்சிருக்காங்க. பிரமாண்டமான பெரிய வங்களா குளிரூட்டப்பட்ட அறை. அங்கே அலங்காரக் கட்டிலில பட்டுத்துணி போர்த்த மென் பஞ்சு மெத்த அறைமுழுவதும் கம்மெண்ட சுகந்த வாசன. விதம்விதமான ருசியான உணவுகள். வடிவான நாகரிகமான உடுப்புகள், ரெலிவிஷன். றேடியோ எண்டு இன்னும் எவ்வளவோ வசதிகள்.

அண்ணாவியார்: நான் பெரிய மூடன் மகன். இந்தச் சுகங்ளெல்லாம் அனுபவிக்கவிடாம இவ்வளவு நாளும் நானல்லவா தடுத்து வெச்சிருந்தன்.

ஆனந்தன்: அப்பிடியெல்லாம் இல்லப்பா. நீங்க தந்த சுகம் அதுதான் இப்பவும் எண்ட நெஞ்சில நிறைஞ்சிரிக்கி. அந்த நறுமணம் கொடுக்கிற பட்டுமெத்தக் கட்டில் எனக்குக் கள்ளிமுள்ளாகக் குத்துறது. விதம் விதமான அறுசுவை உணவுகளெல்லாம் வேப்பங்காயாகக் கசக்கிறது. நவநாகரீக உடைகள் கூத்துக்குப் போடுற வேஷமாக இருக்கு ரெலிவிஷனில் பாக்கிற படங்களெல்லாம் நம்மட கூத்துப் பாக்கிறாப்போல ஆனந்தமாக இல்லையே.

அண்ணாவியார்: இதெல்லாம் நான் பாக்காத விஷயங்கள். நீ சொல்லு மகன்.

ஆனந்தன்: அப்பா! என்னதான் நாகரீகம் வளர்ந்தாலும் அது நம்மட பண்பாட்ட அணைத்துக்கொண்டுதான் வளரவேணும். இதப்பத்தியெல்லாம் நான் கதைச்சா அந்தக்காலத்தில ஆகாயவிமானம் இருந்துதா இல்லையே. இப்ப இருக்கு. அதுபோலதான் உலகம் முன்னேறி இருக்கு எண்டிறாங்க.

அண்ணாவியார்: உலகம் முன்னேறி இருக்கோ இல்லையோ ஆனா இப்ப மனிதரிர மனதில அமைதியும் சந்தோஷமும் இல்லையே. மனிதரெல்லாம் இப்ப பயந்து பயந்து செத்துக்கொண்டிருக்கான். அப்படியிருக்குள்ள எப்பிடி உலகம் முன்னேறி இருக்கு எண்டு சொல்லுறது. நான் சங்க இலக்கியத்தில படிச்சிருக்கன் புறநானூறில ஒரு பாடல் இருக்கு.

ஆனந்தன: என்ன பாடலப்பா அது. அத எனக்குச் சொல்லித் தரல்லயே நீங்க.

அண்ணாவியார்: மறந்து போயிற்றன்போல இரிக்கு. அந்தப் பாடல் இப்ப ஞாபகத்துக்குவருது சொல்லுறன். (சற்று யோசித்துவிட்டு)

''விசும்பின் வலவன் ஏவா வானவூர்தி...''

ஆனந்தன்: அப்படியெண்டா...?

அண்ணாவியார்: செலுத்துனர் இல்லாமலே பறக்கக்கூடிய ஆகாயவிமானம் என்று சொல்லலாம்.

ஆனந்தன்: அப்படியெண்டால் அந்தக்காலத்தில் செலுத்துனர் இருந்து செலுத்தக்கூடிய ஆகாயவிமானமும் இருந்திருக்கலாம்தானே.

அண்ணாவியார்: இருந்திருக்கும் இராமாயணத்தில புஷ்பக விமானம் என்று வருகுதில்லயா இப்ப இருக்கிற விமானங்களெல்லாம் இயந்திரத்தினால் செயல்படுகிறது. அப்ப இருந்த விமானம் மனிதனுடைய மனோ சக்தியால செயல்பட்டிருக்கு.

ஆனந்தன்: மனிதனுடைய மனதுக்கு அவ்வளவு சக்தி இருக்கா அப்பா!

அண்ணாவியார்: ஓம் மகன். மனத ஒரு நிலப்படுத்தி பிரார்த்தனை செய்கிறதால அப்பிடிச் சக்தியப்பெறலாம் எண்டு ஞானிகள் சொல்லியிருக்காங்க.

ஆனந்தன்: அப்பா இப்ப இருக்கிற புதுப்புது விஷயங்க ளெல்லாம் மனித மனதுக்கு அமைதியையும் ஆறுதலை யும் கொடுக்கல்ல. வீணான அழிவுகளையும் அனர்த் தங்களையும்தான் கொடுத்திருக்கு. அப்பா! நீங்க இருக் கிற இடந்தான் எனக்கு ஆனந்தம். இதுதான் எனக்குச் சொர்க்கம்.

அண்ணாவியார்: மகன்! சொர்க்கம் என்கிறது அவரவர் மன தப் பொறுத்துத்தான் அமைகிறது. நரகத்தச் சொர்க்க மாக்கும் வல்லமையும் சொர்க்கத்த நரகமாக்கும் வல்ல மையும் அவரவரிர மனதில்தான் இருக்கு. வளர்த்த பாசத்தவிடப் பெற்ற பாசம்தான் எப்போதும் உசத்தி நீ மகன் அப்பா அம்மாவேடேதான் இருக்கவேணும்.

ஆனந்தன்: அப்பா! எனக்குப் புத்திதெரிஞ்ச காலமிருந்து நீங்கதானே அப்பா நான் கும்பிடுற அப்பாவாகவும் அம்மாவாகவும் இருக்கிறீங்க. உங்களத் தனிய உட்டுத்து என்னால அங்க இரிக்கமுடியுமா அப்பா. நீங்களும் என்னோட அங்க வந்துடுங்க. உங்களக் கூட்டிக்கொண்டு போகத்தான் வந்தநான்.

அண்ணாவியார்: மகன் இந்த இடத்த விட்டுப்போட்டு இந்தப் பயிர்பச்சைகளெல்லாம் வாட விட்டுப்போட்டு அங்க என்னால எப்பிடி மகன் வரமுடியும். பாத்தாயா! அம்மா எண்டு கத்திக்கொண்டு கன்றுக்குட்டிகள் என் னச் சுத்திச்சுத்தி வந்து துள்ளி விளையாடுறத. இந்த ஜீவன்களையெல்லாம் என்னால எப்பிடி மகன் பிரிஞ் சிருக்கமுடியும்.

ஆனந்தன்: அப்பா! இந்தச் சீவன்களையெம்லாம் அங்க கூட்டித்து வரலாம்தானே அப்பா.

அண்ணாவியார்: (மகனை ஆதரவோடு தடவிக்கொடுத்து) மகன்! நீ வீட்டுக்குப்போ மகன் அம்மா அப்பா இருக் கிற அந்த இடம்தான் உனக்குச் சொந்த இடம். இது வும் உன்ர இடம்தான். இதயும் உன் பேருக்குத்தான் எழுதிவைச்சிருக்கன். இங்கயும் அடிக்கடிவந்து பார்த்துக் கொள். அம்மா அப்பா இருக்கிற இடம்தான் உனக்குச் சொர்க்கம். அவங்களுக்குத் தலைமகன் நீ. அவங்கட ஆசைக்கொரு ஆண்மகன் நீ. அவங்களோட இருந்து அவங்களக் கண்கலங்காமப் பாத்துக்கொள்ளுறதுதான்

உன்ர கடமை. அதுதான் ...(கண்கலங்கி, நாத்தழு தழுக்க...) அதுதான் இந்த அப்பாவுக்கு நீ செய்யிற பெரிய உதவி.

ஆனந்தன்: (அழுதுகொண்டு) அப்பா...! அப்பா..!

அண்ணாவியார்: (வாஞ்சையோடு) மகனைத் தழுவி அணைத்துக்கொண்டு வளவின் எல்லைக் கடப்பு வரையும் அழைத்துவருகிறார்.) போய்வா! மகனே! போய்வா!...

(ஆனந்தன் தன் தந்தையின் காலடியில் விழுந்து வணங்கி கண்ணீர்கொண்டு அவரின் புனிதமான பாதங்களை அபிஷேகம் செய்கிறான். மகனின் உச்சந்தலையைத் தன்னிரு கைகளாலும் தடவிக்கொண்டே அன்றலர்ந்த தாமரையாக முகம்மலர்ந்து சிரிக்கிறார் அண்ணாவியார்.)

குரல்: (திருஞானசம்பந்தர் தேவாரம்)

''வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாது என்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக் கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன்று -
எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே''

— திரை —

——— மங்களம் ———



விமர்சனம்

# இதிகாசக் கதைகளுக்கு எப்போதும் "மௌசு" உண்டு

## இதனை நிரூபித்தது "நீறு பூத்த நெருப்பு"

சினிமாவிலும் சரி, நாடகத்திலும் சரி புராண இதிகாசக் கதைகளுக்கு எப்போதும் ஒரு "மௌசு" இருந்துகொண்டு வருகிறது. எத்தனை தடவை படமாக வந்தாலும், எத்தனை தடவை நாடகமாகப் போட்டாலும், எத்தனை தடவை கதையாகக் கேட்டாலும் மக்கள் அலுக்காது ரசிக்கின்ற ஒரு தனித்தன்மை இக் கதைகளுக்கு இருக்கின்றது.

சமீபத்தில் ஆரையம்பதியில் மேடையேறிய ஆரையூர் இளவலின் "நீறு பூத்த நெருப்பு" இக் கூற்றை நிரூபிக்கின்றது.

மகாபாரதத்தில் இடம்பெறும் துருபதன் – துரோணர் சபதமும், திட்டத்துய்மன் துரோணரைப் பாரதப் போரில் பழிவாங்குவதும் இக் கதையில் சித்தரிக்கப்படுகின்றன. இந்த நீண்ட கதைச் சம்பவத்தை, ஒரு சில காட்சிகளில் இறுக்கமாக அமைத்து கதையில் விறுவிறுப்பும் வேகமும் இழையோட கவிதையழகு சொட்டும் உரையாடலில், மிக நயமாகவும் சிறப்பாகவும் நாடகத்தை அமைத்திருந்தார் நாடக ஆசிரியர்.

நாடக ஆரம்பத்தில் விஷ்ணுவும் இலக்குமியும் திருப்பாற்கடலில், ஆதிசேஷனில் அமர்ந்து உரையாடும் காட்சி பிரமாண்டமானதாகவும், பிரமிப்பூட்டுவதாகவும் அமைந்திருந்தது. நாட

கங்களில் இவ்வளவு பெரிய ''செட்'' அமைப்பது சிரமசாத்தியமானது.

இந்த நாடகத்தின் சிறப்புக்குக் கவர்ச்சிகர மான ஆடை அலங்காரமும், ஒப்பனையும் ஒரு முக்கிய காரணமாகும். ஒப்பனைக் கலைஞர்க ளான சிவானந்தராசா, அரசரெத்தினம் ஆகி யோர் பாராட்டுக்கு உரியவர்களே.

நடிகர்களில் துரோணர் பாத்திரமேற்ற கணேசானந்தம், துரியோதனன் கா. கனகலிங் கம், துருபதன் சா. சிவபாக்கியராசா ஆகியோர் நன்றாக நடித்தனர். துருபதனும், துரோணரும் மோதிக்கொள்ளும் காட்சிகள் குறிப்பிடத்தக்கன. துரியோதனனுக்கும் இந்த நாடகத்தில் பெரும் பங்குண்டு. தோல்விக்குமேல் தோல்வி ஏற்பட்ட போதிலும் சமாதானத்துக்கு உடன்படாது. போர் வெறி பிடித்து அரற்றும் துரியோதனன் பாத்திரத்தை நன்றாகச் சித்தரித்தார் கனக லிங்கம்.

கல்லடி - உப்போடை வளர்மதி இலக்கிய மன்றம் தயாரித்தளித்த இந்நாடகத்தின் கதை, வசனம், பாடல்கள், டைரக்ஷன் யாவும் ''ஆரையூர் இளவல்'' அவர்களின் பொறுப் பாகும்.

— மணி.

தினபதி — 18-05-1972.

"தெய்வங்கள் வாழும் பூமி" சமூக நாடகத்தில் அறிமுகவுரையாற்றும் "ஆரையூர் இளவல்"



இடம் : சுவாமி விபுலாநந்த மணிமண்டபம்,
மட். கல்லடி-உப்போடை.
காலம் : 07-08-1982 – மாலை.

"ஆரையூர் இளவல்" – இவர் இயல், இசை, நாடகம் என்ற துறையினுள் முத்தமிழுக்கும் தொண்டாற்றுபவர். நாடகத் துறையினுள் மேம்பட்டவர். உண்மை, அழகு, நன்மை என்ற தன்மையில் உயர்தனிச் செந்தமிழ் அன்னைக்குப் பணியாற்று பவர். மக்கள் சேவையே தனிச் சேவையான தமிழ்த்தொண்டு செய்பவர். வாழ்த்துகின்றோம், போற்றுகின்றோம்.

மகாவித்துவான், கலாசூரி F. X. C. நடராசா.

"விபுலாநந்தர் வாழ்கின்றார்" நூலில் இருந்து.

செனி. ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.
Composed by S. Singarajah.